
# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்

22



கலை இலக்கிய மாத சஞ்சிகை

ஆடி – 2010

60/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நதியினுள்ளே...

## கவிதைகள்

யோகி
ச.தர்சினி
கண.மகேஸ்வரன்
ர.விஜிதா
மருதம் கேதீஸ்
இ.ஜீவகாருண்யன்

## சிறுகதைகள்

ஆசை எட்வேட்
பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை
ஆனந்தி
ம.நிரேஸ்குமார்

## கட்டுரைகள்

க.பரணீதரன்
யுகாயினி
அருட்தந்தை இராசேந்திரம் ஸ்ரலின்
தி.ஞானசேகரன்
ச.முருகானந்தன்
யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

## குறுநாவல்

ந.சத்தியபாலன்

## நூல் அறிமுகக் குறிப்பு

யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

## கலை இலக்கிய நிகழ்வு

அட்டைப்படம் – நன்றி இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி

2010 ஆடி இதழ் - 22

**பிரதம ஆசிரியர்**
கலாமணி பரணீதரன்

**துணை ஆசிரியர்**
வெற்றிவேல் துஷ்யந்தன்

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் குழு:**
திரு.தெணியான்
திரு.கி.நடராஜா

**தொலைபேசி** : 0775991949
0778134236
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**Fax : 0212263206**

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
COMMERCIAL - Nelliady Branch
A/CNo.8108021808
CCEYLKLY

இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள். பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும் படைப்புகளைச் செம்மைப்படுத்த ஆசிரியருக்கு உரிமை உண்டு.

- *ஆசிரியர்*

## ஜீவநதி
(கலை இலக்கிய மாத சஞ்சிகை)

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
- பாரதிதாசன்-

# 'ஜீவநதி'யின் பதிப்பு முயற்சிகள்

'ஜீவநதி'யை இரு மாத சஞ்சிகையாக ஆரம்பித்து, பின் மாதாந்த சஞ்சிகையாக வெளியீடு செய்ய விரும்பியபோது, இம்முயற்சி பற்றி அறிந்த சில நண்பர்களும் 'ஜீவநதி'யின் விசுவாசிகளும் எமது முயற்சிக்கு உற்சாகமாக வரவேற்பு வழங்கிய அதே வேளை இம்முயற்சியில் எதிர்நோக்க வேண்டிய சவால்கள், அச்சுறுத்தல்கள் குறித்தும் ஆரோக்கியமாகவே எடுத்துரைத்தனர்.

இக்கருத்துக்களை எல்லாம் 'ஜீவநதி' கவனமாக உள்வாங்கிக் கொண்டது. இதேவேளை, 'ஜீவநதி'யை 'குண்டுச்சட்டிக்குள் குதிரையோட வைக்கும்' எண்ணத்துடனும் சிலர் அணுகினர். 'ஜீவநதி'யில் தாம் எழுதுபவற்றை எல்லாம் பிரசுரித்துவிடலாம் என்ற அவர்களின் எண்ணம் கைகூடாமற் போனமைக்கு, அவர்களின் எழுத்துகள் 'ஜீவநதி'யில் பிரசுரமாவதற்கு வேண்டிய தகுதிப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை என்பதே உண்மையான காரணம். 'ஜீவநதி'யில் எழுத்தாக்கம் ஒன்று பிரசுரமாவதற்கு சில நியமங்கள் உண்டு. அந்நியமங்களைத் தொடர்ந்து கடைப் பிடித்து வருவதனால் தான் 'ஜீவநதி'யின் தளம் இன்று பரந்து விரிந்து வருகிறது. இதுவே ஜீவநதியின் பலமும் ஆகும்.

'ஜீவநதி'யின் உண்மையான அபிமானிகளின் ஆதரவு தான், ஜீவநதியை பதிப்பு முயற்சி நோக்கி மறுகாலடி எடுத்து வைக்கத் தூண்டியது. பாட்டுத் திறத்தாலே (சிறுகதைத் தொகுதி), மனதில் உறுதி வேண்டும் (சிறுகதைத் தொகுதி), நதியில் விளையாடி... (60 கவிஞர்களின் கவிதைத் தொகுப்பு நூல்), வெறிச்சோடும் மனங்கள் (கவிதைத் தொகுதி) என நான்கு நூல்களை ஜீவநதி இதுவரை வெளியிட்டு வைத்துள்ளது. இது ஜீவநதியின் சக்திக்கு அப்பாற் பட்டது தான். ஆனால் 'ஜீவநதி'யின் ஆர்வலர்கள் தந்த உற்சாகம் தான் இதனைச் சாத்தியமாக்கிற்று. ஜீவநதியின் உண்மையான விசுவாசிகளும் அபிமானிகளும் ஆர்வலர்களும் இருக்கும்வரை ஜீவநதி இன்னும் சாதிக்கும்.

- *ஆசிரியர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியம் படும் பாடு...

**க.பரணீதரன்**

ஈழத்து இலக்கியமானது ஆழமான வரலாற்றுப் பின்னணியைக் கொண்டதாகக் காணப் படுகின்றது. 'இலக்கியம், காலத்தின் கண்ணாடி' என்பார்கள். அந்த வகையில் கால ஓட்டத்திற்கும், காலமாற்றத்திற்கும், ஏற்ற படியாக இலக்கிய படைப்பாளிகளின் போக்கும் மாறுபாடு அடையும். ஈழத்துப் படைபாளிகளின் படைப்புகள் சிறப்பான நிலையை அடைந்து செல்கின்ற இத்தருணத்தில், அண்மைக்காலமாக வெளிவரும் சில படைப்புகள் இலக்கியமாக கொள்ளத் தகுமா என ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இலக்கியத்தை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் இன்றைய சில படைப்புக்களைப் பற்றிய பொதுப்படையான கருத்துக்களைக் கூறுவதாக இக்கட்டுரை அமைகின்றதேயன்றி குறிப்பான எந்தப் படைப்பாளி மீதும் வசைபாடுவது நோக்கமன்று. இலக்கிய வளர்ச்சி நோக்கிய செல்நெறிக்கான சில பரிந்துரைகளையும் இக்கட்டுரை தருகின்றது.

இலக்கியமானது தான் கூற வந்த கருத்தின் ஊடாக மனிதனை, சமூகத்தை நல்வழிப்படுத்து வதாக அமைதல் வேண்டும். அதாவது சமூகப் பயன்பாடு உடைய படைப்புக்களாகவும், வாசகனி டத்து நல் உணர்வை விதைத்து அவனை நேரிய சிந்தனைகளுடன் வழிப்படுத்தக் கூடியதாகவும் அமைதல் அவசியமானது. அவ்வாறான படைப்புக் கள் பல ஈழத்தில் வெளிவந்திருக்கின்றன. ஆனால் அண்மைக்காலமாக இலக்கிய போக்கில் சில மாற்றங்கள் ஏற்பட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மாற்றம் என்பது நன்மை யளிக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். ஆனால் அண்மைக்கால மாற்றங்கள் சில இலக்கிய வளர்ச்சியில் ஆரோக்கியமானவையாகத் தெரிய வில்லை. இவை வாசகனிடத்து கசப்புணர்வையும் மறைச்சிந்தனைப்போக்கையும் உண்டு பண்ணக் கூடிய விதமாக அமைகின்றன. அந்த வகையில் இன்றைய சில படைப்புக்களில் பொதுப்படையான போக்குகளை விரிவாக நோக்கலாம் இப்போக்குகளாவன :

1) பெயருக்காக எழுதுதல்
2) பாலியல் அந்தரங்கங்களை வெளிப் படையாக எழுதுதல்
3) பெண் உடலை, அங்கங்களை உளக் கிளர்ச்சிகளைத் தோற்றுவித்தலுக்காக ஆபாசமாக விபரித்தல்
4) தமது சொந்தக் கோபதாபங்களை எழுதுதல்
5) பொருள் விளங்காது எழுதுதல்
6) புதிய பாணி என்ற பெயரில் படைப்புகளின் அமைப்பில் மாற்றத்தை உண்டு பண்ணல்.
7) இலக்கிய முன்னோடிகளைத் தாக்கும் வகையில் எழுதுதல்
8) தனக்கு வேண்டப்படாதவரைப் பற்றி இழிவாக எழுதுதல்
9) இலக்கிய அறிவுக் குழப்பம் உள்ள வகையில் எழுதுதல்

### 1) பொருள் விளங்காது எழுதுதல்

சாதாரண மக்களால் பழைய இலக்கியங் களின் பொருளை விளங்கிக் கொள்வது கடின மாகவே காணப்பட்டது. அக்காலத்து இலக்கியங் களை குறிப்பிட்ட தொகையினரே கற்று வந்தனர். அவற்றை பாமரர் படிப்பதில்லை. உயர்ந்த கல்வி யாளர்களே அவற்றைக் கற்றனர். ஆனால் இன்றைய எழுத்துக்களைப் பலரும் வாசிக்கின்றனர். இன்று எழுத்தாளர்கள் சிலர் புதிய மொழி, புதியநடை, புதியவடிவம் என்ற வகையில் இலக்கியங்களை படைக்கின்றனர். அவை வரவேற்கத்தக்கவை யாகவும் சிறந்த படைப்புக்களாகவும் வெளி வருகின்றன. ஆனால் சில படைப்புகள் எந்த வித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்த்தமுமின்றி புதிய மொழிநடையை கையாள்கின்றன. இது சாதாரண வாசகருக்கு புரிதல் கடினத்தை ஏற்படுத்துகிறது. பெரும்பாலான கவிதைகளில் அதன் மொழிநடையே கவிதைத் தரத்தைக் குறைப்பதாய் உள்ளது.

எழுத்து மிகவும் இலகு மொழியில் அமைய வேண்டும். ஓரளவாயினும் சாதாரண மக்களைச் சென்றடையும் மொழியை பிரயோகிக்க வேண்டும். இலக்கியம் என்பது மக்களுக்காக படைப்பது. தமது சுய வளர்ச்சிக்காக மட்டும் அல்ல எனவே சமுகத்திற்கு விளங்கக்கூடிய வகையில் எழுதுதல் வேண்டும். சாதாரண கற்றல் மூலம் புரிந்து கொள்ளக் கூடியமொழி நடைப் பிரயோகம் வாசகனை ஈர்க்கும்.

### 2)புதியபாணி என்ற பெயரில் படைப்புகளின் அமைப்பில் மாற்றத்தை உண்டு பண்ணல்

இன்று புதுவகையான பாணியில் சிறுகதைகள்,கவிதைகள் என்பன எழுதப்படுகின்றன. ஆனால் இது எவ்வளவு தூரம் மனிதனை சென்றடைகிறது என்பது கேள்விக் குறியாக உள்ளது? எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய வடிவமே இலக்கியமாகக் கொள்ளப்படும். ஆனால் குறிப்பிட்ட ஒருவர் ஒன்றை எழுதிவிட்டு இதுதான் சிறுகதை, இதுதான் கவிதை, என்று கூறினால் அதை ஏற்க முடியுமா? "இருபத்தி ஐந்து வசனங்களை எழுதிவிட்டு இது தான் சிறுகதை என நான் கூறினால் அதை இச்சமூகம் ஏற்றுக் கொள்ளுமா? கருப்பொருள், சொல்லப்படும் விதம், மொழிநடை என்பன மாறுபாடு அடையலாமே ஒழிய வடிவத்தை மாற்றுதல் கூடாது. தனது நண்பர் வட்டத்தால் மட்டும் ஏற்றுக் கொள்ளப்பட்ட வடிவத்தை படைப்பதனால் என்ன பயன்? வடிவம் என்பது என்றும் ஒன்று தான்.

### 3) இலக்கிய அறிவுக் குழப்பம் உள்ள வகையில் எழுதுதல்

முறைசார் கல்வி கற்றவர்கள்தான் எழுத வேண்டும் என்பதில்லை. ஏனெனில் ஈழத்தில் சிறந்த படைப்புகளைத் தந்த படைப்பாளிகள் ஒருசாரார் முறைசார் கல்வியைத் தொடர்ந்து பெற்றவர்கள் அல்லர். ஆனாலும் அவர்கள் இலக்கியத்தை நன்கு விளங்கிக் கொண்டு தமது படைப்புகளைத் தந்தனர். வாசிப்பினூடாக தம் மொழிசார்ந்த இலக்கியங்களை மட்டுமன்றி பிறமொழி இலக்கியங்களையும் அவற்றின் போக்கையும் அறிந்து இலக்கிய கோட்பாடுகளைக் கூட அறிய முயற்சித்துள்ளார்கள். இவர்கள் பாராட்டுக்குரியவர்கள். சிறந்த இலக்கியம் படைக்க விழைவோர், இலக்கியக் கோட்பாடுகளை வரன் முறையாக அறிந்து வைத்திருத்தல் அவசியம். ஆனால் இன்றைய எழுத்தாளர்கள் சிலர் இலக்கியக் கோட்பாடுகள் பற்றி எந்தவித தெளிவேதுமின்றி, கட்டுக்கோப்பு எதுவும் இன்றி தடம்மாறிச் செல்வதைக் காண்கின்றோம்.

இன்று சிலர் தமது படைப்புகளைப் பற்றிய தெளிவில்லாது எழுதிச் செல்கின்ற அதேவேளை இன்னுஞ்சிலர் அவற்றை புதிய 'இஸங்'களுக்குள் அடக்கி கதாகலாட்சேபம் செய்ய முனைகின்றனர். பாவம்! இந்த இஸங்கள் பற்றி எதுவுமே அறியாத அந்தப் படைப்பாளிகள் தமது படைப்புகளை உந்நதங்களாக கருதிச் சுயபுகழ்ச்சியில் மயங்கிக் கிடக்கிறார்கள்.

### 4) பெயருக்காக எழுதுதல்

மனிதனாகப் பிறந்த அனைவருக்கும் ஆசைகள் அதிகம் உண்டு. தனது பெயர் பத்திரிகை ஒன்றிலோ அல்லது சஞ்சிகை ஒன்றிலோ வெளிவருகின்றபோது அவன்(ள்) மகிழ்ச்சியின் உச்சத்துக்கே சென்று விடுகின்றான்(ள்). ஈழத்துப் படைப்பாளிகள் பலரின் பெயர்கள் அவர்களது படைப்பின் தரம், சித்திரிப்பு, படைப்பாற்றல் திறன் என்பன காரணமாக இன்றும் எமது நெஞ்சில் நிறைந்து உள்ளன. இவர்கள் 'நல்ல இலக்கியம் படைக்கவேண்டும். சமூகப் பயன்பாடு உடையதாக இலக்கியம் மிளிர வேண்டும்' என்ற வகையில் செயற்பட்டு வெற்றி கண்டனர்.

ஆனால் இன்று சில 'எழுத்தாளர்கள்' தமது பெயர் பத்திரிகையில், சஞ்சிகையில் வரவேண்டும் என்பதை மட்டும் நோக்காகக் கொண்டு மட்டரகமான இலக்கியங்களைப் படைத்து வருகின்றனர். இவர்களது எழுத்துக்களில் எந்த விதமான பயன்பாடு மிக்க கருத்துக்களும் காணப்படுவதில்லை. முன்னைய படைப்பாளி சொன்ன விடயம் ஒன்றினை எடுத்துக்கூறி மேற்கோள்களை சாட்சிக்கு இழுத்து வெறும் எடுத்துக் காட்டுக்களைக் கூறும் எழுத்துக்களாக அவை காணப்படுகின்றன. இவ்வாறான படைப்புகள் வலுவிழந்த படைப்புக்களாகவும், மட்டரகமான கருத்துக்களைக் காவி வருபவையாகவும் காணப்படுகின்றன. தமது ஆக்கம் ஒன்றை பத்திரிகையில் அல்லது சஞ்சிகையில் இடம் பெறச் செய்ய வேண்டும் என்பதற்காக பத்திரிகையாளரையும் சஞ்சிகையாளரையும் தொலைபேசி மூலமும், கடிதம் மூலமும் தொந்தரவு செய்த வண்ணம் இருக்கின்றனர்.ஆனால் தமது படைப்பின் தரம் தெரிந்து கொண்ட தன் காரணமாக தமது பெயர் வரவேண்டும் என்பதை மட்டும் நோக்காகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டே இவ்வாறு செயற்படு கின்றனர். தகுதியான படைப்பாயின் எந்த சிபாரிசும் தேவை இல்லை. தரமான படைப்பு கட்டாயம் பிரசுரம் ஆகும்.

ஒரு சஞ்சிகை தரமில்லை என திருப்பி அனுப்பிய சிறுகதையை அல்லது கவிதையை இன்னொரு சஞ்சிகைக்கு அனுப்பி பிரசுரிக்கச் செய்து தமது முயற்சியில் வெற்றி கண்டு புகழாங்கிதம் கொள்ளும் போக்கும் காணப்படுகின்றது. இவை அனைத்துமே வெறும் பெயருக்காக எழுதும் படைப்புக்களாகவே காணப்படுகின்றன. படைப்பாளிகள் தமது ஆக்கங்களை தாமே மீள் பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும்.

### 5) பாலியல் அந்தரங்கங்களை வெளிப் படையாக எழுதுதல்.

பாலியலை அடிப்படையாகக் கொண்ட படைப்புகள் மக்களிடத்து பாலியல் ரீதியான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். முறையான பாலியல் கல்வி அற்ற எமது நாட்டில் இவ்வாறான படைப்புகள் மக்களை வழிப்படுத்துவனவாக அமைய வேண்டும். பாலியல் சார்ந்த விடயங்களை மிகவும் நாசூக்காகச் சொல்லி சமூக சீரழிவுகளை உணர்த்திய படைப்புகள் பல உள்ளன. ஆனால் இன்று சில படைப்பாளிகள் தமது பாலியல் வக்கிரங்களை, பாலியல் பற்றி தாம் கொண்ட எண்ணங்களை, மிகவும் ஆபாசமாக வாசிப்பவர்(ள்) அருவருக்க தக்க வகையில் எழுதுகின்றனர். மனிதர் இடத்து தீய சிந்தனைகளை உருவாக்கத்தக்க வகையில் இவர்களின் எழுத்துக்கள் அமைகின்றன. 'மனிதர்கள் எதிர்பாலர் உடன் திருமணம் என்ற எல்லைக்குள்ளே பாலின்பம் பெறுதலை பெரும்பாலான கலாச்சாரங்கள் ஏற்றுக் கொண்டுள்ளன.' ஏனெனில் பாலினம் என்பது பரஸ்பர அன்பை பரிமாறிக் கொள்ளும் கருவியாகவும், அர்ப்பணிப் போடு ஒருவர் மற்றவருக்கு உடல், உளரீதியான கையளித்தலையும் நோக்காக கொண்டது. ஆனால் பாலியல் பிறழ்வு நடத்தைகளை இலக்கியமாக்கி, கொச்சையாக அவற்றை எழுதிச் செல்லும் போக்கே இன்றைய படைப்புக்கள் சிலவற்றில் காணக் கிடக்கின்றது.

இந்த எழுத்துக்கள் பெரும்பாலும் பாலியல் ரீதியான கிளர்ச்சிகளையே உண்டு பண்ணுகின்றன. பாலியல் உறுப்புகளை, பாலியல்சார் சொற்பதங்களை பொருத்தமற்ற வகையில் கவிதைகளில் சிலர் குறிப்பிடும் போது, அப்படைப்பின் நோக்கமே திசைமாறிப் போய் விடுகின்றது. பாலியல்சார் பிரச்சினைகளை இலக்கியமாக்க முற்படும் படைப்பாளிகள் மிகுந்த கவனம் எடுப்பது அவசியமாகும். அத்தோடு தமக்கு உள்ள பாலியல் கோளாறுகளை தமது பாலியல் நடத்தைப் பிறழ்வுகளை மற்றவர்களுக்கு உள்ளது போல் வர்ணனை செய்து மற்றவரைத் தாக்கும் வகையில் எழுதும் போக்கும் இளம் படைப் பாளிகளிடம் காணப்படுகின்றது.

### 6) பெண் உடலை, அங்கங்களை உளக் கிளர்ச்சிகளைத் தோற்றுவித்தலுக்காக ஆபாசமாக விபரித்தல்

சங்க இலக்கியம் முதல் இன்றைய இலக்கியம் வரை பெரும்பாலான இலக்கியங்கள் பெண்ணைப் பாடிச் சென்றுள்ளன. இவற்றில் பெண் உடலை எழுதிச் செல்லலும் காணப்படுகிறது. இது இலக்கியங்களில் பொருத்தமான இடத்தில் பொருத்தமான வகையில் இடம் பெறுதல் குறித்து கவனத்தில் கொள்ளப்பட்டது. ஆனால் இன்று பெண் விடுதலை என்ற பெயரில் பெண்ணின் உடலை வர்ணிக்கும் படைப்புகளாகவும் பெரும்பாலான கவிதைகள் ஆண் - பெண் உறவு களை மையப்படுத்தி பெண் உறுப்புகளை ஆபாச மாக எழுதும் படைப்புகளாக வெளிவருகின்றன. பெண் உறுப்புகளை ஆபாசமாக விபரணம் செய்வதன் ஊடாக இவர்கள் தமது படைப்புகள் மூலமாக படைத்து இளைய சமுதாயத்தை பாழாக்கிய வண்ணம் உள்ளனர். அண்மையில் இந்திய பெண் எழுத்தாளர் ஒருவர் தனது கவிதைத் தொகுதிக்கு 'முலை' என்று பெயரிட்டிருந்தார். எனவே இன்று நாம் எங்கு பயணிக்கின்றோம் என்பதற்கு நாம் விடை காண வேண்டியது அவசியமாகும். பிரபல எழுத்தாளர்கள் சிலர் கதைகள் அனைத்திலும் பெண்ணின் உடலை ஒரே மாதிரி ஆபாசமாக வர்ணிக்கும் போக்கு காணப்படுகின்றது. இவர்கள் இதில் கூடிய கவனம் எடுத்து இளைய சமூதாயத்திற்கு வழிகாட்டியாக அமைதல் அவசியம்.

### 7) தமது சொந்த கோபதாபங்களை எழுதுதல்

இலக்கியத்தில் வரும் சர்ச்சைகள் ஆக்க பூர்வமானவையாக இருக்க வேண்டும், எழுத்தாளர்களை ஊக்குவிக்க வேண்டும். ஆனால் அண்மைக் காலமாக சில எழுத்தாளர்கள் தமது படைப்புகளில் சொந்தக் கோபதாபங்களை எழுதுவதும், தமக்கு வேண்டப்படாத கோட்பாட்டைப் பின்பற்றுவர்களைத் தாக்கி எழுதுவதும், சின்ன சின்ன பிரச்சினைகளை பெரிதுபடுத்திக்காட்டி எழுதும் போக்கும் காணப்படுகின்றது. சிறுகதைகள், கவிதைகள் ஊடாக தமக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டப்படாத பாடசாலைச் சமூகத்தை தாக்கி எழுது வதும், தமது ஊர்ப்பிரச்சினைகளை எழுது வதும், தன் மகளை அல்லது மகனை பாடசாலை ஆசிரியர் பாராட்சம் காட்டுகிறார் என தனிப்பட்ட தாக்குதல் நிகழ்த்தும் வகையில் எழுதுவதும், தமது அலுவல கத்தில் உள்ள சிறு பிரச்சினைகளை பெரிதாக எழுது வதும் இன்று காணப்படுகின்றது. இவர்கள் ஒரு குறுகிய சிந்தனையுடன் செயற்படுகின்றனர். இப் படைப்புகள் இலக்கியத்தை ஒரு குறுகிய பரப்பில் அடக்கி விட முயல்கின்றன. இவ்வாறான ஆக்கங் களை பிரசுரிக்கும் போது பத்திரிகை, சஞ்சிகை ஆசிரியர்கள் கூடிய கவனம் எடுக்க வேண்டியது அவசியம். பிழைகளை மட்டும் சுட்டிக் காட்டி எழுது வதை விட்டு ஆக்கபூர்வமாக பிரச்சினையை தீர்ப்பதற்குரிய வழிமுறையை கூறும் வகையில் எழுதுதல் வேண்டும்.

**8) இலக்கிய முன்னோடிகளைத் தாக்கும் வகையில் எழுதுதல்**

ஒவ்வொரு இலக்கியவாதியும் தனக்கென சுயமான கருத்தைக் கொண்டுள்ளான். அவனது கருத்துக்கள் அனைத்தும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பது இலக்கிய உலகில் கட்டாயம் இல்லை. ஆனால் ஒவ்வொருவரும் ஏதோவொரு கருத்தியலின் அடிப்படையிலேயே இலக்கியம் படைக்கின்றனர். அவர்கள் தமது எழுத்துக்களில் ஏதோ ஒரு கலை அம்சத்தையேனும் வெளிப்படுத்த முனைகின்றனர். மூத்த எழுத்தாளர்கள் பலர் தமது கருத்தியல் தளத்தில் நின்றே இலக்கியம் படைத்தனர். ஆனால் இன்று மூத்த எழுத்தாளர்களைத் தாக்குவதும் காலம் சென்ற பேராசிரியர்களின் கருத்துக்களை பழிப்பதும், குறைகாண்பதும் இளம் எழுத்தாளர்களின் எழுத்தில் அதிகரித்து வருகின்றது. தன் கருத்தை நேர்மயமான வகையில் வெளிப் படுத்துவதை விடுத்து இலக்கியத்தாக்குதல் செய்முறைகளில் ஈடுபடுகின்றனர். இலக்கியவாதி களின் நல்ல பங்களிப்பை எழுதுவதே உயர்ந்த பண்பு. இதை அனைவரும் கடைப்பிடிப்பதே தரமான இலக்கியங்களை உருவாக்க வழிகோலும்.

**9) தனக்கு வேண்டப்படாதவரைப் பற்றி இழிவாக எழுதுதல்**

சாதாரணமாக நிகழும் வாய்த்தர்க்கம் போல சில படைப்புகள் வெளிவருகின்றன. தனது குடும்பப் பகைமை, உத்தியோக இடத்தில் உள்ள பகைமை, உறவுப்பகைமை, பாடசாலை மீதுள்ள பகைமை போன்றவற்றை தனது கவிதைகளிலும் கட்டுரை களிலும் சிறுகதைகளிலும் எழுதுவதன் மூலம் சிறிய பிரச்சினைகளை பூதாகரமாக்க முயல்வதையும் காண்கின்றோம். கவிதைகள் வழியே தனிமனிதத் தாக்குதல்களும் இடம் பெறுகின்றன. இவற்றை விட காதலைப் பற்றி கொச்சையாக எழுதி புத்தகமாக்கி வெளியிடுதலையும் சிலர் செய்கின்றனர்.

தொகுத்து நோக்குகின்றபோது ஈழத்து இலக்கியம் ஆனது இன்னும் முன்னேற வேண்டும். அதை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்லும் இலக்கியங்கள் தவிர்க்கப்படவேண்டும். சமுதாய உயர்ச்சி நோக்குடனான இலக்கியங்கள் வெளிவர வேண்டும். நல்ல படைப்புகள் வெளிவரவேண்டும் இலக்கியம் வளம் பெறவேண்டும்.

# காகிதப் பூக்கள்

*துருவேறிய பூட்டுக்கள் சிதறியதாலும்*
*நித்திய சவால்களுக்கு முன் கைநழுவி*
*ஆடைகள் அவிழ்ந்து வீழ்ந்ததாலும்*
*தேவருலகத் தருணங்கள் அவ்வப்போது*
*பூமியிற் சித்தித்தாலும் பிரசவமானவை*

*அநாதைக் கிராமத்தின் அன்புகாய்ந்த*
*தெருக்களில்*
*நிர்வாணமணிந்து நிற்கின்றன.*

*திருச்சபைகளுக்குள் மறுதலிக்கப்பட்டு,*
*அனற்காற்றில் அலைக்கழிக்கப்படும்*
*இவைகள்*
*சிலுவையிலிருந்து பிடுங்கப்பட்ட கரங்களால்*
*தேனீக்களை அழைக்கின்றன.*

*ஈரம்பெய்யச் சலிக்கிறது காலம்*
*பன்மை உதயங்களுக்கப்பாலும்*
*வாசங் கொள்ளாதோ இவை?*

**– யோகி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ந வ நா க ரி க ம் வே ண் டா ம்

என் அன்னமே!
பெண் அன்னமே!!
காதல் உறவின்
கதை சொல்லும்
கற்காலம் தொடக்கம்
கம்பியூட்டர் கல்வியின்
கரம் ஓங்கும் தற்காலம் வரை
நீங்கள் சாதித்தவர்கள்!
சரித்திரம் படைத்தவர்கள்!
பாவைகளும் புதுமைகளும்
நீங்கள்தான்!
பார்போற்றும் பத்தினிகளாய்
பவனிவருபவர்களும் நீங்கள் தான்!
உங்களின்
தேவைகள்...
பிரசன்னமாகி[illegible]...
ஊக்கங்களி[illegible]
குடும்பத்[illegible]ந்து
விஞ்ஞான[illegible] உலகம் வரை
அவசி[illegible] விட்டது
இதனை[illegible] அறிந்து கொள்ளாது
நுகர்[illegible] வலைக்குள்
நசிந்து விடாதீர்கள்
அன்று
பெண்களைத் தங்கள்
கண்கள் என்ற ஆண்வர்க்கம்
இன்று[illegible]டங்கள்
அரைகுறை[illegible] ஆடையுரல்,
அனைவ[illegible]ம் கவர்ச்சி காட்டும்
வெளி[illegible] மோகத்தால்,
மனதை[illegible]படுத்தி
அன்[illegible]ரை செய்யும்
[illegible]களால்,
உங்க[illegible]ப்பது
உங்க[illegible] அறியாமலிருக்கலாம்
அதனால்
உலகத்தோடு[illegible]டிவாழத்
தெரியாதவர்கள் நீங்கள்
என எம்மைக்கூட குறை கூறலாம்
ஆனால்...
நான் [illegible]வது
அழகாக [illegible]டையுடுக்க வேண்டாம்
[illegible]அழகாகவிருங்கள்
[illegible]
[illegible] காவல் நெஞ்சமே
[illegible]

புரிந்துணர்வுடன் வாழுங்கள்;
விட்டுக் கொடுத்து வாழுங்கள்;
அன்புடன் வாழுங்கள்;
அனைவரும் போற்ற வாழுங்கள்
என்பதுவே.
நாம் நலமுடன் வாழ்வதற்காகவே
எமது முன்னோர்
"ஊர் போற்ற வாழ்"
என்று எமக்குரைத்ததையும்
நீங்கள் அறிவீர்கள் தானே
எமக்குத் தேவை
தமிழ் மக்கள் இவர்களென
தரணி போற்றும் பண்பாடு.
இதுவே தலை சிறந்தது.
தமிழர் எம் சொத்து
அதில் தந்தை தாய் பேணுவதும்
தன்மானம் காப்பதும்
கற்றதைத் மதிப்பதும்
வந்தோரை வரவேற்பதும்
எளிமையாய் வாழ்வதும்
ஏழைகளை வாழ்விப்பதும்
எனக்கு மிகவும் பிடித்தது
என்பதால்
உங்களுக்கும் சொல்கின்றேன்
யாதுமாகி நில்லுங்கள்
எதுவும் அறியாமல்
இருந்து விடாதீர்கள்
முடத்தனங்களை
மூட்டை கட்டிவிட்டு
பஞ்ச வர்ணத்தில்
வலம் வாருங்கள்
பாஞ்சாலியாய் இருந்திட
நினைக்காதீர்கள்
முன்னேற்றம் என்பது
உங்கள் முகவரியின்
முதல் சொல்லாய் இருக்கட்டும்
குனிந்து நடந்தாலும்
நீங்கள் நிமிர்ந்தவர்கள் தான்
வானின் நீலம்தான்
கடலில் தெரிகின்றது
அதுபோல் பெண்களின் பலம்தான்
ஆண்களின் பின்னால்...
சமுகத்தின் பின்னால்...
ஏன் இந்த
தேசத்தின் பின்னால் கூட...
நிற்கின்றது.

**ச.தர்சினி(நீர்வேலி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணைக் கொலை

**சூசை எட்வேட்**

அப்பா நீட்டி நிமிர்ந்து படுத்துக் கிடந்தார் கட்டிலில். கை காலில் அசைவில்லை, அசைக்கவும் முடியாது! மரணப்படுக்கையில் கிடப்பவர் போல் ஆடாமல் அசையாமல் மரக் கட்டை போல் கிடந்தார்! கழுத்துக்கு மேல் பகுதியும் அப்படித்தான் அசைவற்று போயிற்று! ஆடி அசைய முடியாது. எப்படி யெல்லாம் ஆடி ஓடி வாயாடி கையாடியாய் திரிந்தவர். அவருக்கு இப்படியொரு நிலைமையா! பார்க்க பாரிதாபம் தான்!

ஆனாலும் புலன் எல்லாம் நன்றாக இருக்கும்! முக்கியமாக நாக்கு பழுதில்லாமல் வேலை செய்யும்!

"அடியேய்... ரஞ்சி எங்கடி போனாய்! எளிய நாயே! எனக்கு பக்கத்தில் இருக்க உனக்கென்னடி பஞ்சி! அதுக்குள்ள ஓடி ஒளிகிறாள், மாப்பிள பிடிக்கப் போயிற்றாள் கசவஞ்சி! அம்மாவைத்தான் அழைத்தார் அவர் மனைவியை கூப்பிடுவது இப்படித்தான்! எங்களுக்கு விபரம் தெரிந்த நாளில் இருந்து இவர் கண்விழிக்கும் போதே இந்த வீறாப்பு வசனங்களோடே தான் வாழ்கையை ஆரம்பிப்பார்!

மனிதருக்கு எல்லா உறுப்புகளிலும் புலன்களிலும் வருத்தம் வரும், கெட்டு போகும். ஆனால் இந்த நாக்கில் மட்டும் ஒருவருத்தமும் வராது! அது வயதானாலும் வருத்தமானாலும் நன்றாக வேலை செய்யும்! ஆராற்கேடு நாவாற் கேடு என்பது அவருக்குத்தான் மிகவும் பொருந்தும். நாவினாலே எங்களை மட்டுமல்ல, சொந்த பந்தங்களை அயலை எல்லாம் பகைத்துக் கொண்டார்!

அப்பா ஆர்ப்பரித்து அழைத்ததும் அம்மா சமைத்துக் கொண்டு கொண்டு இருந்தவ பாதியிலே விட்டுப் போட்டு விழுந்தடித்துக் கொண்டு அப்பாவின் அறைக்குள் ஓடினா! போகும் போது "நித்தியா அடுப்படிய கவனி குழம்பு அடுப்பில" என்று சொல்லிக் கொண்டே போனார். நான் ஆசிரியர் நியமனம் பெற்றவள். பிள்ளைகளின் விடைத்தாள் திருத்தும் பணியில் ஈடுபட்டிருந்தேன். நான் அப்படியே விட்டுவிட்டு அடுப்படிக்குக் நுழையும் போது குழம்பு கொதித்துக் குழம்பிக் கொண்டிருந்தது! ஆற்றி ஆறுதலாக்கி வைத்தேன்.

நான் தான் குடும்பத்தில் மூத்தவள். ஏதோ இயலுமானவரை படித்து இந்த ஆசிரியை பணியையாவது பெற்றுக் கொண்டேன். எனது முயற்சியால் என் குடும்பத்தை முன்னேற்றலாம் கௌரவமாக வாழ வைக்கலாம் என்றால், இந்த அப்பாதான் காலை வாரிவிடுபவராக இருக்கிறார்!

அப்பாவை நான் அதிகமாக அணுகுவதே இல்லை! அவருடைய போக்கு முற்றாக எனக்குப் பிடிப்பதில்லை! அருவருப்பையே காட்டும்! மற்றச்சகோதரர்களுக்கு பிடித்ததோ இல்லையோ எதையும் வெளிப்படையாக காட்டிக்கொள்ளு வதில்லை!.

அம்மா போகும் போது படுக்கையில் சலம் விட்டுக் கிடந்தார்! அம்மா போய் அப்புறப்படுத்தி, சுத்தப்படுத்தி அவரை தடவிக் கொடுத்து ஆசுவாசப்படுத்தி தலைமாட்டில் இருந்து வருடிக் கொண்டிருந்தார். இல்லை சீப்பால் விறாண்டிக் கொண்டிருந்தார். தலை முழுக்க சொடுகுக் கடி தாங்க முடியாமல் கத்துவார், அம்மா சீப்பாலே விறாண்டிக் கொடுப்பார். உடம்பிலே எந்தப் பக்கத்தில் சிறு கடி ஏற்பட்டாலும் தாங்கிக் கொள்ள முடியாது அவரால். ஒரு சிறு விரலைத்தானும் சிறிதாக வேணும் அசைக்க முடியாதே! இப்படித்தான் ஆர்ப்பரித்து அலறுவார். தான் சொன்னபடி தனக்கு திருப்தியாகச் செய்யாவிட்டால், வந்தது வில்லங்கம்! வாயில் வந்ததை எல்லாம் விட்டெறிவார்! தூஷண வார்த்தைகளை கொட்டுவார்! கைகால் இயங்கும் நிலையில் என்றால் கேட்கவே வேண்டாம். வீட்டுச் சாமான்களும் உடையும் அம்மாவின் மண்டையும் உடையும்! இரத்தக் காயங்களாகும்!

அம்மாவுக்கு அடுத்தபடியாக தங்கை தான் அப்பாவை கவனிப்பவள். அவளும் தைப்பவள். எனது முயற்சியால் தான் அவளுக்கு தையல் இயந்திரம் கிடைத்தது. நல்லாகத்தைப்பாள். வேலை தேடி வரும். பொறுப்பெடுத்த வேலைகளைச் செய்ய விடாமல் அப்பா நச்சரித்து, தீய வார்த்தைகளை உச்சரித்து கரைச்சலைக் கொடுத்துக் கொண்டே இருப்பார்.

இவருக்கு ஏன் இந்த நிலையானது? எல்லாம் இவரே தேடிக் கொண்ட வினைப் பயன்! பெட்டி கட்டி, ஈருளியில் ஓடி ஊருக்குள்ள மீன் வியாபாரம் செய்பவர். இலாபமோ நட்டமோ ஒவ்வொரு நாளும் நிறைய வெறியில் வருவார்! கறிக்கு புளிகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமான் மட்டும் வாங்கி வருவார்! கொண்டு வரும் கறிவகைகளை நன்றாக பொரித்து அவித்து அவருக்குத்தான் படைக்க வேண்டும்! அம்மா அவருக்கேற்ற மாதிரி எல்லாம் பக்குவமாக இதம் பதமாகச் செய்து வைப்பா. அவர் திண்டு மிச்சம்தான் நமக்கு. நல்லாயிருக்கு என்று ஒருநாளும் சொல்லமாட்டார். ஆனால் ஒருமுறை கை பிசகாக உப்போ புளியோ கூடியோ குறைந்தோ பிழைத்துவிட்டால் போதும், எடுத்ததால் எறிவார்!. தூஷண வார்த்தைகளை கொட்டுவார்! இது தான் பரிசாக கிடைக்கும்! அம்மா மௌனமாக அழுவது எனக்கு மட்டும் தான் தெரியும்! உண்மையில் அம்மாவின் இடத்தில் நானிருந்தால் இவரை என்றோ விவாகரத்துச் செய்திருப்பேன்.

சில நாட்களில் நிறை வெறியில் எங்கேயும் விழுந்து கிடப்பார்! யாராவது வந்து சொல்லுவார்கள். தம்பி தான் வேலையால வந்த களையோடு. அவன் 'கராச்' வேலைக்குப் போகிறவன், அவரை தேடிப் போய் ஏற்றிக் கொண்டு வந்து தூக்கிக் கிடத்துவான்! கெட்ட வார்த்தைகளால் அலட்டிக் கொண்டிருப்பார், சுருட்டு, பீடி, கஞ்சா என்று என்னென்னமோவெல் லாம் பற்றவைத்து ஊதித்தள்ளுவார்! வாயில் எதை யாவது வைத்துக் கொண்டோ விட்டுக் கொண்டோ இருப்பார். எல்லாக் கெட்ட பழக்கங் களும் ஏன் கெட்ட குணங்களும் அவருக்கே சொந்தம்!

"வாழும் வளரும் பிள்ளைகள் இருக்கிற இடத்தில இப்படி செய்யாதீங்க, வீட்டுக்கு வடிவில்ல" என்று அம்மா சொன்னால் போதும் பூ. தூ.. என்று தூஷண வார்த்தைகள் தான் பரிசாகக் கிடைக்கும்! சிலவேளை காயப்படவும் நேரும்!

வீட்டிலேயே கசிப்பு போத்தலை வேண்டி வைத்து ஊத்தி ஊத்திக் குடிப்பார்! வாயில் வந்ததை எல்லாம் உளறிக் கொட்டுவார், ஆபாச பாடல்களை பாடுவார்! "நல்லாக குடிக்கலாம், எவ்வளவும் குடிக்கலாம் ஆனா வெறும் வயிறோட இருக்கக் கூடாது, உடனே சாப்பிட வேணும் நல்லாச் சாப்பிட வேணும் ஒண்டும் செய்யாது" என்பார். சொன்னது போல செயலிலும் இறங்கிவிடுவார். அம்மா பிள்ளை களுக்கென்று ஒதுக்கி வைத்த முட்டை, இறைச்சிப் பொரியல் கரியல் எல்லாவற்றையும் ஒன்றாக போட்டு பிரட்டி எடுத்து தின்று விட்டுப் போவார்! "வாழும் வளரும் பிள்ளைகள் தின்கிற குடிக்கிற வயசில நல்லது கடியதுகள் இந்த மனுஷன் தின்ன விடுவது இல்ல, வாழ விடுகுது இல்ல." என்று அம்மா புறுபுறுத்துக் கொண்டிருப்பார்!

"என்னத்தக் கண்டதும், திண்டது குடிச்சதும் தான் கண்டது" இந்த வசனத்தை உச்சரிப்பார் எரிச்சலூட்டுவார். ஒரு கவிதை வரி ஒன்று படித்தேன். "பைத்தியகாரனும் குடிகாரனும் ஒன்றே அவர்க்கு வைத்தியமனையும் ஒன்றாதல் நன்றே" அப்பாவின் நடத்தையை அவதானித் தால் ஒரு மன நோயாளி போலத்தான் நடந்து கொள்கிறார்!

வீட்டுக்கு யாராவது வந்தால் வாருங்கோ என்று வரவேற்கமாட்டார். அந்த உபசரிப்பெல்லாம் நாங்கள் தான் செய்து கதைத்துக் கொண்டிருக்கும் போது, கதையிலே நூலுக்குள்ள பிழை பிடித்து தன் பிரசங்கத்தை ஆரம்பித்து விடுவார்! அடுத்தவர் கதையைக் கேட்கவும் மாட்டார், கதைக்கவிடவும் மாட்டார், சத்தம் போட்டு பேசுவார். வீடே எடுபடும், தனது கதைக்கு மறுப்புரையே இருக்கக் கூடாது அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற தோரணையில் அதிகாரமாகப் பேசுவார்! தான் பெரிய அறிவாளி என்று பேரெடுக்க இப்படி படாத பாடுபடுவார்! என்னோடு படிப்பிக்கும் ஆசிரியர்கள், என் மாணவர்கள், சினேகிதிகள் என் வீடு தேடி வருவது அறவே எனக்குப் பிடிப்பதில்லை! இவரால் எனதும் குடும்பத்தினதும் மானம் மரியாதை எல்லாம் போய்க் கொண்டிருக்கிறது!

ஒரு நாள் என் சக ஆசிரிய சினேகிதிகள் என்னோடு கதைத்துக் கொண்டிருந்தார்கள். உல்லாசமாகச் சிரித்து பேசிக் கொண்டிருக்கும் போது, இவர் கள்ளுக் கோப்பையோடு பாடிக் கொண்டே வந்தார்! "ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு ஒரு கோல மயில் என் துணையிருப்பு" இந்தப்பாட்டு நான் தான் கண்ண தாசனுக்கு எழுதிக் கொடுத்த நான். பாரதியாரும் குடித்தார். பாரதிதாசனும் குடித்தார். கண்ணதாசனும் குடித்தார். நானும் குடிக்கிறன். குடிச்சா தான் மூளை நல்லா வேல செய்யும் அறிவாளியா வரலாம், நீங்களும் குடியுங்கோ என்று சொல்லி கொண்டே குளிர்பானக் குவளைக்குள் கள்ளை ஊற்றிவிட்டார்! வந்தவர்கள் இதையும் ஒரு நகைசுவையாக எடுத்து மேலும் சிரித்தார்கள்! சரளா ரீச்சர் தான் என் சங்கடமான நிலையை மன வேதனையை உணர்ந்து ஆறுதல் வார்த்தை கூறினா. " நீர் யோசிக்காதேயும் நித்தியா, வீட்டுக்கு வீடு வாசல்படி தான், இப்படி ஆக்கள் எத்தனையோ வீடுகள்ள இருக்கிறாங் கள், எங்கட வீட்டிலையும் இப்பிடித்தான் ஒண்டு கிடக்குது, வீட்டு மானத்தையே கப்பலேத்துது! "குடியில்லாமல் இருக்கேலாதவன் ஒரு மன நோயாளிதான்!" என்றார்.

அவ சொன்னது நூற்றுக்கு நூறு சரி! அப்பாவின் நடவடிக்கைகளைப் பார்த்தால் அவர் ஒரு மனநோயாளி என்றே விளங்கும்! அயலவர்களோ உறவினர்களோ வந்தால் இவர் கண்ணில் படாமல் பின் வழியாக வந்து கதைக்க வேண்டியதை கதைத்து அலுவலை முடித்துக் கொண்டு போய்விடுவார்கள்! இவர் கண்ணில் பட்டால் போதும் அவர்கள் பாடு திண்டாட்டம் தான்! அவர்கள் அந்தரங்க இரகசியங்களை பகிரங்கப்படுத்தி அவமானப் படுத்திவிடுவார்! வருபவர் மதிப்பு மரியாதை யானவராய் தெரிந்தால் போதும், எரிச்சல் பொறாமைக்குணம் வந்து விடும்! அவர்களை மட்டந்தட்டி விடுவார். இப்படியான மனப் போக்குக்கு அடிப்படை காரணம் எனக்கு மட்டும் விளங்கும்! அப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த மிக பழிபாதக மான பாவச் செயல் ஒன்று இருக்கிறது! அது மிகச் சில அயல் உறவுகளுக்கு மட்டும் தான் தெரியும்! அவர்களுக்குத் தெரிந்த அந்த அந்தரங்க பழியான காரியம், அவர்கள் பார்வை யாலேயே தன்னை தாழ்வாக எண்ணமுன்னம், முந்திக் கொண்டு தான் அவர்களை தாழ்த்தி இழிந்து பழித்து பேசி அவர்களையும் தன்னோடு சமபடுத்தி விடநினைக்கிறார்! நான் கொஞ்சம் மனோதத்துவம் படித்தவள், குறை பாடுகளால் தாழ்வுமனப்பான்மை கொண்டோர் இப்படித் தான் மற்றவர்களை முன்னுக்கு வருபவர்களை இழிவுபடுத்தி பேசிக் கொண்டே இருப்பர்! இதுவும் ஒருவகை மனநோய்தான்! மனோ வியாதிகள் பலவகை, அதிலே இது ஒருவகை!

இதை நான் விட்டிலே சொன்னால் எனக்குத்தான் பைத்தியகாரப் பட்டம் சூட்டுவார்கள்! மனோவைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தால் குடியை மறக்கவும் வைத்தியம் பார்ப்பார்கள். குடியால் ஏற்பட்ட மனோவியாதி தீரும் என்றால் கேளார்கள்! அப்பாவுக்குப் பைத்தியமா அவர் என்ன தெருவில் திரியுற பைத்தியங்கள் மாதிரியா இருக்கிறார்! அவரென்ன கூடக்குடிக்கிறார், கூடக் கதைக்கிறார் குழப்படி எல்லாம் வீட்டோடதான். நீ என்ன அவரப் பைத்தியக்காரனாக்கி விசராஸ்பத் திரிக்கு அனுப்பு எண்டு நிக்கிறாய்! அங்க போனால் எங்கட மானம் மரியாதையெல்லாம் என்ன ஆகும்"

இவர்களுக்குத் தெரிந்த பைத்தியம், தெருவிலே பரட்டைத் தலையோடு கந்தல் உடையோடு கூய் காய் என்று கத்திக்கொண்டு திரிபவர்கள்தாம்! வெளிச்சத்துக்கு வராத வீட்டவர் களால் உணர்ந்தும் அறியப்படாத பைத்தியங்கள் வைத்தியமின்றி ஆயுள் பரியந்தம் கிடந்து உத்தரிப்பைக் கொடுத்து வருகின்றன! அவர்களில் அப்பாவும் ஒருவர்!

மனநோய் வைத்தியசாலைக்கு ஒருக்கா போனாலே மானம் போய்விடுமாம்! வீட்டுக் குள்ளேயே கிடந்து குடும்பமானத்தையே போக் காட்டிக் கொண்டிருப் பதை, ஆயுள் கால தண்டனையாக உத்தரித்துக் கொண்டிருப்பதற்கு சம்மதிக்கிறார்களே! வாழ்க்கையில் துன்பத்தையே மனமுவந்து ஏற்கும் பிறவிகளில் அம்மாவும் ஒருவர்! மற்றவர்களை துன்பப்படுத்துவதே வாழ்க்கை என்று வாழும் பிறவிகளில் அப்பாவும் ஒருவர் எனக்கோ வயதுக்கு வந்துவிட்டது! தங்கைக்கும் தான்! திருமணத்தைக் கட்டலாம் என்றால், அப்பாவை விட்டு எங்கேயாவது போகலாம் என்றால் பெண் கேட்டு ஒருவரும் எட்டியும் பார்க்கிறார்கள் இல்லை! அம்மாவும் இரண்டொரு இடங்களில் கதையை விட்டுப் பார்த்தா தட்டிக் கழித்து விட்டார்கள்! இப்படி ஒரு அப்பா இருக்கும் வீட்டில் யார்தான் வருவார்!

அப்பாவின் துர்நடத்தைளால் படிப்படியாக அருவருப்படைந்து கொண்டு வந்த எனக்கு பெருவெறுப்பு ஏற்பட்டது, வீட்டுக்கு அண்மையில் சமீபத்தில் நடந்த அந்த சம்பவம் தான்! அந்தப் பயங்கரத்தை நினைத்தாலே இப்பவும் திகில் தான்!....

எங்கள் வீட்டுக்கு அடுத்தவளவில் ஒரு தகர வீட்டில் வாடகைக்கு இருந்தது ஒரு குடும்பம், வீட்டு உரிமையாளர்கள் இவர்களை வாடகைக்கு இருத்திவிட்டு இந்தியாவுக்கு படகேறி போய் விட்டார்கள். இந்தக் குடும்பத் தலைவன் இரவில் காவல் வேலை பார்ப்பவர். மாலை ஆறுமணிக்கு நகர்புறம் போனார் என்றால் காலை எட்டு மணியாகும் வீடுவர, அந்த வீட்டுப் பெண் தனியே இருந்து கசிப்பு விற்பவள்! பகலிலே இல்லை, இரவிலே



தான் தன் தொழிலை ஆரம்பிப்பாள்! ஆண்கள் கூடியிருந்தும் குடிப்பார்கள், வந்து வந்தும் போவார்கள். பாடிக்களிப்பார்கள் தன்னை விட்டால் அறிவாளி இல்லை என்பதுபோல அட்டகாசமாக பேசுவார்கள், வாய்த்தர்க்கம் முற்றி சச்சரவும் முற்றும்! எல்லாவற்றையும் தனியே நின்று சமாளித்து விடுவாள், கெட்டிக்காரி! மிகவும் கண்டிப்பானவள்!

க்கத்தில் நடக்கும் இந்த வியாபாரம் அப்பாவுக்கு பெரிய வாய்ப்பாயிற்று, கைக் கெட்டிய சொர்க்கமாயிற்று! நல்லாகக் கசிப்பிலே மூழ்குவார்! நடக்கேலாமல் விழுந்தெழும்பி வந்து மனிதனிடம் இருக்கக்கூடாத இழிகுணங் களை எல்லாம் காட்டி நிற்பார்! தொலைக் காட்சியில் நல்ல நிகழ்ச்சிகளை பார்க்க செய்திகளைக் கேட்க விட மாட்டார்! என்ர கதையை கேள் என்பார். தனது கதையைக் கேட்டு தனக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும் என்ற தோரணையில் நடந்து கொள்வார். தன்னிடம் இருந்த காசை எல்லாம் குடித்து முடித்துப் போட்டு, அம்மாவுக்கு ஆக்கினை கொடுப்பார். பிள்ளைகள் உழைக்கிறதெல்லாம் உனக்கா சொந்தம் எனக்குப் பங்கில்லையா? என்று வாதாடுவார்.

'பிள்ளைகள் உழைக்கத் துவங்கின பிறகு உன்ர கை ஓங்கிற்று என்னை, என்ன மதிக்க மாட்டாய் என்ன!' என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டு அட்டகாசம் பண்ணுவார்! அம்மா எங்க சேர்த்து ஒளிச்சு வைத்தாலும் ஆராய்ந்து துருவித் துருவி தேடி கண்டு பிடித்து விடுவார்! கைக்குக் கிடைக்கா விட்டால், கைக்கெட்டியதை எல்லாம் போட்டுடைப்பார்.

கசிப்பு விற்பவளிடம் ஒவ்வொரு இரவும் போயிருந்து குடித்து அட்டகாசமாகப் பேசி சிரித்து மகிழ்வார்! மற்றவர்கள் போன பின்னும், இவர் மட்டும் அந்தப்பெண்ணோடு தனித்திருந்து குடித்து குசு குசு மந்திரம் பேசிக்கொண்டிருப்பார்! அம்மா தூரத்தில் நின்று பார்த்துக்கொண்டிருப்பா! சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் தவித்துக் கொண்டிருப்பா!

இப்படி தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் போது தான் அந்தப் பயங்கரம் அன்று நடந்து விட்டது...!

இவர் தவறான உறவுக்கு அவளைக் கேட்டிருக் கிறார்! அவள் மறுத்திருக்கிறாள்! இவர் சேலையைப் பிடித்து இழுத்து சேட்டை விடத் தொடங்கியிருக்கிறார்! அவள் ஆர்ப்பரித்து குரல் எழுப்பி திட்டித் தீர்த்திருக்கிறாள்! ஏமாற்றத்தால் ஆத்திரப்பட்ட இவர் போதை வெறியில் முன்னால் எரிந்து கொண்டிருந்த மண்ணெண்ணை போத்தல் விளக்கை அவள் மீது விட்டெறிந்தார்! அவளைத் தீ பற்றிக் கொண்டது!!

அவள் தீயிலே கருகி மாண்டு போனாள்!!

அவள் எழுப்பிய அவலக்குரல் ஈனக்குரலாகி அடங்கு மட்டும் யாரும் கிட்டவும் போகவில்லை! சாமத்தில் நடந்தது. இருட்டோடு இரட்டிப்புச் செய்யப்பட்டு விட்டது!

அம்மா மட்டும் தான் நேரில் கண்ட சாட்சி! கண்களை இறுக்கி மூடிக்கொண்டு ஒன்றுந் தெரியாதது போல் நடித்து புருஷனைக் காப்பாற்றி விட்டா!அப்பா கொல்லைப் பக்கமாகப் போய் பற்றைக்குள் விழுந்து படுத்துக் கொண்டார்! பேந்தப்பேந்த முழித்துக் கொண்டு கிடந்தார் இரவிரவாக! நாட்பட இந்த விஷயம் மெல்ல கசியலாயிற்று! அம்மா தெரிந்தவர்கள் காலில் விழுந்து கெஞ்சி ஆபத்தில் நின்று அப்பாவைக் காப்பாற்றிவிட்டா! அண்டை அயலோடு அப்பாவைத் தவிர நாங்கள் எல்லோரும் நல்லமாதிரி! அதனால் காப்பாற்றப்பட்டோம்! அவன்தான் குடிகாரன் குடிகேடன் விசரன்! அதுகள் நல்லதுகள்' என்ற அபிப்பிராயத்தால் எல்லோரும் காப்பாற்றப்பட்டோம்!

இந்த அசம்பாவிதத்திற்குப் பிறகுதான் அப்பா மேலும் மனநோயாளியாக நடமாடலானார்! 'நான் மட்டுமா பிழை விட்டவன்? எல்லோருமே குற்றமிழைத்தவர்கள் தான்' என்ற தோரணையில் நடந்து கொள்ளலானார். யாரைக் கண்டாலும் அவர்கள் வீட்டு அந்தரங்கங்களை அவிழ்த்து விட்டு குறை பேசி இழிவுபடுத்தி விடுவார்! தன்னைத்தானே உயர்வாகப் பேசி, தன்னை உயர்த்து வதற்காக மற்றவர்களை தாழ்த்தி வாயில் வந்ததை எல்லாம் உளறிக்கொட்டி குழறுபடி பண்ணி மனக் கோளாறைக் காட்டி நிற்பார்! இது ஒரு விதமான மனநோய் தான் என்பதில் சந்தேகமில்லை!

தெய்வம் நின்று கொல்லும் என்று சொல்வார்களே அது நடந்து விட்டது! அவருக்கு தண்டனை கிடைத்து விட்டது! நிறைவெறியில் ஈருளியில் இருட்டு நேரம் வந்து கொண்டிருந்தார். அது ஒரு மயான வீதி பள்ளக்கிடங்கில் பாடுகேடாக விழுந்து போனார்!

வெகுநேரமாகியும் அப்பா வராததால் நாம் யோசித்துக் கொண்டிருந்த போது தான் தெரிந்தவர் ஒருவர் விஷயத்தைக் கூறினார்! விழுந்து காயப்பட்டு பாட்டறியக் கிடக்கிறாராம்!

தம்பிதான் தான் வேலை செய்யும் முதலாளியின் உந்துருளியை எடுத்துக் கொண்டு போனான்! வீட்டிலே ஒரே அல்லோல கல்லோலம்! தம்பி ஒரு சிநேகிதனின் உதவியோடு ஏற்றிக் கொண்டு வந்து விட்டிலே சொல்லிப் போட்டு வவுனியா அரசாங்க ஆஸ்பத்திரியில் அனுமதித்தான்! அவசர கிசிச்சைப் பிரிவிலேயே ஒருவாரம் வைத்திருந் தார்கள்! நல்லாக இரத்தம் போய்விட்டது! பின் மண்டையிலே தான் பாரிய காயம்! பதினைந்து இழை போட்டது! பிடரி நரம் பொன்று அறுந்து விட்டது! என்றார்கள்! மூச்சை மட்டும் விட்டுக் கொண்டு மூச்சுப் பேச்சின்றி செத்த பிணம் போல் கிடந்தார்!

மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியமனையில் இருந்து கொழும்புக்கு அனுப்பினார்கள்! அங்கும் விசேட நரம்பியல் நிபுணர் வந்து சத்திர சிகிச்சை எல்லாம் செய்து பார்த்தார். பலனில்லை, பல மாதங்கள் தலைநகரில் கிடந்தது தான் மிச்சம்!அம்மாவும் தம்பியும் தான் அலைந்து களைத்தார்கள்! வைத்தியசாலை வளாகத்தில் கூட அதிக நேரம் நிற்க அனுமதிக்கிறார்கள் இல்லை! வந்து விசாரிப்பார்கள் சோதிப்பார்கள் தம்பியை கொண்டு போக எத்தனிப்பார்கள். இந்தக் கரைச்சல்களால் தம்பியை இடை மறித்து அம்மா தான் அடிக்கடி போய் வருவா. விடுதிகளிலே புதிதாக வருபவர்களை தங்க இடம் கொடுக்கிறார்கள் இல்லை! போன அன்றே பார்த்து அலுவல்களை முடித்துக் கொண்டு உடன் திரும்பி விட வேண்டும்!

இப்படி பல மாதங்களாக அம்மா அலைந்தும், அப்பா கிடந்தும் பிரயோசன மில்லை! திரும்ப வவுனியாவுக்கு அனுப்பி வீட்ட கொண்டு வந்து கிடத்தியிருக்கிறார்கள்!

இப்போது எல்லா உறுப்புகளும் படுத்து விட்டது. இயங்க மறுத்து விட்டது! நாக்கு மட்டும் தான் முன்னரை விட நன்றாக வேலை செய்கிறது! அதொன்றின் உதவியால்த்தான் தன் வேலைகளை எல்லாம் சாதித்துக் கொள்கிறார்! உடலின் எந்தப்பக்கத்திலாவது சிறு கடி ஏற்பட்டால் காணும் சொறிவதற்கு அம்மாவைக் கூப்பிடுவார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொறிவதற்கு மட்டுமா தொட்டது பட்டதுகள் எல்லாவற்றுக்கும் அழைப்பாணை விடுப்பார்! போக சற்று பிந்தினால் போதும், தனக்கேற்ற மாதிரி சேவகம் புரியாவிட்டால் காணும் தூஷண வார்த்தைகளை எறிகணையாய் விட்டெறிவார்! காதிலே நாராசம் பாயும்! இந்தக் கெட்ட வார்த்தை களைக் கேட்டுக் கொண்டிருப்பது தான் மனதை வதை செய்யும்! வீட்டை விட்டு ஓடி கிணற்றுக்குள் விழுவோமா என்றிருக்கும்! பழைய சினிமாப் பாடலொன்றுதான் ஞாபகம் வரும், 'உலகத்திலே பயங்கரமான ஆயுதம் எது? நிலைகெட்டுப் போன நயவஞ்சகரின் நாக்குத்தான் அது...

அம்மாவுக்கு இதுவெல்லாம் கேட்டுக் கேட்டு சூடு சொரணை அற்றுப் போய் விட்டது! அல்லது அம்மாவை பொறுத்தவரையில் முன்னர் போல் எடுத்ததால் எறிந்தோ, அடித்தோ காயப்படுத் தாமல், வாய்ப்பேச்சோடு மட்டுப் படுத்தப்பட்டதால் பெரும் ஆறுதல் என்று நினைக்கிறாவோ தெரியாது!

ஆனால் அவவின் நடவடிக்கைகளைப் பார்த்தால் அப்படியாகத் தெரியவில்லை. விழுந்து விழுந்து பரிவோடு அக்கறையோடு கவனிப்பதைப் பார்த்தால் வேறு வேறு வைத்திய முறைகளையும் விசாரிப்பதைப் பார்த்தால் அவரை எப்படியும் எழுப்பி ஓடி ஆட விட்டு, பழைபடி அடி வாங்க முதுகைக் கொடுக்க விருப்பம் தெரிவிப்பது போலிருக்கும்! தான் அடிவாங்கினாலும் உதை வாங்கி னாலும் பரவாயில்லை புருஷன் மற்ற ஆண்கள் போல நடமாடவேண்டும் என்ற வீணவா அவவுக்கு! இந்த நவ நாகரீக உலகில், இருமினாலே விவாகரத்துக் கோரும் காலத்தில் இப்படியும் ஒரு பத்தினிப் பெண்ணா! அம்மா இரகசியமாக கடவுள் படத்துக்கு முன்னால் நின்று கண்ணீர் மல்க வேண்டுதல் செய்வா தன் கணவனுக்கு சுகம் வர வேண்டும் என்று!

அம்மா அடுப்படியையும் கவனிக்க வேண்டும், அப்பாவையும் பரிபாலிக்க வேண்டும்! அம்மாவுக்கு உதவிக்கரம் தங்கைதான். அவள் தையல் வேலையும் தடங்கலாகும். பொறுப்பெடுத்த வேலைகளை வேளைக்கே செய்து கொடுக்க முடியாமல் தடுமாறுவாள்! சினப்படுவாள்! நான் வீட்டில் நிற்கும் நேரம் குறைவு, நின்றாலும் கிட்டப் போக மாட்டேன், தூரத்தில் நின்று அவதானித்துக் கொள்வேன்! மற்றபடி வீட்டுக்கு உதவியானவற்றை நிறைவேற்றுவேன். அவ்வளவு தான்!

அப்பா ஒரு மனச்சாட்சி இல்லாத வருத்தக் காரன்! இவ்வளவு பக்குவமாக பார்த்தெடுத்தும் சிறிது பிசகிவிட்டால் போதும், உப்புப்புளி கூடிக்குறைந்தால் காணும், வாயிலிருந்து பீரங்கி வேட்டுக்கள் வெடிக்கும்!

வெளிமுற்றத்துக்கு கட்டிலோடு தூக்கிக் கொண்டு வந்து கிடத்தி சுடுநீரில் குளிப்பாட்டி கழுவித்துடைத்து சுத்தப்படுத்தி, தோய்த்த உடுப்புகளைப் போட்டு பக்குவமாக உள்ளே கொண்டு வந்து கிடத்தி சாப்பாட்டை ஊட்டிவிட ஆயத்தப்படுத்தும் போது மலங் கழித்து வைத்திருப்பார்! எப்படி இருக்கும்! 'அவர்களுக்கு என்ன வேலை. இதையெல்லாம் செய்யத்தானே படைக்கப்பட்டி ருக்கிறார்கள் இவர்கள்' என்ற எண்ணம் அவருக்கு கொஞ்சம் கூட மனச்சாட்சியில்லாத வருத்தக் காரன்! எனக்கு எரிச்சல் எரிச்சலாக வரும்! ஆனால் அம்மாவின் முகத்தில் இளநகை தான் வரும்! அப்பாவின் மனப்பான்மையை அம்மாவும் மனம் கொள்கிறார்! பெண்ணாகப் பிறந்தால் ஒருவனுக்கு வாழ்க்கைப் பட்டால் அடிவாங்கினாலும் அடிமையாகி சேவகம் செய்ய வேண்டும் என்று நினைக்கிறாரோ, தாய்க்குப் பின் தாரம்தான் தாயாகிவிட வேண்டும் என்று எண்ணுகிறாரோ! இதையொரு தியாக வாழ்க்கையென்று அவவும் சொல்ல வில்லை, அப்பாவும் ஏற்கவில்லை! நானும் இப்படியொரு பெண்ணியலை விரும்பவில்லை! பெண்ணென்றால் இப்படித் தான் வாழ வேண்டுமா? கணவனுக்காக சகலதையும் அர்ப்பணிக்க வேண்டுமா! பெண்ணுக் கென்று ஒரு வாழ்க்கை இல்லையா!

அம்மா அப்பாவின் தலைமாட்டில் இருந்து தலையை வருடிக் கொடுத்துக் கொண்டிருப்பா, கடிக்கும் இடமெல்லாம் தடவிக் கொடுப்பா. உணவூட்டி விடுவா, தண்ணீர் பருக்கிவிடுவா, அம்மா, சுருட்டை அவர் வாயிலே வைத்து பற்றவைத்து விடுவா, அவர் புகை விடும் போது வெளியால எடுப்பா மீண்டும் வைப்பா, அடிக்கடி சாராயம் பருக்கி வாய் துடைத்து விடுவா! பக்கத்தில் இருந்து அவரின் அலட்டல் புலம்பல்களை எல்லாம் கேட்டு இரசிப்பா ! பெண்ணுக்கு இப்பபடியொரு வாழ்க்கை தேவைதானா!

அப்பாவுக்கென்ன இப்படியொரு மனைவி கிடைத்திருக் கிறாள்! அவர் பாக்கியசாலி! ஆனால் இதை உணரும் மனம் அவருக்கில்லை! கிடந்த கிடையில் சகல சம்போகங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்! கொடுத்து வைத்தவர்தான்! நிஜம் மன்னருக்குக் கூட இந்தளவு சுகபோகம் கிடைத்திருக்காது.

அம்மாவுக்கென்ன கணவனின் சுகத்துக்காக எதையும் செய்வார்! நளாயினி போல அர்த்த ஜாமத்தில் குஸ்டரோகியான கணவனை கூடையிலே தூக்கிச் சுமந்து கொண்டு போய் விபச்சார விடுதியில் விட்டு, வெளியிலே காவல் இருக்கவும், முடியுமானால் கணவனின் இன்பம் நீடிப்பதற்காக ஊருக்கு தெரியாமலிருக்க, சூரியனை உதிக்காமல் மூடி மறைக்கவும் சம்மதம்தான்!

தம்பி வேலையால் வரும் போது ஒரு அரைப் போத்தலோடு தினசரிவருவான்! ஒரு நாள் வெறும் கையோடு வந்தாலும் வீட்டில் ஒருவரும் இருந்த பாடில்லை! கத்தி ஆர்ப்பாட்டம் பண்ணி வீட்டையே நாலாக்கி, அயலையும் கூட்டி எம்மை நாயாக்கி அவமானமாக்கி விடுவார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் தம்பியின் நடவடிக்கையிலும் வித்தியாச மாயிருந்தது! பேசும் போது வாயிலே சாராயம் மணந்தது! அப்பாவுக்கு வாங்கிக் கொண்டு வருவதில் தானும் வாய் நனைத்திருக் கிறான்! வீட்டில் நாங்கள் எல்லோரும் கண்டித்தோம். அம்மா கண்ணீர் விட்டு அழுதா!

அப்பாவை வருத்தம் பார்க்க தெரிந்த வர்கள், உறவினர்கள் வருவார்கள். தூர நின்று பார்த்து அனுதாபந்தெரிவித்து விட்டுப் போவார்கள். போகும் போது அவன் செய்த அநியாயத்துக்குத் தான் இப்படிக் கிடந்து உத்தரிக்கிறான் என்று குசுகுசுப்பது எமக்குத் தெரியும்!

தம்பியின் வருமானம் அப்பாவின் போதைத் தேவைகளோடு சரி! மேலும் அவனும் குடிகாரனாக கேடுகெட்டவனாக மாறப்பார்க்கிறான்!

தம்பி கெட்டது போல தங்கையின் தொழிலும் பட்டுப்போய்க் கொண்டிருக்கிறது பாழாய்ப்போன அப்பாவால்! எங்கள் இருவருக்கும் அவர் இருக்கம் வரைக்கும் திருமணமே நடக்காது!

அம்மா ஒரு கேடுகெட்ட வாழ்க்கைக்கு தன்னையும் குடும்பத்தையும் அவரோடு சேர்ந்து ஆட்படுத்தி அநியாயப்படுத்திக் கொண்டிருக்கிறா! எல்லோரையும் அவமானப்படுத்திக் கொண்டிருக்கிறா!

அப்பாவைச் சுகப்படுத்த படாத பாடுபடுகிறா! அவர் சுகப்பட்டு எமக்கெல்லாம் புதுவாழ்வா கிடைக்கப்போகிறது! மேலும் மேலும் கஸ்டத்தையும் அலங்கோலத்தையும் அவமானத்தையுமா விலை கொடுத்து வாங்க வேண்டும்.

அப்பா இப்படியே கிடந்தாலும் ஆபத்து. சுகப்பட்டாலும் அதிக ஆபத்து! குடும்பத்தில் எல்லோரையும் ஆபத்தில் இருந்து காப்பாற்ற ஒரே ஒரு வழிதான் இருக்கிறது!□□□

# காடு

*காடு எல்லையற்ற பிரமிப்புக்களால்*
*நிரம்பிப்போயிருக்கிறது.*

*எல்லாக்காலங்களிலும் காடு*
*காடு எனும் ஒரு சொல்லாக நெருங்கி*
*வரும்போது*
*நான் வேதனையடைவதாக*
*உணர்கிறேன்*
*அந்தக் கணங்களில்*
*காடு அங்கிருந்து விலகிப்போய்விடுகிறது.*

*உலகின் கடைசி ஒளியை நீ*
*நிர்வாணமாக அடைகையில்*
*காடு சிறு கல் அல்ல*
*காடே காட்டுலகின் தேசம்*
*மௌனப் பெரும் வெளி*
*அது அங்கேயே இருக்கும் ரகசியமாகிறது.*

*வாழ்வு நீண்டதாகவும் மரணம்*
*குறுகியதாகவும்*
*உனக்கும் எனக்கும்*
*காட்டினுள்ளே தீர்ப்புக்கள்*
*எழுதப்படுகின்றன.*

*காட்டின்*
*சுறுசுறுப்பான கனவுகளில்*
*அவர்கள் வாள் வீசுகிறார்கள்*
*அவர்கள் என் ஜீவன்களைக்*
*கொல்கிறார்கள்*
*எனது தியானத்தால் என்னை*
*எரிக்கிறார்கள்.*

*வாள் வீரர்களின் வெற்றிக்கு*
*முந்தியோர் கணத்திலாவது*
*நான் சாக வேண்டும் என்கிறது காடு.*

*பெரும் காற்று*
*உன்னிடம் கொண்டு வந்து தரும்*
*ஒரு பழுத்த இலை*
*வழ வழப்பான முறிதண்டு*
*கொஞ்சம் கொறிபட்ட சிறப*
*நினைவுகள்*
*மற்றும் இன்னும் சில.*

*மறைவிடங்களை விட்டு நீங்காக் காடு*
*இவைகளல்ல*
*அது எல்லையற்ற பிரமிப்புக்களால்*
*நிரம்பிப்போயிருக்கும்.*

**மருதம் கேதீஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே மாதிரியான உரிமைகள் சந்தர்ப்பங்கள் மூலம் அனைவருக்கும் நல்வாழ்வு



**யுகாயினி**

மனிதவள மேம்பாட்டிற்கு மனித உழைப்பு முக்கியமானது. மனித சாராம்சமே உழைப்பு தான். இதர உயிரினங்களிலிருந்து மாறுபட்ட இயல்புகளை கொண்ட மனிதர் முன்னேறுவதற்கு அடிப்படையாகவும் ஆதாரமாகவும் அமைந்துள்ளது. பொருளாதாரம், அறிவியல், மொழியியல், சிந்தனை, தருக்க அறிவுறைகள் என பலவும் உழைப்பின் பெறுபேறுகளே. உழைப்பின் பெறுபேறாக மனிதன் தன்னையும் இயற்கையையும் மீளமைத்துக் கொண்டான். மனுக்குலத்தின் இணைந்த செயற்பாட்டினாலேயே இவை யாவும் சாத்தியமாகின.

மனித குலத்தின் சரிபாதிக்கு அதிகமானவர்கள் பெண் பாலரே ! வீட்டுக்குள் அடைபட்டிருந்து வீட்டுப் பணிகளில் மட்டும் பெண்களை முடக்கி வைத்திருந்த காலத்தில் எட்டப்படாத சாதனைகள், பெண்கள் வெளியுலகுக்கு வந்து ஆண்களோடு நிகராகப் பணியாற்ற ஆரம்பித்த பின்னரே எட்டப்பட்டதை எவரும் மறுக்க முடியாது. பெண்களுக்கான சகல உரிமைகளும் சந்தர்ப்பங்களும் ஆண்களைப் போலவே வழங்கப்பட்டால் இப்புவி சொர்க்கபுரியாகிவிடும்.

இன்றைய பெண்களின் வாழ்வில் பல விதமான முன்னேற்றங்கள் படிப்படியாக எட்டப்படுகிறது எனினும் இன்றும் கூட பெண்களுக்கான உரிமைகள் பலவும் மறுக்கப்பட்டே வருகின்றன. ஆணாதிக்க சமுதாயம் பெண்களுக்கான உரிமைகள் அனைத்தையும் வழங்கத் தயாராக இல்லை. சகல துறைகளிலும் ஒரு படி பின்தள்ளியே வைத்திருக்கிறது. சமவுரிமை வழங்கிட பின் நிற்பதால், மனித முன்னேற்ற பணிகளில் பெண்களின் பங்களிப்பு மட்டுப்படுத்தப்பட்டே உள்ளது. குடும்பத் தலைவி என்ற மகுடமும், இல்லாள் என்ற பட்டமும் பெண்களை வீட்டுக்குரியவளாக்கி நாட்டுக்குரியவளாக முழுமையாக பங்காற்ற முடியாமல் தடுக்கின்றது. உண்மையிலேயே பெண்களுக்கான உரிமைகள் ஆண்களைப் போலவே வழங்கப்பட்டால் எல்லோரது உரிமைகளும் மேம்படும். இதை உணர்ந்து கொள்ள ஆணாதிக்க சமுதாயம் பின்நிற்கிறது.

மேலோட்டமாகப் பார்த்தால், இன்றைய பெண்களுக்கு என்ன குறை இருக்கிறது என்று எண்ணத் தோன்றும் இத்தோற்றப்பாட்டுக்கும் காரணம் இன்று சமூகம் ஆணாதிக்க வயப்பட்டிருப்பது தான். உரிமை என்பது வேறு. சலுகை என்பது வேறு. இன்றைய பெண்கள் பல சலுகைகளைப் பெற்றுள்ளார்கள். கடந்த நூற்றாண்டில் பல போராட்ட முன்னெடுப்புகள் மூலம் சில உரிமைகளையும் பெற்றுள்ளார்கள் கல்வி வேலைவாய்ப்பு வாக்குரிமை போன்ற சிலவற்றினைக் குறிப்பிடலாம்.

ஆதி மனிதன் ஆதாம் ஏவாள் காலம் தொட்டு மனிதன் கூட்டம் கூட்டமாக வேடுவர்களாக வாழ்ந்த காலம் வரை ஆண் பெண் சமத்துவம் பேணப்பட்டதாக தெரிகிறது. நிலவுடமைச் சமுதாயம் தோன்றிய பின்னர் தான் ஆண் பெண் இடையே அசமத்துவ நிலை தோன்றியது. நிலவுடமை, சொத்துடமை என்பன தமது பரம்பரைக்கே காவப்பட வேண்டும் என்ற நோக்கில் குடும்ப அலகு உருவாக்கப் பட்டு, பெண்ணின் உரிமைகள் மெல்ல மெல்ல பறிக்கப் பட்டன. பெண் என்பவள் வீட்டுக்கே உரியவள் என்ற நிலைப்பாடு பெண்ணை கிணற்றுத் தவளை போல் ஆக்கி, காலப்போக்கில் ஒருவித அடிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமையை உருவாக்கியது. தொடர்ந்து ஏற்படுத்தப்பட்ட கட்டுடைமைகளால் காலப்போக்கில் பெண் சமமானுடப் பிறவி என்ற கருத்தியல் மாறி ஒரு உடமைப் பொருளாகக் கணிக்கப்பட்டாள் போகிப்பதற்கும், ஊதியமற்ற வேலைகள் புரிவதற்கும் மட்டுமானவளாக பெண் உருவாக்கப் பட்டாள். இந்த நிலை கடந்த ஒரு சில நூற்றாண்டுகள் வரை தொடர்ந்தது. இதனால் பெண் தனது நிலையை உணராத பேதையாக தமது உரிமை களைப் பற்றி சிந்திக்காதவளாக வாழ்ந்து வந்தாள். தனது அசமத்துவ அடிமை நிலையை அறியாத வளாக, இதுவே தான் தன் வாழ்வு எனவாழ்ந்து வந்தாள். பல விதமான பாரபட்சங்களுக்கும், வன்முறைகளுக்கும் உள்ளான பெண், ஆணாதிக்க கரங்கள் தன்னை நசுக்குவதைக் கூட உணராத வளாக இருந்தாள். இதுவே விதி என எண்ணியபடி!

அடக்கு முறையின் உச்சத்தில் எதிர்ப்புணர்வும் உருவாகும் என்பதுவாய் கடந்த இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர். பெண், தனது நிலை பற்றி சிந்திக்கவும் ஆணாதிக்கத்தை இனம் காணவும் தலைப்பட்டாள். இதன் தொடர்ச்சியாக ஆணாதிக்கத்திற்கு எதிரான பெண்ணியச் சிந்தனைகள் படிப்படியாக உருவாகின.

பெண்ணியம் என்பது ஆண் - பெண் சமத்துவத்தை வலியுறுத்தியதோடு பெண்ணடிமைத் தனம் நீங்கி ஆணாதிக்கம் தகர்க்கப்பட வேண்டும் என்பதையும் கோரி நின்றது. பெண்களுக்கு, ஆண்களுக்கு சமமானதும் நிகரானதுமான உரிமை களும் சம சந்தர்ப்பங்களும் சகல துறைகளிலும் கிட்ட வேண்டும் எனவும் அதற்காக பெண்கள் முயற்சி களை மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத் தியது. பெண்களுக்கு எதிரான வன்முறைகளும் பெண்களை வலுவிழக்கச் செய்யும் பண்பாட்டு பாரம்பரிய அம்சங்களிலுள்ள அசமத்துவ மான நடைமுறைகளும் நீக்கப்பட வேண்டும் என்றும் குரல் கொடுக்க ஆரம்பித்தது. இதன் பெறு பேறாக ஆணாதிக்கத்தின் இரும்புப் பிடியானது மெல்ல மெல்ல தளர்வு கண்டது. கடந்த நூற்றாண்டில் இதன் பெறுபேறாகத் தான் பெண்ணியம் சற்று மேலோங்கியதோடு பெண்களின் வாழ்வு நிலையிலும் முன்னேற்றம் எட்டப்பட்டது.

பல்வேறு துறைகளில் பெண்களுக்கு சந்தர்ப்பங்களும் வாய்ப்புகளும் கிட்டிய போது, பெண் தனது ஆற்றல், ஆளுமை, திறமை, அயராத உழைப்பு என்பவற்றை வெளிப்படுத்திட முடிந்தது. எனினும் பெண்களின் உரிமைகளை வழங்கிட ஆணாதிக்கம் இலகுவில் விட்டுக் கொடுக்கத்தயாராக இருக்கவில்லை. மதங்களும் பண்பாட்டு கலாச்சார அம்சங்களும் ஏற்கெனவே கட்டுடமை செய்யப் பட்டிருந்த போலிமைகள் பெண்ணிய மேம்பாட்டிற்கு தடைகளாக இருந்தன. இன்றும் இருக்கின்றன. இவை அனைத்தையும் முழுமையாக இல்லாது விட்டாலும் படிப்படியாக முறியடித்து பெண்கள் முன்னேறினர். இதற்காக பல தடைகளையும் தாண்டி பல இன்னல்களையும் மனவேதனை களையும் அனுபவித்து முட்பாதைகளைக் கடந்து பெண் முன்னேறினாள். இந்தப் பயணத்தில் பெண்ணியத்தை ஏற்றுக் கொண்ட ஆண்களும் கை கொடுத்தனர்.

இந்த நீண்ட பயணத்தின் பெறுபேறு தான் இன்றைய பெண்கள் அனுபவிக்கும் சமத்துவமும், சுதந்திரமும் ஆகும். எனினும் இவை கூட இன்றும் மட்டுப்படுத்தப்பட்டவையாகவே இருக்கின்றன. ஆனால் இவ்வாறான சில உரிமைகளும், வாய்ப்புக்களும் கிட்டியமையால் பெண் கிணற்றுத் தவளையாக இருந்த நிலை மாறி உலகத்தை அறிந்து கொண்டாள். தரையை நோக்கிய இந்தக் கிணற்றுத் தவளையின் பாய்ச்சலை ஆணாதிக்கத்தினால் ஜீரணிக்க முடியவில்லை. இதனால் பெண்ணியவாத பெண்களை இழிவு படுத்தி மனம் சோரவைத்தனர். எனினும் பெண் முன்னெடுத்தகாலை பின்வாங்காது சலிக்காது சறுக்கு மரம் ஏறி உச்சத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறாள்.

பெண்ணுக்கு கல்வியில் ஏற்பட்ட வாய்ப்பு, அவள் உலகை அறியவும், தன்னை அறியவும் பெரிதும் உதவின. ஏன் கல்வியிலுள்ள பாரபட்சங் களைக் கூட இனம் கண்டு முன்னேற முடிந்தது கல்வித் தகமையினால் கிட்டிய வேலை வாய்ப்பு பெண்ணின் பொருளாதார நிலையை உயர்த்தி யதுடன், முற்று முழுதாக ஆணில் தங்கியிருக்கும் நிலையையும் மாற்றியது.

பெண்ணின் உழைப்பும், உற்பத்தியும் உலக அரங்கில் பொருளாதார வலுவை ஏற்படுத்தின. அறிவியல், மருத்துவம், பொறியியல், கணணி தொழில்நுட்பம், கணக்கியல், பொருளியல் தகவல் தொழிநுட்பம், விண்வெளி மற்றும் ஆழ்கடல் ஆராய்ச்சி, கடின உழைப்புக்களான விவசாயம் கைத் தொழில்கள் என பல துறைகளிலும் பெண் ஆழக் கால் பதித்தாள். பெண்ணின் ஆற்றல், ஆளுமை பயன்பாட்டின் அறுவடையை பிரமிப்போடு பார்த்த உலகம் பெண்ணின் திறனை உணர்ந்து கொள்ளும் நிலை ஏற்பட்டது. பெண் உயர்வடைந்தால் அது அனைவருக்குமான முன்னேற்றம் தான் என்பதை உலகம் உணர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று பெண் என்பவள் சம மானுடப் பிறவி என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் இன்னமும் கூட பல அம்சங்களில் பாரபட்சமும், அவளுக்கு எதிரான வன்முறைகளும் தொடரவே செய்கின்றன. திருமணம், தாய்மை, குடும்பம் என்பவற்றில் பெண்ணின் நிலை இன்னமும் ஒரு படி மேம்பட வேண்டும். கலாச்சார பண்பாட்டு அம்சங்களில் நிலவும் அசமத்துவ நிலைமை படிப்படியாகவேனும் மாற்றம் செய்யப்பட வேண்டும். ஆண் வலிமை யானவன் பெண் வீரமற்றவள் என்று உருவாக்கப் பட்டிருக்கும் மன நிலையில் மாற்றம் அவசியம். ஆண் பெண்ணிடையேயான உறவு அதிகாரத்தை சமத்துவத்தைக் கொண்டதாக முற்று முழுதான மாற்றம் இன்றைய தேவை இதன் ஓர் அம்சமாக பால்நிலை ரீதியிலான சமூக அடுக்கமைவுகளை நீக்க வேண்டும்.

எமது நாட்டில் அரசியலில் பெண்களின் வகிபங்கு முன்னேற்றம் காண வேண்டும். உலகின் முதற் பெண் பிரதமரைத் தந்த நாடல்லவா, எங்கள் தாய்த்திரு நாடு. இன்னொரு அம்சமான பாலியல் இழிவுபடுத்தலும் வன்முறையும் நீக்கப்பட வேண்டும்.

சில அம்சங்களில் ஓரளவுக்காயினும் ஒரேமாதிரியான உரிமைகளும் சந்தர்ப்பங்களும் கிட்டியமையினால் தான் இன்று எமது நாட்டிலும் பெண்கள் தலைநிமிர்ந்து நிற்கிறார்கள். மருத்துவர், பொறியியலாளர், சட்டத்தரணி, கணக்காளர், தகவல் தொழில்நுட்பவியலாளர், பேராசிரியைகள், ஆசிரியைகள், கடின தொழில் புரிவோர் என பரந்தளவில் ஆண்களுக்கு நிகராக பல்வேறு பதவிகளில் பணிபுரிகிறார்கள். இலங்கைக்கு ஒலிம்பிக் பதக்கத்தை வென்று கொடுக்க ஒரு பெண்ணால் முடிந்தமை கூட அவளுக்குக் கிட்டிய சம வாய்ப்பினால் தான். இவற்றால் ஆண்கள் எந்த விதத்திலும் பாதிக்கப்படவில்லை. இன்னும் ஒருபடி சொல்வதானால் பெண்களின் பங்களிப்பால் எமது தேசமும், இவ் உலகமும் முன்னேறிய பாதை யிலேயே பயணிக்கிறது எனலாம்.□□□

# நாளும் கோளும்

*நாளும் கோளும் பார்த்தா*
*ஜனனம் நிகழ்கிறது...*
*நாளும் கோளும் பார்த்தா*
*மரணம் வருகிறது?*

*ஆயினும்*
*இறைவனின் இருப்பை*
*இவைதாமுணர்த்தும்!*

*இடையினில் வாழுமெம்மிருப்பை*
*உறுதிப்படுத்தவே நாளும் கோளும்*
*நட்சத்திரமும் பார்க்கின்றோம்...*

*நாளும் பொழுதும் பார்த்தா*
*நோய்நொடி வந்து அலைக்கிறது?*
*நாள் பார்த்து நட்சத்திரம் பார்த்து*
*பொருத்தமும் கண்டு நிறைவேறும்*
*மணவினைகள்கூட முறிவதில்லையா?*

*ஆயுள் கெட்டியென*
*அகங் களித்திருக்கையிலே*
*வீதி விபத்துகளும் அகால மரணங்களும்*
*ஆட்கொள்வதில்லையா?*

*விதிவிலக்குகள் எங்ஙனுமுண்டு?*
*எந்த விதியையும் இவை மீறும்!*
*எமது நடத்தையும்கூட காரணமாகும்.*
*முளையில் பிறழ்வு வந்தோர் நடத்தையை*
*கோள்களின் தாக்கம் தெள்ளிதின் காட்டும்...*
*கனத்த நாட்கள் என்றிவைகள்*
*கணிக்கப்படுதல் காண்பீரே!*
*நாளென் செயும் வினைதான் என் செயும்*
*நாடிவந்த கோளென் செயுமென*
*நாவுக்கரசர் பாடினாரெனினும்,*
*நாள் பார்த்தல் நலமிகத் தருமெனும்*
*வாக்கினை மதித்து நடப்போமேல்*
*வாழும் வரையில் வசந்தமும் வாராதோ?.*

**கண.மகேஸ்வரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழமை பேணுகின்ற நெகிழ்ச்சி சிறிதுமற்ற மரபுவாதிகளாகவே பெரும்பாலும் பண்டிதர்கள் இருந்து வந்திருக்கின்றார்கள். அதன் காரணமாக ஈழத்து இலக்கியவரலாற்றில் அறுபதுகளில் மரபுப் போராட்டம் நடந்தேறி இருக்கின்றது. மரபுவாதிகளான பழைய பண்டிதர்கள் மூர்க்கமாகச் சிறுகதை இலக்கியத்தை எதிர்த்தார்கள். சிறுகதை அல்ல. 'சிறுகத்தை' எனக் கேலி செய்தார்கள். இந்தப் பழைய பண்டிதக் கூட்டத்துக்கு மத்தியில் புதுமையை உவந்து வரவேற்கும் நெகிழ்ச்சிப்போக்குடைய பண்டிதர்கள் சிலர் இருக்கவே செய்தனர். அவர்களுள் பண்டிதமணி.சி.கணபதிப்பிள்ளை அவர்கள் முதன்மையானவர் எனலாம். தமிழுக்குப் புதிய வரவாகச் சிறுகதை இலக்கியத்தை அங்கீகரித்து வரவேற்றார். சிறுகதை இலக்கியம் பற்றித் தமக்கிருந்த அடிப்படைத் தெளிவினைப் பின்வருமாறு தெரிவித்தார். "நோக்கத்தாலும் அமைப்பாலும். ஆக்கத்தாலும். சிறுகதை புனைகதையின் வேறாம். சிறுகதையின் நுதல் பொருள் சிறிய வரம்புக்குள் அழுத்தமும் அகலமும் பொருந்துமாறு விரிக்கத்தக்கதாக இருத்தல் வேண்டும்." இவ்வாறு சிறுகதை இலக்கியத்தினை வரையறுத்துக்கூறும் பண்டிதமணி அவர்கள் தாமே ஒரு சிறுகதையைப் படைத்துள்ளார். தினபதி. சிந்தாமணி (வாரப்பதிப்பு) பத்திரிகைகளை வெளியீட்டு வந்த (தவச) குழுவினர் 'ராதா' என்னும் பத்திரிகையை வார வெளியீடாக வெளியிட்டார்கள். இவ்வாரப் பத்திரிகைகள் சினிமாச் செய்திகளையே முக்கியத்துவம் கொடுத்து வெளிவந்ததாயினும். சிறுகதை போன்ற இலக்கியங்களிற்கும் களம் அமைத்துக் கொடுத்தது. இதன் முதல் பிரதி 1964 ஒக்டோபர் 17ம் திகதி வெளியிடப்பட்டது. இந்த முதல் இதழில் பண்டிதமணி அவர்கள் 'நீதிபதியின் தீர்ப்பு' என்னும் சிறுகதையை எழுதியுள்ளார்கள் என்பது இன்று பலருக்கு புதுமையாக தோன்றலாம். இதனைத்தவிர வேறு சிறுகதைகளை பண்டிதமணி அவர்கள் எழுதி இருப்பதாக. அறிய முடியவில்லை. பண்டிதமணியின் இச்சிறுகதையினை வாசகர்களுக்கு தருகின்றோம். இப்பிரதியினை பாதுகாத்து வைத்திருந்து ஜீவநதிக்கு தந்து உதவியவர் நாடறிந்த எழுத்தாளர் தெணியான் அவர்கள்.


-ஆசிரியர்-

# நீதிபதியின் தீர்ப்பு

## பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை

ஓர் ஊரில் இளம் நீதிபதி ஒருவன் இருந்தான். தாய்க்கு ஒரே ஒரு பிள்ளை அவன். அவனுக்கு ஐந்து வயசு நடக்கும் போது தந்தை இறந்து விட்டார். அவர் நல்ல மனிதர்; நேர்மையானவர்.

தாய் பிள்ளை யைக் கண்ணுங்கருத்துமாய் வளர்த்துப் படிக்க வைத்தாள். அவன் படித்து இளம் வயசில் நீதி பதியாய் விட்டான். அவன் ஊரவர் களோடு நன்றாகப் பழகிய தில்லை, ஆயினும் அவனுக்கு நல்ல மதிப்பு உண்டு.



தாய் மேல் இது வரை யாருங்குறை சொல்லியதில்லை. ஆனால் இப்பொழுது அவளுடைய பேச்சு வார்த்தைகளில் சற்றே மாறுதல் உண்டாய் விட்டது. நீதிபதியின் தாய் அல்லவா அவள்.

மகன் நீதிபதியானதன் மேலும், தன் கையாற் சமைத்து, அவனுக்கு உணவு ஊட்டி வருகின்றாள் அவள். மகனுக்கு முருங்கைக் காய்க் குழம்பில் மிக்க விருப்பம் உண்டு. ஒவ்வொரு நாளும் முருங்கைக்காய் சமைப்பதில் அவள் தவறுவதில்லை.

வளவு வேலியில் ஒரு முருங்கை நின்றது, பெரிய முருங்கை, அடுத்த வளவு ஏழைக்குடியானவன் ஒருவனின் வளவு, முருங்கை எல்லையில் நின்றாலும், அந்தக் குடியானவன் நாட்டி வளர்த்த முருங்கை அந்த முருங்கை. அவன் தன் உழவுமாடுகளை முருங்கையடியிற் கட்டி வளர்ப்பது வழக்கம். முருங்கை பருத்துச் செழித்து, கொம்பர்களில் ஒருபகுதியை நீதிபதி வளவுக் குள்ளும் நீட்டிக் காய்த்துக் குலுங்கும். பிள்ளை களின் பள்ளிப் புத்தகச் செலவை அந்த முருங்கை பொறுத்து வந்தது.

நீதிபதியின் தாய் தங்கள் வளவுக்குள் வந்த கொப்புக்களின் காய்களை ஏழைக் குடியானவனைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேளாமலே பறித்துவந்தாள்; முருங்கையில் உரிமை கொண்டாடவுந் தொடங்கி விட்டாள். இது நீதிபதிக்குத் தெரியாது. மெல்ல மெல்ல முருங்கைக் காய் பறிப்பதற் கென்று ஒரு தடியுந் தேடிக்கொண்டாள். நீதிபதியின் தாய், இதனைக் கண்டு பெருமூச்சுவிட்டாள் ஏழைக் கமக்காரனின் மனைவி "அவர்கள் வளவுக்குள் வளர்ந்த கொப்பின் காய் அவர்களுக்கே உரியது. அதற்குக் கவலைப்படக்கூடாது' என்று மனைவியைத் தேற்றினான் ஏழைக் குடியானவன். இது இப்படியிருக்க,



நீதிபதியின் தாயின் தடி அஃதாவது முருங்கைக்காய் பறிக்குந்தடி, மெல்ல மெல்ல ஆளில்லாதசமயங்களில், குடியானவன் வளவுக்குள்ளும் நீளத்தொடங்கி விட்டது. குடியானவன் வளவுக்குள்ளே நீண்டு தொங்குகின்ற காய்களையும் அந்தத் தடி பறிக்கத் தொடங்கி விட்டது. அதிகாரி வீட்டுக் கோழியின் முட்டை குடியானவன் வீட்டு அம்மியை உடைக்கத் தொடங்கிவிட்டது. இது ஒரு நாள் இரு நாளா? எத்தனை நாளைக் கென்று கண்டுங் காணாமலிருப்பது.

ஒருநாள் அவனும் மனைவியுந் தங்கள் பிள்ளைகளின் நிலைமையைக் காட்டி முருங்கைக் காய் குடிபோவதை ஒருவாறு வெளிப்படுத்தி நீதிபதியின் தாயைக் குறையிரந்தார்கள். நீதிபதியின் தாய்க்குக் கோபம் வந்துவிட்டது. உங்கள் வளவுக்குள் நான் கால் வைத்த துண்டா என்று எரிந்து விழுந்தாள் நீதிபதியின் தாய். என்ன செய்வது! அவர்கள். நீதிபதியின் தாயின் தடி அதன்மேல் அப்பாலும் நீளத்தொடங்கிவிட்டது.

பொறுத்தே பொறுத்து, முடியாமல் ஒருநாள் குடியானவன் கோட்டில் வழக்கு வைத்துவிட்டான். நீபதியின் தாய்க்குக் கோட்டுக் கட்டளை வந்தது. 'மகன் தானே நீதிபதி குடியானவனுக்கு நல்ல பாடம் நடக்கும்' என்று கட்டளையைப் பொருள் செய்யாமலிருந்தாள், நீதிபதியின் தாய். தவணை வந்தது. அவள் கோட்டுக்குப் போகவில்லை நீதிபதி வழக்கை விசாரித்தான். உண்மை தெரிந்தது. தாயைக் குற்றவாளி என்று கண்டு, தங்கள் வளவுக்குள் வளர்ந்த கொப்புக்களில் பறித்த காய்களுக்கும் விலை போட்டு அம்முருங்கையில் தாய் பறித்த காய்களனைத்துக்கும், பணம் இறுக்கும்படி தீர்வை செய்து, அப்பணத்தை தானேகட்டி விட்டு வீட்டுக்கு வந்தான் நீதிபதி.

நீதிபதி வீட்டுக்கு வரமுன்னமே சம்பவம் தாய்க்குத் தெரிந்துவிட்டது. நீதிபதி சாப்பிடுதற்கு உட்கார்ந்தான். அன்று மிளகாய்த்துவையல் உருண்டை ஒன்று சோற்றுக்கு மேலே வீற்றிருந்தது. அவனுக்கு அத்துவையல் தேவாமிர்தம்போல் இனித்தது. முருங்கைக் காய்க் குழம்பிலும் பார்க்க அத்துவையலைச் சுவைத்துச் சுவைத்து அவன் உண்டான். வழக்கமாக உண்பதிலும் பார்க்க ஒருசோற்றவிழ் தானும் குறைவுபடாமல் நீதிபதி உண்டான்.

அவள்,

'ஈன்ற பொழுதிற் பெரிதுவந்தாளோ? என்னவோ?'

அவனுக்கு மதிப்பு உயர்ந்தது; உத்தியோகமும் உயர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதிய நம்பிக்கைகளும் அவற்றின் உள - சமூகத் தாக்கங்களும்

## (Psycho-Social Impacts of Caste-Related Beliefs)

அருள்தந்தை இராசேந்திரம் ஸ்ரலின்

### அறிமுகம்

சாதியம் என்பது தமிழரது ஆளுமை, சமூக வாழ்வு என்பனவற்றில் பரந்த செல்வாக்குச் செலுத்தும் ஒரு முக்கிய விடயம் என்பதால் சாதிய உளவியல் என்பது ஒரு தனித்துறையாக வளர்ச்சியடைவது தமிழ் சமூகத்தின் உளநலனுக்கும் சமூக வளர்ச்சிக்கும் இன்றியமையாதது என்று கருதி அதன் உருவாக்கத்தில் ஒரு கன்னி முயற்சியாக இக்கட்டுரை உருவாக்கப்படுகின்றது.

சாதிசார் மனப்பாங்குகளும், நம்பிக்கைகளும் உள - சமூகப் பரிமாணங்களைக் கொண்டவை. இவை ஒருவரது உளச்செயல்கள், உணர்ச்சி எழுச்சிகள், உறவாடல் முறைகள், சமூக நடத்தைகள், சமய நடத்தைகள்... என்பனவற்றில் செல்வாக்குச் செலுத்துகின்றன. இச்செல்வாக்கு நேர்மயமானதாகவோ அன்றேல் எதிர்மயமானதாகவோ இருக்கின்றன. நேர்மயமானவற்றைவிட எதிர்மயமான விளைவுகளே அதிகம் எனத் திட்டவட்டமாகக் கூறமுடியும். ஒரு சாதியைச் சார்ந்தவர் உயர்ந்தவர் அல்லது தாழ்ந்தவர் என்கின்ற இறுக்கமான நீண்டகால நம்பிக்கையும் அதன் அடிப்படையில் ஒருவர் வித்தியாசமாக நடத்தப்பட வேண்டும் என்பதும் தமிழ் சமூகத்தில் எழுதப்படாத நடைமுறை விதியாக உள்ளது. இதன் கோரத்தனம் சமூக, பொருளாதார, கல்வி மாற்றங்களால் நலிவடைந்து செல்கின்றன என்பது ஓரளவு உண்மை. ஆனால் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள் நிறைய உண்டு என்பதை சமூக யதார்த்தங்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

## எதிர்மயத் தாக்கங்கள்

### (Negative Impacts)

சாதிசார் நம்பிக்கைகள் ஏற்படுத்தும் எதிர்மயத் தாக்கங்களை ஆராய்வது சமத்துவம் நிறைந்த சமுதாயத்தை உருவாக்குவதில் கணிசமான செல்வாக்குச் செலுத்தக் கூடியது. எதிர்மயத்தாக்கங்கள் இரு சாராரையும் பாதிக்கின்றது என்பது உணரப்படாது இயல்பான தமிழ்ப் பண்பாட்டின் அம்சங்களில் ஒன்றாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இப்பகுதியில் எதிர்மயத் தாக்கங்கள் பல்வேறு கோணங்களில் நோக்கப்படுகின்றது.

### 1.0. உளச் செயல்கள் (Cognitive factors)

சாதிய சமத்துவம் பேணாமை இரு சாராரிலும் சிந்தனை, நம்பிக்கை ரீதியான பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்பது கவனத்தில் கொள்ளப்படுவது நல்ல மாற்றங்களுக்கு வழிவகுக்கும். அல்பேட் எலிஸ் என்னும் உளவியலாளரின் கருத்துப்படி மனிதருடைய நம்பிக்கைகள் அல்லது கண்ணோட்டங்களே அவர்களது நடத்தை, சிந்தனை, உணர்ச்சி, உறவுகள் என்பனவற்றை நிர்ணயிக்கின்றன. தவறான நம்பிக்கைகளைக் கேள்விக் குள்ளாக்கி யதார்த்த பூர்வமான நம்பிக்கைகளை உருவாக்கி வாழும்போது பல நல்ல மாற்றங்கள் உருவாகும் (ஜெறால்ட் கோறி. 1986.பக்.212-215). இது சாதிய நம்பிக்கைகளுக்கும் பொருந்தும்.

### 1.1. நம்பிக்கை முறை (Belief System)

ஆயிரக்கணக்கான வருடங்களாக சாதியப் பெயரிடல் தமிழ் மனிதர் மனதில் இறுக்கமான, மாற்றக் கடினமான சிந்தனை வடிவங்களை உருவாக்கியுள்ளன. இவை நம்பிக்கைப் படிமங்களாக உருவாகி அடிமனதில் ஒளித்திருந்து நடத்தைகள், உணர்ச்சி வெளிப்பாடுகள், உறவாடல்முறைகளில் எதிர்மயச் செல்வாக்கை செலுத்தி வருகின்றன. ஒரு சாரார் உயர்ந்தவர் மறுசாரார் தாழ்ந்தவர் என்பதே இந்த இறுக்கமான நம்பிக்கையாகும். இத்தகைய நம்பிக்கையை சமூக யதார்த்தங்களின் அடிப்படையில் மீள்பரிசோதனைக்கு உட்படுத்தாததால் ஒரு சாரார் தொடர்ந்தும் உள சமூக ரீதியாகக் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர். உயர்ந்த சாதி அல்லது தாழ்ந்த சாதி என்பது கடந்த காலத்தில் சமூக, பொருளாதார, கல்வி, சமய அடிப்படைகளைக் கொண்டிருந்தது. ஆனால் இன்று வர்ணாச்சிர தர்மம் எனும் சமய ஆதாரம் ஒன்றைத் தவிர வேறு ஆதாரம் ஏதுமற்ற முட்டைக் கோதுதான். உயர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்வுக்குக் காரணமாக இருந்த அளவுகோல்கள் கடந்த அரை நூற்றாண்டாக ஏற்பட்ட சமூக, அரசியல், சமய, பொருளாதார, கல்வி மாற்றங்களால் பாரிய மாற்றத்தை அடைந்துள்ளன. இவை கருத்தில் எடுக்கப்படாததால், மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்படாததால் இறுக்கமான நம்பிக்கைகள் தொடர்கின்றன.

சமத்துவம் மறுக்கப்படும் சமூகத்தவரைப்பற்றி சமத்துவம் மறுக்கும் சாதியினர் கொண்டுள்ள பொதுவான நம்பிக்கைகள் பின்வருமாறு:

*துப்பரவில்லாதவர்கள் எனவே தீண்டத் தகாதவர்கள்
*கல்வி அறிவு குறைந்தவர்கள்
*உயர்பதவிகளில் இடம்பெறாதவர்கள்
*பொருளாதர வசதி குறைந்தவர்கள்
*ஒழுக்கப் பண்புகள் அற்றவர்கள்

இவை இன்று உண்மையா? இதே அம்சங்கள் கொண்டவர்கள் சமத்துவம் மறுக்கும் சாதியைச் சார்ந்தவர்களிடையே இல்லையா?. மனிதப்பண்புகள், ஒழுக்கப்பண்புகள், துப்பரவும், கல்வி அறிவு, உயர்பதவி, கொண்ட சமத்துவம் மறுக்கப்பட்ட சாதி அங்கத்தவர்களை எவ்வகைக்குள் அடக்குவது?. இந்நம்பிக்கைகளை ஆதாரப்படுத்தும் யதார்த்தங்கள் பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டால் அவை இத்தகைய இறுக்கமான நம்பிக்கைளை நிரூபிப்பதாக அமையுமா அல்லது நிராகரிப்பதாக அமையுமா?

## 1.2. சுயஎண்ணக்கரு (Self-Concept)

சுயஎண்ணக்கரு என்பது ஒருவர் தனது இயல்பு, தனித்துவமான பண்புகள், தனித்துவமான நடத்தைகள் என்பன பற்றிக் கொண்டுள்ள நம்பிக்கைகளின் தொகுதியாகும் (வெயிற்றன், லொயிட், லாஸ்லி 1991.பக்.48). அதாவது ஒருவர் தன்னை எவ்வாறு காண் கின்றாரோ அதுவே அவரது சுயஎண்ணக்கருவாகும். பிறருக்கு நல்லது செய்பவர்கள் தம்மைப்பற்றி நல்ல கருத்துக்கொண்டிருப்பதும், மகிழ்ச்சியடைவதும் உண்மை. சாதி ரீதியாக அநீதி இழைக்கும் போது இதற்கான வாய்ப்பு அழிந்துவிடுகின்றது. அத்தோடு தன்னை ஒரு அநியாயமான ஆளாகக் கருதுதல் இடம்பெறுகின்றது. அன்றேல் தான் செய்யும் அநீதியை மறுத்து (Denial) அல்லது தான் செய்வது சரியானது எனத் தவறாக நியாயப்படுத்தித் (Rationalization) தன்னை ஒரு நல்ல ஆளாக எண்ணிக் கொள்ளும் ஆரோக்கியமற்ற சிந்தனை இயங்கியலை மனதில் உருவாக்குகின்றது. இதனால் சுயஎண்ணக் கரு ஆரோக்கியமான ஒன்றாக, யதார்த்தத்தை அடிப்படையாகக் கொண்டதாக அமைவதில்லை. அவ்வாறே தனக்கு அநீதி இழைக்கப் படும்போது வன்முறையைக் கையாண்டு எதிர்ப்பவரிலும் நல்ல சுய எண்ணக்கரு அழிவுறுவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கின்றது. சுயஎண்ணக்கருவில் சாதியத்தின் செல்வாக்கை சுருக்கமாக விளக்கும் கருத்தாக அ.மாக்ஸ் அவர்களின் கருத்து விளங்குகின்றது: "சாதியத்தின் தனித்துவமான பண்பு ஒவ்வொரு வரையும் ஒரு சாதியனாக உணரவைப்பதுதான் - சாதியாக உணர்வ தென்பது ஒரு சாதிக்குக் கீழாக உணர்வது மட்டுமல்ல, இன்னொரு சாதிக்கு மேலாக உணருவதும் தான்." (பக்.21)

## 1.3. சுயமதிப்பீடு (Self-Esteem)

ஒருவர் தன்னைப் பற்றிக்கொண்டுள்ள சுயஎண்ணக்கருக்களின் அடிப்படையில் தன்னை மதிப்பிட்டுப் பெறும் அறிவே சுயமதிப்பீடு எனப்படும். "தான் எவ்வளவு பெறுமதியான ஆளென ஒருவர் தன்னைப் பற்றிக் கொண்டுள்ள மதிப்பீடே சுயமதிப்பீடாகும்." (வெயிற்றன், லொயிட், லாஸ்லி. 1991. பக். 136). சுயஎண்ணக்கருவானது பிறரால் நடாத்தப்படும் முறையாலும் உருவாகும் ஒரு விடயமாகும். ஒருவர் மனிதப் பண்பு, துப்பரவு, ஒழுக்கம், பொருளாதாரம், கல்வி என்பனவற்றில் மேலோங்கி நின்றாலும் சமூகம் வழங்கிய சாதிப் பெயரின் அடிப்படையில் சமூக உறவாடல்களில் பாரபட்சம் காட்டப்படுவது சமத்துவம் மறுக்கப்படும் சாதியினரின் சுயமதிப்பீட்டிற்கு ஒரு பலத்த அடியையே கொடுக்கின்றது எனலாம். குறிப்பாகத் தன் சாதிபற்றி தாழ்வாகக் கருதும் ஒருவரில் இது தாழ்வான சுயமதிப்பீட்டையே ஏற்படுத்துகின்றது. பாரபட்சமாக நடாத்தப்படும் சமத்துவம் மறுக்கப்பட்ட சாதியினரிலும், தன் சாதியினர் ஏனையோருக்கு இழைப்பது அநீதியானது, மனிதப்பண்பற்றது எனக்கருதும் சமத்துவம் மறுக்கும் சாதி அங்கத்தவரிலும் தாழ்வான சுயமதிப்பீட்டை உருவாக்கும் தன்மையுடையது அல்லது சாதிய சுயமதிப்பீட்டில் குழப்பநிலையை உருவாக்கும். "...ஒடுக்கப்பட்ட இனத்திலிருக்கிற இவர்கள் தாழ்வு மனப்பான்மைக்கு ஆளாகிறார்கள். இதனால் தன்னம்பிக்கை, சுயமரியாதை பற்றிய எண்ணங்களை இவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும்."((பிலோமின்ராஜ்.அ. ஆகஸ்ட் 2001.பக்.24). மேலும் சமஉரிமை மறுக்கப்பட்ட சாதிய அங்கத்தவரின் கல்வி, தொழில்ரீதியான வளர்ச்சி மறுசாராரின் சுய மதிப்பீட்டிற்கு அச்சுறுத்தலாக அமைவதுண்டு. உயரப் பறந்தாலும் ஊர்க் குருவி பருந்தாகுமா போன்ற பரிகசிப்பு இதன் வெளிப்பாடே.

## 1.4. தப்பான விளக்கமளித்தல் (Cognitive Distortion)

சமத்துவம் மறுக்கப்பட்ட சமூக உறுப்பினர் மறுசாராரின் நடத்தைகளுக்கு சாதிச் சாயம் பூசுதல் அவர்களை அறியாமலே இடம்பெறுவது உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமத்துவம் மறுக்கும் சாதியினர் சில சந்தர்ப்பத்தில் சாதியக் கண்ணோட்டமின்றி நடந்துகொள்ளும் போதும்கூட சமத்துவம் மறுக்கப்பட்ட சாதி அங்கத்தவர், அவர்கள் அத்தகைய கண்ணோட்டத்தோடு நடந்து கொண்டதாக தவறாக விளக்கமளிக்கின்றனர். இது எதிர்மயமான உணர்ச்சி, நடத்தை வெளிப்பாடுகளுக்குக் காரணமாகி விடுகின்றது. "காலங்காலமாக அடிமைப்படுத்தப்பட்டவர்களது மனப்பாங்கே வித்தியாசமானது தான்." (பிலோமின் ராஜ், அ. 2001.பக்.23). சமத்துவம் மறுக்கும் சாதியினரும் மறுசாராரின் செயல்களை சாதிய வன்மத்தால் செய்வதாக விளக்கமளித்தலும், சாதிய தாழ்வு மனப்பான்மையால் செய்வதாக விளக்க மளிப்பதும் இத்தகையதே.

## 1.5.பரந்து பொதுமைப்படுத்தல் (Stereotyping)

ஒரு குறிப்பிட்ட சாதிய அங்கத்தவர்கள் சிலருடன் ஏற்படும் எதிர்மய அனுபவங்களை ஏனைய அங்கத்தவர்களுக்கும் பொதுமைப்படுத்தல் இன்னொரு உளத்திரிபுக் செயலாகும். ஒரு சாதியைச் சார்ந்த ஒருவருடன் அல்லது சிலருடன் ஏற்பட்ட அனுபவத்தை மாத்திரம் வைத்து அச்சாதி சார் அனைவரும் அத்தகைய குணாதிசயங்கள் கொண்டிருப்பதாகக் கருதுதல் இத்தகையதே. இது இருசாராரிலும் இடம்பெறும் ஒரு அடிமனச் செயற்பாடாகும். ஒவ்வொரு சாதி பற்றியும் ஏற்பட்ட கருத்துகளை உருவாக்கிய அனுபங்களை மீள நினைத்துப் பார்ப்பின் இந்த உண்மை தெளிவாகும்.

## 1.6. சமய நம்பிக்கைகளில் தவறான தெரிவு (Selectivity in Religious Beliefs)

வர்ணாச்சிரதர்மம் தாழ்ந்த சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் பண்பியல் மாற்றத்தால் உயர்ந்த சாதியாகலாம், உயர்ந்த சாதியைச் சேர்ந்தவர் பண்பின்றி நடக்கும்போது அவர் தாழ்ந்த சாதியே எனக் கூறியிருந்தாலும் இக்கருத்து புறம் தள்ளப்பட்டே வந்துள்ளது. இது இருசாரார் மனங்களிலும் பதியாத ஒன்று என்று கூறலாம். இதனால் ஆலயப்பிரவேசம் சமத்துவம் மறுக்கப்பட்ட சாதியினருக்கு எட்டாக்கனியாகின்றது.

# 2.0. உணர்ச்சி எழுச்சிகள் (Affectivity)

## 2.1. கோப வெளிப்பாடுகள் (Anger Expressions)

உரிமை மறுக்கப்படும் சமூகங்களில் ஆத்திர உணர்வு அதிகம் என்பது உளவியலாளர் ஒத்துக் கொள்ளும் விடயம். இத்தகையோரின் கோபமானது தற்போதைய நடைமுறையில் மாற்றம் அவசியம் என்பதை வெளிப்படுத்துவதாக அமைகின்றது (கேர்மன், 1990). தமிழ் மக்களுக்குச் சிங்களவர் மீதான கோபவெளிப்பாடுகள் இதனை உறுதி செய்கின்றன. தமது உரிமை மிதிக்கப்படும்போது அல்லது தாம் பாரபட்சமாக நடாத்தப்படும்போது அதை ஏற்றுச் சகிப்பவர்களைத் தவிர ஏனையோரில் ஆத்திர உணர்வுகளை உருவாக்கிப் பழிவாங்கல் நடத்தைகளுக்கு வழிகோலுகின்றன. அது எதிர்ப்பு அல்லது அழித்தல் செயல்கள் என்பனவற்றில் வெளிப்படுகின்றன. அவ்வாறே தம்மிடம் நியாயம் கேட்போரை, தம்மை எதிர்ப்போரை அல்லது தமக்கு பணிந்து போக மறுப்போரை வன்முறை மூலம் கையாள நினைப்போரிலும் கோப உணர்வு வெளிப்படுவதைக் காண்கின்றோம்.

மேலும் ஆள்மாறி வெளிப்படுத்தும் கோபம் (Displaced Anger) உறவுப் பிணக்குகளின்போது இடம் பெற்றும் வருகின்றன. சாதிச் சண்டைகளின் ஆரம்பம் சில சந்தர்ப்பத்தில் இருவரில் ஆரம்பித்துப் பலரில் பரவிப் பற்றி எரிவது இந்த உளவியல் செயற்பாட்டால் தான். தாக்கியவர் எவரோ, ஆனால் பாதிக்கப்படுவது ஏதுமறியா அப்பாவிகள்.

## 2.2. மனச்சோர்வு (Depression)

தாம் தொடர்ச்சியாகப் பாதிக்கப்படுவதாகவும், இதிலிருந்து தாம் மீள்வதற்கு வழியேதுமில்லையெனச் சிந்திப்போரிலும் மனச்சோர்வு உருவாகின்றது. பதவிகள், உயர்பதவிகள், பயிற்சிக்கான வாய்ப்புகள் என்பன மறுக்கப்படும்போது சமத்துவம் மறுக்கப்படும் சாதியினரில் ஒரு சாராரில் இத்தகைய மனச்சோர்வு உருவாகின்றது. ஆனால் இவற்றைச் சவாலாக ஏற்றுச் செயற்திட்டங்களில் இறங்கி வெற்றி காண்பவர்களில் மனச்சோர்வுக்குப் பதிலாகச் சாதனை உணர்வே ஏற்படுகின்றது.

## 2.3. வேதனை அச்சம் (Vulnerability)

சமூக நிகழ்வுகளுக்கு அழைப்பவர்கள் தம்மை பாரபட்சமாக நடாத்தி மனத்தைப் புண்படுத்தி விடுவார்களோ என்ற அச்சம் சமத்துவம் மறுக்கப்படும் சமூக அங்கத்தவர்களில் உண்டு. இதனால் அழைப்புக் கிடைத்தாலும் பங்குபற்றுவதைத் தவிர்ப்பதும், சமத்துவம் மறுக்கும் சாதியினர் இல்லாத நேரம் பார்த்துப் பங்கு பற்றுவதும் இடம்பெறுகின்றது.

## 2.4. குற்ற உணர்வு (Guilt Feeling)

நாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் செய்வது அநீதியானது என உணரத் தொடங்கும் சமத்துவம் மறுக்கும் சாதியைச் சேர்ந்த சிலர் குற்ற உணர்வுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளாகின்றனர். அக்குற்ற உணர்வு அவர்களது தவறான மனப்பாங்கை மாற்றி சமத்துவத்தோடும் பண்போடும் நடக்கத் தூண்டுகின்றது. இவ்வுணர்வு வேறு சிலரில் தமது தவறை ஏற்க மறுத்தலையும் (Denial) இன்னும் சிலரில் நியாயப் படுத்தலையும் (Rationalization) உருவாக்குகின்றது. அந்த வகையில் இவர்கள் உணர்ச்சி, அறிவு ரீதியாக முதிர்ச்சியடையாதவர்களே. அவ்வாறே தாம் அடக்கி ஒடுக்கப்படுகின்றோம் என்பதற்காக வன்முறை அழிவுகளை மேற்கொள்வோரிலும் இத்தகைய உள-உணர்ச்சிச்செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

## 3.0. உறவாடல் (Interpersonal Relationship)

### 3.1. மனிதப்பண்புகள் (Human Qualities)

மனிதனை மனிதனாக மதித்து நடத்துவதே உயர்ந்த பண்பு என்பது அனைத்துலக சமூகங்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை. அன்பு, ஏற்றுக்கொள்ளல், இரக்கம் காட்டுவது மனிதருக்கு இருக்க வேண்டிய மேலான பண்புகள் என்பதை எந்தப் பண்பாட்டுச் சமூகமும் ஏற்றுக்கொள்ளும். இதனைச் சாதிய பாரபட்சம், தீண்டாமை அழித்து விடுகின்றது. இத்தகைய உயர்ந்த பண்புகளைமீறி நடந்துகொள்ளும் எந்தச் சமூகமும் தனக்குத்தானே கேடு விளைவிக்கின்றது. தமிழரது உரிமைப் போராட்டத்தில் ஒற்றுமையை உருவாக்க முடியாது தோல்வியடைந்தமைக்கு இதுவும் ஒரு முக்கிய காரணியே. இப்பண்புகளை மறந்து செயற்படும் சமத்துவம் மறுக்கும் சாதிய அங்கத்தவரும், வன்முறையில் சமத்துவத்தை ஏற்படுத்த முயலும் சம உரிமை மறுக்கப்பட்ட சாதிய அங்கத்தவரும் இப்பண்புகளை இழந்தே செயற்படுகின்றனர்.

### 3.2. வார்த்தைப் பிரயோகம்

சமத்துவம் மறுக்கும் சாதியர் சமத்துவம் மறுக்கப்படும் சாதியைச் சார்ந்தவரோடு உரையாடும் போது மரியாதையற்ற வார்த்தைப் பிரயோகங்களில் ஈடுபடுகின்றனர். இது அடிப்படை மனிதப் பண்புக்கே இழுக்கான செயல். ஆனால் சமத்துவம் மறுக்கப்பட்டவரோ அச்சம் அல்லது நிர்ப்பந்தம் காரணமாக, மதிக்கப்படக்கூடிய உயர் பண்பு ஏதுமற்ற ஒருவருடன் உரையாடும் போதுகூட வார்த்தைப் பிரயோகங்கள் மூலம் சமூகரீதியான ஒரு மரியாதை கொடுக்க முயல்கின்றனர். அந்த வகையில் இரு சாராரும் மனிதப்பண்பை இழந்தே செயற்படு கின்றனர். தான் ஒரு குறிப்பிட்ட சாதிப்பெயரைக் கொண்ட ஆள் என்பதற்காக மதிக்கப்படவேண்டும் என்பது வேடிக்கையான விடயம்தான். சிங்களவர் தமிழரைப் பார்த்துத் தாம் சிங்களவர் என்பதற்காகத் தம்மை மதிக்குமாறு பணித்தால் நிலைமை எப்படி இருக்கும்?

### 3.3. புரிந்துணர்வு (Empathy)

ஒருவர் சாதிரீதியாக இன்னொருவரை ஒதுக்கு கின்றபொழுது அல்லது பாரபட்சமாக நடாத்தும் போது ஒதுக்கப்படுபவரில் ஏற்படும் வேதனை, துன்பம், என்பன பற்றிய புரிந்துணர்வு அற்றுப்போகின்றது. எனவே ஆரோக்கியமான உறவாடலுக்குத் தேவையான மனிதப் பண்பான புரிந்துணர்வை அழிக்கின்றது. அவ்வாறே தன்னை ஏற்பதால் சமஉரிமை மறுக்கும் சாதியினரின் குடும்பத்தினருக்கு ஏற்படக்கூடிய சமூக ரீதியான நிராகரிப்பையும், சமூக உறவாடலில், திருமண வாழ்வில் ஏற்படுத்தும் இடர்களையும் புரிந்துகொள்ளும் தன்மை சமத்துவம் மறுக்கப்பட்ட சாதிய அங்கத்தவருக்கு அற்று இருப்பதும் உண்மை. அந்நோக்கில், சாதிய சமத்துவ மின்மை இரு சாராரிலும் ஆழமான புரிந்துணர்வு வளர்ச்சிக்குக் கேடு செய்கின்றது.

### 3.4. குற்றம்சாட்டல்

தாம் செய்வது தவறு என்பதை ஏற்க முடியாத சமத்துவம் மறுக்கும் சாதியினர், சமத்துவம் மறுக்கப்படும் சாதியினர் வெளிப்படுத்தும் நியாயமான உணர்வு, நடத்தைகளை "தாழ்வு மனப் பான்மை" என்கின்ற பெயர் சூட்டலால் அலட்சியம் செய்ய அல்லது அழிக்க முயல்தல் இடம்பெறுகின்றது. தம்மீதான குற்ற உணர்வை ஏற்க மறுத்து மறுசாராரில் குற்றம் சாட்டித் தம் குற்ற உணர்வைக் குறைக்க அல்லது இல்லாமல் செய்ய எடுக்கும் முயற்சியே (Guilt Reduction Mechanism) இது எனலாம். அவ்வாறே சமஉரிமை மறுக்கப்பட்ட சாதியினர் தம் நியாயமான உரிமைகளைக் கேட்கும்போது "இவர்களுக்குப் பதவி ஆசை", "எங்கடை சாதீக்கை கலியாணம் செய்யத் திரியினம்", "எங்களோடை சமமாய் இருக்க துடிக்கினம்" என்று பொய்க் குற்றம் சாட்டல் அநியாயமாக இடம் பெறுகின்றது. இவற்றையும் குற்ற உணர்வு தணித்தல் நடத்தையாக அச்சுறுத்தல் குறைத்தல் நடத்தையாகக் கருதவேண்டும்.

### 3.5. மனம் புண்படும்போது:

இரு சாதியைச் சார்ந்தவர்களும் மறுசாரால் மனம் புண்படுத்தப்படும்போது அவரின் சாதியை இழுத்துக் கதைப்பது தன் உளநெருக்கீட்டை குறைக்க எடுக்கும் நடத்தையாகக் (Stress Reduction Behaviour) கொள்ளப்படலாம். "அவன் தன்ரை சாதிப்புத்தியைக் காட்டிப்போட்டான்" "உன்ரை சாதிப்புத்தியைக் காட்டிப்போட்டாய்" என்பன உதாரணங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.6. காதல் நடத்தை (Love-Affair)

அழகு, பண்பு அல்லது இரண்டாலும் கவரப்படும் சமத்துவம் மறுக்கும் சாதி ஆள், தான் காதலிப்பவர் சமத்துவம் மறுக்கப்படும் சாதியைச் சார்ந்தவரென அறிய வந்ததும் பல்வேறு யுக்திகளைப் பாவித்துக் கைவிடும் முயற்சியில் ஈடுபடுகின்றனர். தான் உண்மையில் காதலித்த நபரையே திருமணம் முடிக்க விரும்பு வதாகவும், ஆனால் இதனைச் சமூகம், தன் பெற்றோர், சகோதரர் ஏற்கார், சகோதரியை வேறு ஆட்கள் திருமணம் செய்யமாட்டார்கள், சகோதரிக்குச் சீதனம் கொடுக்க உழைக்க வேண்டும், இப்ப இது பற்றி யோசிக்க விருப்ப மில்லை... எனக் கூறல் போன்ற யுக்திகளைப் பிரயோகிக்கின்றனர். கைவிடப்படும் நபரின் வேதனைகள் மற்றும் எதிர்காலக் காதல் அல்லது திருமணவாழ்வில் அதன் எதிர்மயச் செல்வாக்குகளை இவர்கள் கருத்தில் கொள்வதில்லை. அந்தவகையில் அன்பு, ஏற்றுக் கொள்ளல், புரிந்துணர்வு வளர்ச்சி, நன்னெறி (நீதி, நியாயம்) என்பனவற்றின் வளர்ச்சி சமத்துவம் மறுக்கும் சாதியினரில் தடைப்படுகின்றது என்றே கூறவேண்டும். இவ்வாறு கைவிடப்பட்ட சமஉரிமை மறுக்கப்பட்ட சாதி அங்கத்தவரில், இயலாமை, ஆத்திரம், பழிவாங்கல், கற்க முடியாமை, தாழ்வான சுயமதிப்பீடு, நிம்மதியின்மை என்பன அவர்களது வாழ்வின் வளர்ச்சிக்குத் தடையாகி விடுகின்றது. சாதிமாறித் திருமணம் புரிந்தவர்கள் படும் துன்பங்களுக்கு நிறைய உதாரணங்களுண்டு. சவாலாக எடுத்துத் தான் காதலித்த சமஉரிமை மறுக்கப்பட்ட சாதிய நபரைத் திருமணம் செய்து சிலர் வாழ்கின்றனர் என்பது மறுக்க முடியாத உண்மை.

## 4.0. சமூக வாழ்வில்

## 4.1. நீதியுணர்வு (Sense of Justice)

நீதியாக நடத்தல், பிறரின் உரிமைகளை மதித்தல் என்பனவும் அனைத்துலக சமூகங்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு சமூக மதிப்பீடு. இவை நசுக்கப்படும் போது விடுதலைப் போராட்டமாக உருப்பெறுவதை இனப் பிரச்சினைகள் உலக ரீதியாக வெளிப்படுத்தி நிற்கின்றன. சாதிரீதியாக ஒருவருக்குரிய உரிமைகள் மறுக்கப்படுவதை நியாயமானதாக ஏற்பது அல்லது அநீதி, உரிமை மறுப்பு என்பனவற்றைக் கண்டும் அதை சகித்துக்கொண்டு அதை மாற்றியமைக்க எதுவும் செய்யாதிருத்தல் ஒருவரில், காணப்படவேண்டிய நீதியுணர்வை, பிறரின் உரிமை களை மதிக்கின்ற பண்பை அழிக்கின்றது என்பது உணரப்படாத உண்மை. தமிழரைப் பொறுத்தவரையில் அவர்கள் உண்மையான நீதியுணர்வு அற்றவர்கள். இவர்களது நீதி உணர்வு உண்மையானதாக இருந்தால் அது எல்லாச் சூழலிலும் குரல்கொடுக்க வைக்கும். இனப்பிரச்சினை யில் ஒரு வகை நீதி அளவுகோல், சாதிப்பிரச்சினையில் இன்னொரு நீதி அளவுகோல் என நடந்து கொள்கின்றமை இதனையே வெளிக்காட்டி நிற்கின்றது.

## 4.2. ஓரம் கட்டல், தண்டித்தல், அழித்தல்

நியாயம் கேட்கும் சாதியினரை எதிர் கொண்டு, தம்மை மாற்றியமைக்கும் திறந்த மனப்பான்மை அற்றோர் அவர்களை ஓரம்கட்ட, தண்டிக்க அல்லது அழிக்க முயலுகின்றனர். ஓரம் கட்டல் என்பது சமூக ரீதியாக முன்னரைவிட மேலும் ஒதுக்கி வைத்தலில் வெளிப்படு கின்றது. தண்டித்தல் என்பது நக்கல், உடல் ரீதியாகத் தண்டித்தல்... வடிவங்களைப் பெறுகின்றது. அழித்தல் என்பது உடல்ரீதியாக அழித்தல் அல்லது அவரின் பெயரை அல்லது கல்வி, தொழில்... ரீதியான வளர்ச்சிக்கான வாய்ப்புகளை அழித்தல் போன்ற வடிவங்களில் இடம்பெறுகின்றது.

## 4.3. சமூகப் புறக்கணிப்பு

இங்கு ஒரு சமூகத்திற்கு சட்ட ரீதியாக அல்லது நிர்வாக ரீதியாக வழங்கப்படவேண்டிய உள்ளகக் கட்டமைப்புகளை வழங்காதுவிடல் அல்லது கிடைக்க விடாது தடுத்தல் போன்ற வடிவங்களில் சமூகப் புறக்கணிப்பு நிகழ்கின்றது. ஒரு கிராமத்துக்குத் தேவை யான வீதிகளை உருவாக்க முயற்சியேதும் எடுக்கா திருத்தல், அல்லது நிதி ஒதுக்கிய திட்டங்களை நடைமுறைப்படுத்தக் காலங்கடத்தல் அல்லது பல வருடங்களுக்கு முன்னர் உருவாக்கியவற்றை மீள் செப்பனிடாமை போன்ற வகையில் செயற்படுத்தப்படும். நிதி ஒதுக்கீடுகளிலும் இத்தகைய புறக்கணிப்பைக் காணலாம். இதனால் சமத்துவம் மறுக்கும் சாதியினர் பிறருக்கு உதவும் நல்ல பண்பில் தாழ்ந்து நிற்கின்றனர்.

## 4.4. சமூக நடத்தை அளவீடு

ஒரே குற்றத்தை இரு சாதியினர் புரிந்தாலும் சாதிய சமத்துவம் மறுக்கப்பட்டவர் புரியும்போது "அது அவன்ரை(அவளின்ரை) சாதிப்புத்தி" என்று சாயமிடப் படுகின்றது. "குலத்தளவேயாகுமாம் குணம்" என எதிர் மயமாக இப்பழமொழி பாவிக்கப்படும்போது இத்தகைய அளவீடலே இடம்பெறுகின்றது. சமத்துவத்துக்கு எதிரான செயற்பாடான இது அநீதியையே வளர்க்கும்.

## 4.5. சமூகச் சடங்குகள்

நண்பர்களாகப் பழகுபவர்கள்கூட சமஉரிமை மறுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களை அச்சடங்கு களுக்கு அழைப்பதை விலக்குவதைக் காணலாம். இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களில் மனப்புண்களை விட்டுச்செல்கின்றன. மனம் புண்படுவதைத் தவிர்க்க அச்சடங்குகளில் பங்கு கொள்வதை விலக்கி நடக்கின்றனர். சமத்துவம் மறுக்கப்பட்ட அங்கத்தவர் ஒரு சமூகச் சடங்குக்கு அழைக்கப்படும் போது அல்லது அவர்கள் பிரசன்னமாக இருக்கும்போது சமஉரிமை மறுக்கும் உறுப்பினரால் மகிழ்ச்சியோடு இருக்க முடிவதில்லை. சமூக நிகழ்வுகளுக்கு சமஉரிமை மறுக்கப் பட்ட சாதியினரின் பணம், பொருள்கள் பயன்படுத்தப் படலாம் ஆனால் அவர்களின் பிரசன்னம் விரும்பத்தகாத ஒன்று. என்ன பரிதாபம்!

## 4.6. பாலியல் நடத்தை

பாலியல் நடத்தையில் சாதிய நடைமுறை கடைப்பிடிக்கப்படுவதில்லை.

## 4.7. குடிப்பழக்கம்

குடிப்பழக்கத்திலும் சாதிய நடைமுறை பேணப்படுவதில்லை. விற்கப்படும் இடம், உற்பத்தி செய்தவர், விற்பவர் ஆகியோரின் சாதி கருத்தில் கொள்ளப்படுவதில்லை. இது அந்தஸ்துக் குறைவான ஒன்றாகக் கருதப்படுவதுமில்லை.

## 4.8. உணவு குடிபானப் பழக்கங்கள்

சமத்துவம் மறுக்கப்படுவோரின் வீட்டில் உயர்ந்தவர் எனத் தம்மைக் கருதுபவர் உண்பது, குடிப்பது என்பன தவிர்க்கப்படுகின்றது. அப்படிச் செய்வதற்கு தம் சமூகம்சார் அந்தஸ்துக்கு இழுக்கு என்கின்ற யதார்த்தமற்ற சிந்தனைத் திரள்கள் காரணமாகின்றன. இதனாலே சமைத்த உணவு, தயாரித்த குடிபானம் என்பனற்றைத் தவிர்த்து சோடா, இளநீர் போன்ற குடிபானங்களை உட்கொள்ளுகின்றனர். கடைகளில் விற்கப்படும் அல்லது உணவு, குடிபானம், எந்தச் சாதியினரால் தயாரிக்கப் படுகின்றது, பரிமாறப்படுகின்றது என்பன பற்றிய கேள்வி எழுவதில்லை என்பது சாதியம் பற்றிய ஒரு விசித்திரமான விடயம்தான். மேலும் சமத்துவம் மறுக்கப்பட்ட சாதியர் தமது வீட்டிற்கு வரும் போது அவருக்கு இவற்றைக் கொடுப்பதைத் தவிர்க்க முயல்வர். தவிர்க்க முடியாத வேளை இதற்கென ஒதுக்கி வைக்கப்பட்ட வேறு பாத்திரங்களில் பரிமாறப்படும். தமக்குக் கூலி வேலை செய்வோருக்கு வாழை இலை கோல வைத்துத் தேநீர் வழங்கல் இன்றும் உள்ள நடைமுறை. இடம்பெயர்ந்து வந்த சமத்துவம் மறுக்கப்பட்ட சாதியினர் தாகமாயிருந்தால் தண்ணி அள்ளிக்குடிக்க அனுமதி மறுப்பர். மாறாகத் தாமே அள்ளிக் கொடுப்பர். ஆனால் இக்கிணற்றை வெட்டித் தண்ணி முதலில் எடுத்தவர் சமத்துவம் மறுக்கப்பட்ட சாதியினர். இத்தகைய விடயங்களில்மனம் புண்படல் பற்றிய இரக்க சிந்தனை எழுவது குறைவு.

## 4.9. வசிப்பிடத்தெரிவு

ஒத்த சாதிக் குழுக்களிடையேயே ஒருவர் குடியிருக்க விரும்புவது கண்கூடு. இது இரு சாதியினரிலும் ஒரு பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்துகின்றமையே காரணம் எனக் கொள்ளலாம். அத்தோடு சாதிய எல்லைகளைப் பேணவும் வசதியளிக்கின்றது. மேலும் கலப்புத் திருமணப் பிரச்சினையைத் தவிர்க்கும் ஒரு வழியாகவும் அமைகின்றது. சமத்துவம் மறுக்கப்பட்ட சமூகத்தவர் மத்தியில் குடியிருப்பதோ அல்லது அச்சமூகத்த வரைத் தம்மத்தியில் குடியிருக்க அனுமதிப்பதோ நடைமுறையில் மிகக்குறைவு எனலாம். காணி வாங்கல் விற்றலிலும் இந்த நடைமுறையுண்டு.

## 4.10.சாதி அடையாளம் ஏற்றல் கடினம்

தம் சாதிய அடையாளத்தை ஏற்க மறுக்கும் சமஉரிமை மறுக்கப்பட்ட சமூக அங்கத்தவர்கள் தம்மைச் சமத்துவம் மறுக்கும் சாதியினரோடு ஒன்றுபடுத்திக் காட்டும் முயற்சியில் ஈடுபடுவதுண்டு. இதனால் தமது சாதியினரிடையே வசிப்பிடத்தை விரும்பாது சமத்துவம் மறுக்கும் சாதியினரின் வசிப்பிடங்களை அண்டி தம் அந்தஸ்தை உயர்த்திக் காட்ட முயலுகின்றனர். தமது சாதியை அறிய முயலமாட்டார்கள் எனத் தப்பாக எண்ணித் தம் விலாசங்களை மாற்றிக் கொடுத்தல், தமது உறவினரைச் சொந்தம் என்று கூற மறுமத்தல் என்பனவற்றில் இவர்கள் ஈடுபடுகின்றனர். இவர்களின் நிலை வௌவாலின் நிலைதான் சொந்தச் சாதியாலும் ஏற்றுக்கொள்ளப்படாதவர்களாகவும் மற்றச் சாதி யினரால் ஏற்றுக் கொள்ளப்படாதவர்களுமாகவே இவர்கள் விளங்குகின்றனர். இத்தகையோர் கடுமையான உளஉறவுச் சிக்கலுக்கு உள்ளாகின்றனர். தம் சாதியை "காட்டிக்கொடுத்த" சொந்தச் சாதியர்மீது கோபம் கொள்வர். தம் சாதியைப் பிறர் அறிய வரக்கூடிய வாய்ப்புகள் அனைத்தையும் தவிர்க்கும் அல்லது மறுக்கும் கடும் முயற்சியில் ஈடுபடுவர். சாதிய அடையாளத்தை ஏற்க மறுத்து மறைப்போர் ஆளுமை வளர்ச்சி காண்பதற்கான வாய்ப்பு அரிது. அந்த வகையில் இவர்கள் உளநலம் குன்றியோரே. அவ்வாறே ஒருவர் சமத்துவம் மறுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்தவர் என்பதைத் தன் சாதியினர் அறியாது பழகும்போது அதை "காட்டிக்கொடுக்க" தீவிர முயற்சி எடுத்துச் செயற்படும் சமத்துவம் மறுக்கும் சாதிய அங்கத்தவரும் உளநலம் குன்றியவரே.

## 4.11. புறச் சமூக விமர்சனங்கள்

தமிழர்கள் சிங்களவர்களால் விமர்சிக்கப்படுவதும், மேற்கு நாட்டவர்களால் பரிகசிப்புக்கு உள்ளாவதும் இடம்பெறுகின்றது. தமிழர் தமிழருக்கு நீதி வழங்குவ தில்லை. ஆனால் சிங்களவரிடமிருந்து நீதி கேட்கின்றனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற விமர்சனம் உண்டு. மேற்கு நாட்டவர்களுக்கு தமிழரின் சாதிய நடைமுறை ஒரு வேடிக்கையான விடயம்.

## 5.0. கல்வி

### 5.1. பாடசாலை அனுமதி

சில பாடசாலைகளில் சமத்துவம் மறுக்கப்பட்ட சமூகத்தவருக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. அனுமதி வழங்கவேண்டிய நிர்பந்தச் சூழலில் அது சகிக்கப்படுகின்றதேயன்றி விரும்பப்படுவதில்லை.

### 5.2. சமூக ஏற்பு

சாதி ரீதியான சமூக ஏற்புக் கிடைக்காத சிறப்பாற்றல்கொண்ட மாணவர்கள் கூட கல்வியில் பின்னடைவை எதிர்நோக்குகின்றனர் (சந்தானம், 1993,பக்.584). ஆனால் இலங்கையைப் பொறுத்த வரையில் இத்தகைய மட்டுப்படுத்தல்களையும் மீறிக் கல்வியில் மேலோங்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்பது உண்மை. எனினும் திறமையுடையவர்களின் ஆற்றல் சாதிய சமஉரிமை மறுப்பால் மழுங்கடிக்கப்படுகின்றது என்பது மாற்றப்பட வேண்டிய விடயம். குறிப்பாக மாணவர்களின் ஆளுமை, கல்வி என்பவற்றை வளர்த்தெடுக்கப் பங்களிப்புச் செய்யவேண்டிய ஆசிரியர்கள், அதிபர்கள், விரிவுரையாளர்கள்... தமது பணியின் நோக்கத்தை உணர்ந்து செயற்படுவதே தமிழ் சமுதாயத்தில் கல்வியில், ஆளுமையில் சிறந்த மாணவர்களை உருவாக்கும்.

### 5.3. கல்வி வசதிகள் குறையுடைமை

சாதிய ரீதியாக சில பாடசாலைகளுக்கு வசதிகள், வாய்ப்புகள் வழங்குதில் அக்கறையின்மை அச்சமூகத்தின் கல்வி வளர்ச்சியை வேண்டுமென்று அழிப்பதாகவே கொள்ளப்பட வேண்டும். அச்சமூகத்திலுள்ள பாடசாலைக் குரிய கட்டட அல்லது ஆளணி வளங்களை வழங்காமை அல்லது கிடைப்பதைத் தடுத்துத் தமதாக்கல் என்ற முறையில் இடம்பெறுகின்றன அநீதிகள் தமிழ் சமுதாயத்தின் கல்வித் தரத்திற்கு குழிபறிக்கும் முயற்சியேயாகும்.

### 5.4. பயிற்சி வாய்ப்புகள் அழிப்பு

உள்நாட்டில், வெளிநாட்டில் பயிற்சிக்கான வாய்ப்புப் பெறத்தகுதியான சமஉரிமை மறுக்கப்பட்ட சாதிய மாணவன் இருக்க சமஉரிமை மறுக்கும் சாதியைச் சார்ந்த தகுதியற்ற மாணவனை அனுப்புவதும் தகுதியான நபர்களை ஓரம் கட்டிவிட்டு தகுதியற்ற தம் சாதியினரை ஆசிரியர்களாக, விரிவுரையாளர்களாக நியமிப்பதும் தமிழ் சமுதாயத்தின் கல்வித்தரத்துக்கு சாவு மணி. சமஉரிமை மறுக்கப்படும் சமூக மாணவர்கள் மீத்திறன் கொண்டவர்களாக விளங்கிடினும் அவர்களை ஓரம்கட்டுவது, அவர்களின் வளர்ச்சிக்கான வாய்ப்புகளை, ஊக்கத்தைக் கெடுப்பது கல்வித்தரம் வீழ்ச்சியடைய பலர் செய்யும் "சிறந்த கைங்காரியமாகும்."


## 6.0. முகாமைத்துவம்
(Management)

### 6.1.முகாமைத்துவ நடைமுறை

முகாமைத்துவத்துவ விடயத்தில் எனக்கு மேலிருந்து முகாமைத்துவம் செய்யும் நபர் எனக்குக் கீழான சாதியாக இருக்கக் கூடாது, அவன்(ள்) எனக்குக் கீழேயே பணிபுரிய வேண்டும், அவனு(ளு)க்குக் கீழே நான் பணிபுரிவது கௌரவக் குறைவு என்பது வெளிப்படையாகப் பேசப்படாத நடைமுறை. இதனால் ஒரு தொழில் அந்தஸ்துக்குரிய மரியாதை கொடுத்துப் பழகும் நல்ல பண்பு அற்றுப்போகின்றது. தன் சாதியைச் சார்ந்தவருக்கு உயர்பதவி கொடுக்க, தகுதியான இன்னொருவரின் வாய்ப்பை அழிக்க பல்வேறு யுக்திகளைப் பயன்படுத்துவது எவரும் அறியாத புதிய விடயமல்ல. தடுப்பு முயற்சிகளையும் மீறி ஒருவர் பதவிக்கு வந்தால் ஒத்துழைப்பு வழங்க மறுப்பது அல்லது மனதுள் புகைந்துகொண்டு பணியாற்றுவது, அவர் தகுதியற்றவர் என பிரச்சார முயற்சி, இழுத்து விழுத்த முயற்சி.... இப்படி எத்தனை யுக்திகள். "பசுமையான" பதவியென்றால் எவரை இழுத்து விழுத்தியாவது என் ஆளைப் போடவேண்டும் என்ற மனப்பாங்கில் செயற்படுதல் புதிய விடயமல்ல. தமிழர் நிச்சயம் பண்புள்ளவர்கள்தான்!?

### 6.2. முகாமைத்துவ ஒழுங்கு

முக்கிய தீர்மானங்கள் எடுக்கவல்ல நிர்வாக அகவட்டத்துள் தம் சாதியினரை அமர்த்த முயல்வதும் முக்கிய தீர்மானம் எடுக்க முடியாத புறவட்டப் பகுதிக்குள் சமத்துவம் மறுக்கப்படும் சாதியினரை நியமிக்க முயல்வதும் நடைமுறையிலுள்ள உண்மையே. இதற்கு விதிவிலக்குகள் உண்டு. எனினும் அவை விகிதாசாரத்தில் மிக அருமையாக தவிர்க்க முடியாத சட்டக் காரணிகளால் மட்டும் இடம் பெறும். இந்த முறையில் கல்வி, சட்டம் காரணமாக மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றது. இது அநீதி யானதும் அடிப்படை உரிமை மீறலுமாகும். இதில் சமயநிறுவனங்கள், சமூகசேவை நிறுவனங்கள் எதுவும் விதிவிலக்கானவையல்ல என்பது கசப்பான உண்மை.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6.3. உயர்பதவி, உயர்கல்வி, பயிற்சி

இவ்விடயங்களில் சமஉரிமை மறுக்கும் சாதியினருக்கு முன்னுரிமை வழங்கப்படல், அல்லது அச்சமூகத்தவருக்கான வாய்ப்பு வரும்வரை மறுசாதி அங்கத்தவருக்கான வாய்ப்பை அளிக்காது விடல், அதுவும் சாத்தியமில்லாதபோது மறுசாதிக்கான அவ்வாய்ப்பைத் தடைப்படுத்தல் அல்லது இல்லாமல் செய்தல், அல்லது இவையும் வெற்றியளிக்காதபோது மனவிருப்பமின்றிச் சகித்தல் அல்லது மறைமுகமாகவே ஒத்துழைக்காமை என்பனவற்றில் ஈடுபடுதல் என்பன வெளிப்படையாகப் பேசப்படாத செயல்முறை.

## 7. நன்னெறிச் சிந்தனை, நடத்தைகள்

சாதியக் கண்ணோட்டம் நன்னெறி விழுமியங்களைக் கடைப்பிடிப்பதில் அதிக சொல்வாக்குச் செலுத்துகின்றது. "சாதி வேற்றுமைகள் எவ்வளவு ஆழமாக நம் மனதில் ஊறிப்போயிருக்கிறதென்றால் இவ்வாறு சாதிவேற்றுமை பார்ப்பது தவறு என்ற உணர்வுகூட நமக்குத் தோன்றுவது இல்லை. மாறாக, அவை சரியே என்று நம் சொற்களாலும் செயல்களாலும் நியாயப்படுத்து கின்றோம்." (பிலோமின்ராஜ்,அ. ஆகஸ்ட் 2001.பக்.28). இக்கூற்று நமது நன்னெறிச் சிந்தனையில் சாதியக் கண்ணோட்டம் எவ்வாறு பலமான செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதை வெளிப்படுத்தி நிற்கின்றது.

என் சாதிக்கு நலமானதெல்லாம் நல்லது, ஆதரிக்கப்படவேண்டியது. வளர்க்கப்படவேண்டியது. என் சாதிக்குப் பாதகமானது அல்லது எதிரானது எல்லாம் தவறானது. எனவே அழிக்கப்பட வேண்டியது என்பது எழுதப்படாது கடைப்பிடிக்கப்படும் நன்னெறிக் கொள்கை யாகும். என் சாதியானுக்கு அடி விழுந்தால், பிழை. என் சாதியானில் பிழை இருந்தாலும்கூட மறு சாதியினரைத் தாக்கவேண்டும், தாக்கலாம் என்ற நடத்தைக் கோலங்கள் அழிந்துவிடவில்லை. என் சாதியானுக்குப் பதவி கிடைக்க இன்னொரு சாதியானுக்கு அநீதி இழைக்கலாம் என்ற சிந்தனை இன்னமும் பலரின் நடத்தைகளை நெறிப்படுத்து கின்றன. சமஉரிமை மறுக்கப்பட்ட பெண்ணைக் காதலித்து அவள் சாதி அறிந்ததும் அவளைக் கைவிடும் போது அவளில் ஏற்படக் கூடிய துன்பங்களை கருத்தி லெடுக்காது வாழ்வது நியாயப்படுத்தப்படுத்தும் போது அநீதிக்கு இசைவாக்கம் அடைவது தொடர்கதை யாகின்றதைக் காணலாம். அத்தகைய பெண் உயர்ந்த சாதி அங்கத்தவரால் கர்ப்பவதியாக்கப்பட்டால் அவளைக் கைவிடுவது அல்லது இரகசியமாகக் கொல்லி விடுவது தவறானதாகக் கொள்ளப்படுவதில்லை. சமத்துவம் மறுக்கும் பெண் சமத்துவம் மறுக்கப்பட்ட சாதி ஆணைக் காதலித்துச் சாதி தெரிந்ததும் கைவிடுவது ஏற்றுக் கொள்ளப்பட்ட நடத்தையாகவே கொள்ளப் படுகின்றது.

சாதியின் அடிப்படையில் இன்னொருவரைத் துன்புறுத்துவது, பரிகசிப்பது, ஏளனம் செய்வது அவருக்கான உரிமைகளை, வாய்ப்புகளை மறுப்பது நன்னெறிக்கு எதிரானதாகக் கருதப்படுவதில்லை.

சமஉரிமை மறுக்கும் சாதிய சிறுவர் நன்னெறிக்கு எதிரான நடத்தைகள் நியாயப்படுத்தப்படுவதைத் தம் முன் காணும்போது நன்னெறியில் வளர்ச்சியடைய முடிவ தில்லை. சாதிய அநீதியைத் தட்டிக்கேட்டால் தனக்குத் தண்டனை உண்டு என உணரும் சிறுபிள்ளைகள் நன்னெறிக்கு எதிரான விழுமியங் களுக்குத் தம்மை இசைவாக்கப்படுத்தக் கற்றுக் கொள்கின்றன. வளர்ந்த பின்னர் அநீதிக்கு எதிராகக் குரல் கொடுப்பது தமக்கும் தன் சாதிக்கும் ஆபத்தாக அமையுமென அறியும் ஒருவர் அத்தகைய செயலைக் கைவிடுகின்றனர். சமத்துவம் மறுக்கப்படும் சாதியினர் சிலவேளைகளில் தாம் பல மற்றவர்கள், ஆதரவற்றவர்கள் என்ற உணர்வால் அநீதியைச் சகித்து வாழும் போக்குடன் தம்மையறியாது வளர்வதுண்டு. அன்றேல் பிராய்டின் கண்ணோட்டத்தின் படி ஆள்மாறிய கோபமாக உருவெடுத்து எதிர்மய விளைவுகளை ஏற்படுத்தும். தமிழரின் நன்னெறியை வளர்ப்பதில் சமயங்கள் தவறிவிட்டன என்று தயக்கமின்றிக் கூறலாம்.

# நேர்மய தாக்கங்கள் (Positive Impacts)

## 1.0. உளச்செயல்களில்

### 1.1. சுயமதிப்பீடு

பெருமைப்பட்டுக்கொள்வதற்கு ஏதுமற்ற சமத்துவம் மறுக்கும் சாதிய நபர் சிலருக்குத் தம் சாதிப் பெயர் ஒன்றே பெறுமதி கொடுக்கும். அந்த வகையில் இவர்களது சுயமதிப்பீடு யதார்த்தத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதில்லை. ஆனால் இத்தகைய போலியான சுயமதிப்பீடு இவர்களுக்கு நிம்மதி கொடுக்கும் ஒரு விடயம் என்பது அவர்களைப் பொறுத்தவரையில் நல்ல அம்சம் தான்.

### 1.2. ஈடுசெய்தல்

உளவியலாளரான அல்பிறெட் ஆட்லர் கருத்துப்படி (Weiten, Lloyd, Lashley. 1991) ஒரு துறையில் தனது இலக்கை அடைய முடியாது விரக்தியடைந்தவர்கள் அதை ஈடுசெய்ய இன்னொரு துறையில் இன்பம் காண முயல்கின்றனர். இது சமத்துவம் மறுக்கப்பட்ட சமூகத்தை சார்ந்தவர்களின் வாழ்வில் உண்மை. சமூகரீதியான பாரபட்சத்தால் ஏற்பட்ட விரக்தி அவர்களை கல்வி, பொருளாதாரம் என்பனவற்றில் முன்னேற்றம் காணத் தூண்டி பல மாற்றங்களுக்கு வித்திட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 1.3. சிறப்புத் தேர்ச்சி

ஒரு சாதியைச் சார்ந்தவர் குறிப்பிட்ட தொழிலில் ஒரே சமூகமாக இயங்குவதால் அத்தொழில்பற்றிய அறிவு, நுட்பங்கள் என்பன பரிமாறப்பட்டுத் தொழில்த் தேர்ச்சி ஏற்படுகின்றது. ஆனால் குறிப்பிட்ட சாதியினரை இகழ்வாக நடத்துவதால் இத்தகைய தேர்ச்சி அழிவுறுகின்றது.

## 2.0. சமூக உறவாடலில்

### 2.1. சமூக ஏற்பும் மரியாதை பெறலும்

ஒருவர் உயர்ந்த சாதியாகக் கருதப்படும்போது அவர் தன் சொந்தச் சாதியால் ஏற்றுக்கொள்ளப்படுவது நிகழ்கின்றது. அவ்வாறே தாழ்ந்த சாதி எனப்படுபவரால் சமூகரீதியாக மதிக்கப்படுதல் அவர்களை அறியாமல் நிகழ்கின்றது. இது சமத்துவம் மறுக்கும் சாதியினருக்குச் சாதகமான அம்சமாகும்.

### 2.2. சாதகமாகப் பயன்படுத்தல்:

தமக்கு ஆதரவு திரட்டும்தேவை ஏற்படும்போது இருசாரரும் தமது சாதிய அடையாளத்தைப் பயன்படுத்து கின்றனர். இருசாரரிடையே பிணக்குகள் ஏற்படும்போது தமக்கு ஆதரவுபெற இதனைப் பயன்படுத்துகின்றனர். இது சாதிய சண்டைகளில் குரூர வடிவம் பெறுகின்றது. தேர்தல் காலத்தில் மறைமுகமாக இயங்கும்.

## முடிவுரை

சாதியப் பிரச்சினைகளின் அடித்தளம் எந்தச் சாதியில் ஒருவர் பிறக்கின்றார் என்பதிலல்ல. மாறாக அவர் குறிப்பிட்ட சாதியில் பிறந்துள்ளார் என்பதற்காக அவரைத் தரக்குறைவாக, அநீதியாக நடத்துதலே யாகும். சாதிய சமத்துவமின்மை எவ்வாறு உள நலன், ஆளுமை வளர்ச்சி, சமூகத்தின் பல்வேறு துறை வளர்ச்சி, என்பனவற்றில் மாற்றத்தை வேண்டி நிற்கின்றது என்பதனை மேற்குறிப்பிட்ட கருத்துகள் தெளிவாக வெளிப்படுத்துவதாகக் கருதுகின்றேன். இது கன்னி முயற்சி என்பதால் நிச்சயம் நிறைவான தல்ல. எதிர்காலத்தில் வேறு உளவியலாளர்கள் மேலும் ஆய்வுகளை மேற்கொண்டு தரமான பல புதிய கருத்துகளை முன்வைக்க முடியும்.

**துணைநூல்கள்**


1. புவியரசு. (2004) கீதாஞ்சலி. சென்னை: கண்ணதாசன் பதிப்பகம்.
2. சந்தானம், எஸ்.(1998). கல்வியில் மனவியல். சென்னை: சாந்தா பப்ளிசேர்ஸ்
3. மார்க்ஸ், அ. (2004). தலித் அரசியல். கோயம்புத்தூர்: புத்தா வெளியீட்டகம்.
4. Weiten, W., Lloyd, M.A., Lashley, R.L.(1991). Psychology Applied to Modern Life: Adjustment in the 90s. 3rd. Ed. California: Brooks/Cole.
5. Corey, G. (1986). Theory and Practice of Coun selling and Psychotherapy. 3rd ed. California: Brooks/Cole



## நூல் அறிமுகம் - (ஜீவநதியின் 3ஆவது வெளியீடு)




*சோ.பத்மநாதன் *ஏ.இக்பால் *கல்வயல் வே.குமாரசாமி *மேமன்கவி
*அருள்தந்தை இராசேந்திரம் ஸ்ரலின் *இ.சு.முரளிதரன் *ந.சத்தியபாலன்
*த.ஜெயசீலன் *இயல்வாணன் *சுகிர்தராணி *தாட்சாயணி
*மிருசுவிலூர் எஸ்.கார்த்திகாயினி *துவாரகன் *சிற்பி *த.கலாமணி
*ஆழியாள் *சாரங்கா தயானந்தன் *யோகேஸ்வரி சிவப்பிரகாசம்
*பிரமிளா பிரதீபன் *மைத்திரேயி *இ.ஜீவகாருண்யன் *பெரிய ஐங்கரன்
*வே.ஐ.வரதராஜன் *கண.மகேஸ்வரன் *வெற்றிவேல் துஷ்யந்தன்
*த.அஜந்தகுமார் *சபா.ஜெயராசா *ஆ.மு.சி.வேலழகன் *ம.பா.மகாலிங்கசிவம்
*வடஅல்வை சின்னராஜன் *கருணை ரவி *கெகிறாவ ஸுலைஹா
*ச.முருகானந்தம் *கெகிறாவ ஸஹானா *யோகி *எல்.வஸீம் அக்ரம்
*ஜின்னாஹ் ஷரிபுத்தீன் *தேஜஸ்வினி *மன்னார் அமுதன் *மருதம் கேதீஸ்
*க.தர்மதேவன் *கோகுலராகவன் *இணுவையூர் இலட்சுமி புத்திரன்
*கு.றஜீபன் *நிந்தவூர் ஷிப்லி *நாச்சியாதீவு பர்வீன் *வை.சாரங்கன்
*ச.லலீசன் *வேல்நந்தன் *க.சுதர்சன் *தெ.இந்திரகுமார் *ச.நிரஞ்சனி
*சிவராசா நிமலன் *கொற்றை பி.கிருஸ்ணானந்தன் *றாதிகா
*தியத்தலாவை ரிஸ்னா *கொட்டகலை ச.சிவகுமார்
*ஆரையூர்த்தாமரை *பேருவளை றபீக் மொஹிடீன் *மாயா

**நூல் - நதியில் விளையாடி...**

(60 கவிஞர்களின் கவிதைத் தொகுப்பு)

**விலை** - *200/=*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ர.விஜிதாவின்**

# நிசப்தத்தில் வழியும் உயிர்த்துடிப்பு

உன்னுள்
ஜனனித்து
உன்னுள்ளேயே
புதைந்திடக் காத்திருக்கும்
என்
ஜீவ அன்புப் பரிமாற்றம்
இது...
உனக்குத்
தெரியாமலேயே
செல்கிறது
உன்
செவியிதழ் ஓரம்தேடி...

தாயே!
உன் குருதியின்
பெருவடிவாய் - நான்.
இதம் தரும்
இளம் குளிரின் கதகதப்பில்
உறங்கும் என்னுள்
என் மனம்...
உறங்க மறுக்கின்றது
கணங்களின்
ஒவ்வொரு ஓரத்திலும்
நித்திரையிடும்
நிசப்தத் தொடர்ச்சி...
எங்கும்... எங்கும்...
ஒரே இருள்மயம்.

கண்கள்,
இமைக்க மறுக்கின்றன.
வாய்ப்பிற்காய் காத்திருக்கும்
வாய்ப்பூட்டு,
திறக்கப்படவில்லை
ஆனால்...
காதுகளின் ஓரங்களில்
சிறு, கூர்மையின்
அடையாளம்
என்னை
எழுப்பிவிடத் துடிக்கின்றன
உன்
குரலை இரப்பதற்காய்...

இதோ...
இதோ...
உன்
குருதியின் வடிவான
என்னுள் உன்குரல்,
ஓசைப்படாத அசைவுகளாய்...
நிசப்த உணர்வுகளிலும்
நிர்ப்பந்தித்து...
உண்மை உரைக்கின்றது.
உன் மனதின்
எண்ண ஓட்டத்தினுள் படரும்
சோக ஒன்றிப்பு...
என்னையும் புனைந்து
பற்றிக் கொள்கின்றது.

வெறுமையுடன்
புன்னகைத்து,
சோகமிசைத்து
சொந்தத்திற்காய்
உன்
கண்களின் வழி சுரந்திடும்
விழிநீர்...
அடக்கமற்று அலைபாய்ந்து
அர்த்தத்துடன்
பற்பல சேதிகூறி...
புறத்தினில்
என்னுடலை நனைக்கின்றது.

கண்ணீர்க் காவியங்கள்
படித்த
அனுபவம் இல்லை
ஆனால்...
உன் விழிநீர் என்னுள்
கதையுரைக்கின்றது.
உன்
மனத்திரையின் மர்மத்தைநீக்கி,
என் மனதோரம்
மனமிசைந்து
மர்மக்கதை உரைக்கின்றது.

முடியாது என்கிறாய்
"கலைத்துவிடு"
என்கிறார்கள்
என்
முதல் எதிரியாய்
என் தந்தை...
நீயோ,
கதறுகிறாய்...
கதறுகிறாய்...
என்னை எண்ணி,
கதறுகிறாய்...
உன்
உன்னத மனோ திடத்தில்
தோற்றுவிட்டேன்
என் மனதை...

முகம் காணாவிட்டாலும்
உன்
முகவாயின் வழி வழியும்
விழிநீரில்,
உன்
மனம் கண்டு கொண்டேன்
மகிழ்ந்தேன்...
வெளிவரா எனக்காய்
வெயில் வழி வெந்திடவும்
துணிந்து நிற்கும்
உன்
அன்பை எண்ணி..

கலங்காதே தாயே...
உன்
பாசக் கதையில்,
முத்திரையிட்டு
முற்றுப் புள்ளி வைத்து
முடித்துவிட
முடிவுரை எழுதிவிட்டேன்
என் உயிருக்கே...

நலன் பெறும்
உன் வாழ்விற்காய்...
உன்
அகம் பேணி,
நலம்காண ஆர்வம் பூண்டு
நானே...
கலைந்துவிட்டேன்...
உனக்காகவே
உன்னைவிட்டு...
மீண்டும்,
வேறொரு தாயின்
கர்ப்பம் நாடி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது இலக்கியத் தடம்



7

**தி.ஞானசேகரன்**

## கொண்டைக்குள் கட்டுண்டு கிடந்த ஆளுமை

எனது பதினோராவது வயதில் எனக்கு உபநயனம் நிகழ்ந்தது. உபநயனம் என்பது அந்தணர்களுக்கேயுரிய பூணூல் போடும் சடங்கு. அந்தச் சடங்கிற்காக ஐயா நூறு ரூபா விலையில் ஒரு பட்டு வேட்டி வாங்கினார். அதுவரை காலத்தில் எனக்காக வாங்கப்பட்ட உயர்ந்த ரக உடை அதுவாகத்தான் இருக்கும். அந்த மாறுகரைப் பட்டு வேட்டியை அம்மா பெருமையுடன் பலருக்கும் எடுத்துக்காட்டினார். உபநயன நிகழ்விற்கு எனது மாமா பிரதமகுருவாக இருந்து நடத்தி வைத்தார். அவரே எனக்கு வேதமந்திரங்களைக் கற்பித்தவர் என்பதை நான் முன்னைய அத்தியாயமொன்றில் குறிப்பிட்டிருக்கிறேன். இந்த உபநயன நிகழ்வு ஆயாக்கடவை ஐங்கரன் சந்நிதானத்தில் நடந்தது. பிரம்மோபதேசம் என்பது உபநயனத்தின் முக்கிய நிகழ்வாகும். இது தந்தை ஸ்தானத்தில் இருப்பவர் தனது மகனுக்கு பிரம்ம மந்திரமாகிய காயத்திரியை பிறருக்குக் கேட்கா வண்ணம் அவனது காதிலே ஓதுவதாகும். அதன்பின் அவன் மூன்றுவேளையும் சந்தியாவந்தனம் செய்ய வேண்டும். உணவு உண்பதற்கு முன்னர் இறைவனைத் தியானித்து அந்த உணவை அதற்குரிய மந்திரத்தால் நீர்கொண்டு நிவேதித்த பின்னரே உண்ண வேண்டும். இவையெல்லாம் அந்தண ஒழுக்கத்திற்குரிய முதலாவது படிநிலை. எங்கள் ஊரில் பத்துக் குடும்பங்கள் கொண்ட அக்கிரகாரம் இருந்தது. அக்கிரகாரத்திலுள்ளோர் அனைவரும் உபநயனம் முடிந்த பின்னர் மேள தாளத்துடன் என்னை ஊர்வலமாக வீட்டுக்கு அழைத்து வந்தார்கள். விகற்பம் தெரிந்த விடலைப் பருவத்தில் எனக்கு நடந்த அந்த முதலாவது சடங்கு எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

பூணூல் போட்ட பின்னர் நான் கோயிலில் பூசை செய்யும் தகுதியைப் பெற்றேன். அதன் பின்னர் சில நாட்களில் எங்களது ஈவினைப் பிள்ளையார் கோயிலிலும் ஆயாக்கடவையிலும் பூசை செய்திருக்கிறேன்.

எங்களூர் ஆங்கிலப் பாடசாலையில் அப்போது நான் ஆறாம் வகுப்பில் பயின்று கொண்டிருந்தேன். உபநயனம் நடந்து ஒருவாரகாலத்தின் பின்னரே பாடசாலைக்குச் சென்றேன். அந்த ஒருவார காலமும் நான் சந்தியாவந்தனத்தை தாடனம் பண்ணவேண்டியிருந்தது.

அக்காலகட்டத்தில் எனது பிஞ்சு உள்ளத்தைக் கீறிய ஒரு சம்பவம் பாடசாலையில் இடம்பெற்றது.

மலேசியாவிலிருந்து தியாகராசா என்ற பெயருடைய ஒரு மாணவன் புதிதாக அந்த வகுப்பில் வந்து சேர்ந்தான். கிராமப்புற மாணவர்கள் மத்தியில் அவன் மிகவும் நாகரீகமாக இருப்பான். ஏழைச் சிறுவர்கள் இடையே அவனொரு பணக்கார மாணவனாகத் தோற்றமளிப்பான். உயர்ந்த ரக உடையணிந்து காலுக்கு மேஸ் சப்பாத்து அணிந்திருப்பான்... ஆங்கிலத்திலே சரளமாக உரையாடுவான். இவற்றால் அவன் பாடசாலையின் செல்லப் பிள்ளையானான். அதிபர் பரராசசிங்கம் பாதிரியார் அவனுடன் ஆங்கிலத்திலேதான் உரையாடுவார்.

ஒருநாள் நாங்கள் சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தோம். வாங்கு ஒன்றிலே எதிரும் புதிருமாக கால்நீட்டி அமர்ந்து விளையாட்டில் ஈடுபட்டிருந்தோம். அவன் திடீரென எனது உள்ளங்காலில் தனது சப்பாத்துக் காலால் பலமாக உதைத்துவிட்டான். விளையாட்டுத் தனமாகத்தான் உதைத்திருப்பான் என இப்போது நினைத்துப் பார்க்கிறேன். எனக்கு நொந்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகே மேசையிலிருந்த எனது கொப்பியொன்றை எடுத்துச் சுருட்டி அவனது கன்னத்தில் பலமாக இரண்டு அடி கொடுத்தேன். அவன் உரத்த குரலில் ஓவென கத்தி அழத்தொடங்கினான். அருகே வகுப்பறைகளில் இருந்த ஆசிரியர்கள் மாணவர்கள் அங்கு திரண்டுவிட்டார்கள். நடந்தவற்றையெல்லாம் உயர்வகுப்பு மாணவி ஒருத்தி கவனித்துக் கொண்டிருந்தாள். அவள் நல்லவள். உண்மை பேசுபவள். சிறிது நேரத்தில் அதிபரும் பிரம்புடன் அங்கு வந்துவிட்டார். எல்லோரும் என்னை ஒரு குற்றவாளியைப் பார்ப்பதுபோலப் பார்க்கத் தொடங்கினார்கள்.

என்ன நடந்தது எனப் பாதிரியார் முதலில் அவனை விசாரித்தார். கன்னத்திலே நான் அறைந்ததை மட்டும் அவன் கூறினான்.

அவன் என்னைச் சப்பாத்துக் காலால் உதைந்ததால்தான் நான் அடித்தேன் என்றேன்.

அவன்,உதையவில்லை எனப் பொய்யுரைத்தான்.

"இல்லை, அவன் உதைத்ததை நல்லம்மா பார்த்துக் கொண்டிருந்தாள். அவளைக் கூப்பிட்டுக் கேளுங்கள்" என்றேன் நான்.

அதிபர் அவளை விசாரித்தார்.

அவள் எனது நெஞ்சிலே பாறாங்கல் ஒன்றைத் தூக்கிப்போட்டாள். "தியாகராசா, ஐயரை சப்பாத்துக் காலால் உதையவில்லை. ஐயர்தான் கொப்பியால் அவனைக் கன்னத்தில் அடித்தார்" என்றாள்.

ஓ! இப்படியும் ஒன்று இருக்கிறதா? சத்தியத்தை உரைத்துப் பார்க்கலாமா?

ஏன் மன்றோரஞ் சொன்னாள் அவள்? 'ஐயர்' என்றால் அவ்வளவு இளக்காரமா?. தலையின் முன்பகுதியை மழித்து, 'எஸ்' கொண்டை போட்டு இடுப்பில் ஒரு நாலு முழத்துண்டும் சேர்ட்டும் அணிந்திருந்த எனது மிடிமை அவளை நாகரிகத்தின் பக்கம் சாய வைத்ததா! அல்லது... என்ன காரணம்?

இது மட்டுமல்ல, அந்தச் சிறுவயதில் எனது சாதி ஆசாரத்தை மற்றவர்கள் கேலி செய்யும் சந்தர்ப்பங்கள் எத்தனையோ எனது மனதைப் புண்படுத்தியிருக்கின்றன.

ஒருநாள் பாடசாலை விட்டு வீடுவந்து எனது புத்தகப் பைக்குள் கையை விட்டபோது, அதற்குள் உயிருடன் ஒரு கடல் நண்டு! எங்களூர் தெருவில் மீனவர்கள் சைக்கிள்களில் வந்து மீன் விற்பார்கள். வகை வகையான மீன்களுடன் கடல் நண்டும் இருக்கும். தெருவில் தவறி விழுந்த நண்டை எடுத்து எனது புத்தகப் பைக்குள் போட்டிருக்கிறார்கள் என்னுடன் பாடசாலை விட்டு சேர்ந்துவரும் உயர்வகுப்பு மாணவர்கள். பிராமணியத்தைக் கேலி செய்யும் சந்தோஷம் அவர்களுக்கு!

வகுப்பில் பாடம் நடக்கும்போது ஆசிரியருக்குத் தெரியாமல் பின் வரிசை மாணவர்கள் எனது 'எஸ்' கொண்டையைப் பிடித்திழுத்து ஆய்க்கினைப் படுத்திய சந்தர்ப்பங்கள் எண்ணில் மாளா!

சிறுவயதுச் சண்டைகளின்போது என் கொண்டையைப் பிடித்து மல்லுக் கட்டிய சந்தர்ப்பங்களும், கொண்டையைப் பிடித்து கன்னத்தில் அறைந்த சந்தர்ப்பங்களும் எத்தனை!

இத்தகைய தொந்தரவுகளெல்லாம் நான் அந்தப் பாடசாலையிலிருந்து நீங்கி, உரும்பிராய் இந்துக் கல்லூரியில் ஏழாம் வகுப்பில் சேர்ந்த பின்னரும் தொடர்ந்தது.

பாடசாலைவிட்டு வீடு திரும்பும்போது சில நாட்களில் 'தட்டிபஸ்' கிடைக்கும். அதிலேறி வருவேன். தட்டி பஸ்ஸில் ஏறுவதற்கு பின்பக்கத்திலேதான் படி இருக்கும். பஸ்ஸின் நீளப்பாட்டிற்கு இரு பக்கங்களிலும் இருக்கைகள் இருக்கும். நான் பஸ்ஸில் ஏறும்போது காத்திருந்து எனது கொண்டையைப் பின்னின்று இழுப்பார்கள் எனக்குத் தெரிந்த மாணவர்களும் தெரியாத மாணவர்களும்.

பள்ளிக்கூடம் செல்லும்போது அம்மா பகல் உணவை ஒரு சாப்பாட்டுப் பெட்டியில்(Food Box) போட்டுத்தருவார். நான் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலகட்டத்தில் நான்கைந்து பிராமணப் பையன்கள் அங்கு கல்வி கற்றோம். நாங்கள் எல்லோரும் பாடசாலைக்குக் கொண்டுவரும் மதிய உணவை பாடசாலைக்கு அருகே உள்ள ஒரு பிராமண வீட்டுக்கு எடுத்துச் சென்று பிறர் கண்காணாத முறையில் சேர்ந்து உண்போம். இவ்வாறு பிறர் கண்காணாது உண்பது பரம்பரை பரம்பரையாகப் பேணப்பட்டுவந்த எங்களது சாதி ஆசாரம். இதனை எங்களது பெற்றோர் எங்களுக்குச் சொல்லித் தந்தார்கள். எங்களது வகுப்பு மாணவர்களுக்கு இது ஒரு நூதனமான நடைமுறையாக இருந்திருக்கலாம். அங்கும் ஒரு தியாகராசா இருந்தான். ஒருநாள் அவன் எனது சாப்பாட்டுப் பெட்டியைக் கையிலெடுத்து மற்ற மாணவர்களைச் சூழவிருத்தி சாப்பாட்டுப் பெட்டியைத் திறந்து அதனுள் என்ன இருக்கிற தென எல்லோருக்கும் காட்டினான். அதன் பின் அந்த உணவை நான் அருந்தவில்லை. அந்த உணவைச் சாப்பிடக் கூடாது என்று தான் நான் அந்த வயதில் அறிந்தி ருந்தேன். அவர்கள் என் சாதி ஆசாரத்தைக் கேலி செய்வதை என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

நான் ஏழாம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும் வேளையில் ஆசிரியர் ஐயாத்துரை எங்களுக்குப் பாடமெடுத்தார். உலகத் தலைவர்கள் பற்றிய பாடம் அன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்த வரிசையில் அவர் ஜவஹர்லால் நேருவைப்பற்றிக் கூறிக் கொண்டிருந்தார். அப்போது நான் நேருவைப்பற்றி வேறு ஒரு நூலில் படித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல் ஒன்றைக் கூறினேன். நேரு தினமும் காலையில் சிரசாசனம் செய்வார். அதனை நான் கூறப்போய், "நேரு தினமும் காலையில் எழுந்தவுடன் தலைகீழாக நிற்பார்" என்று கூறிவிட்டேன்... வகுப்பில் இருந்த மாணவர்கள் அத்தனைபேரும் கொல்லென்று சிரித்துவிட்டனர். ஐயாத்துரை மாஸ்டருக்கு நேரு தினமும் சிரசாசனம் செய்வது தெரியவில்லையோ என்னவோ, அவர் நான் தன்னைக் கேலி செய்ததாக நினைத்துவிட்டார். உடனே என்னைப் பார்த்து, "காக்கொத்து அரிசிக்கும் கண்டல் வாழைக்காய்க்கும் காதவழி போற பிராமணன்" என்றார்.

ஷேக்ஸ்பியரின் ஜூலியசீசர் நாடகத்திலே ஒரு காட்சிவரும். ஜூலியசீசரைக் கொலை செய்யும் இறுதிக்கட்டம். சீசருக்கு நெருக்கமாக இருந்தவர்களே சீசரின் நெஞ்சிலே மாறி மாறி கத்தியால் குத்துவார்கள். சீசரின் மிக நெருங்கிய நண்பன் புரூட்டஸ் கத்தியை உருவி சீசரின் நெஞ்சிலே பாய்ச்சிபோது, சீசர் கேட்பான் "நீயுமா புரூட்டஸ்!"

ஆங்கிலப் பாடசாலையில், ராணி ரீச்சர் எனக்குப் படிப்பித்த இந்தக்காட்சிதான் என் நெஞ்சிலே அப்போது நிழலாடியது.

"நீங்களுமா சேர்?"

இதுவரைகாலமும் சகமாணவர்களின் கேலிக்கு ஆளாகிய நான் இப்போது ஓர் ஆசிரியரின் கேலிக்கு ஆளாகியிருக்கிறேன். ஒரு பிஞ்சு உள்ளத்தை பொசுக்கக் கூடாது என்பது ஓர் ஆசிரியருக்குமா தெரியவில்லை? அல்லது சமூகம் பிராமணரைப்பற்றி இவ்வாறு தான் கணித்து வைத்திருக்கிறதா? பிராமணனை கேலிக்கும் கிண்டலுக்கும் உள்ளாக்கலாம், அவனை அவமானப் படுத்தலாம் என்று சமூகம் எண்ணுகிறதா?

பிராமணரை உதட்டளவில் உயர்வாகவும் உள்ளத்தளவில் தாழ்வாகவும் கணித்து வைத்திருக்கும் ஒரு சமூகத்தின் பொய்ம்முகம் எனக்குப் புரியத் தொடங்கியது.

பஞ்மர்கள் வரிசையில்தான் பிராமணனும் வைக்கப்பட்டிருக்கிறானா?

டொமினிக் ஜீவாவும் இப்படித்தான் தனது இளம்பராயத்தில் ஓர் ஆசிரியரின் நாவினால் சுடப்பட்டார் என்பதைத் தனது சுயசரிதத்தில் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்:

"பயம் என்னவென்று அறியாமல் வளர்ந்த பொடியன் நான். துடுப்புமிக்கவன். படிப்பில் சுழியன். சென் மேரீஸ் பாடசாலையில் நான் கல்வி கற்றுக் கொண்டிருந்த வேளையில் ஒரு சம்பவம் நடந்தது. அது எனது இளம் ஆத்மாவைக் காயப்படுத்தி விட்டது. அதன் தழும்புகள் இன்றும்கூட எனது நெஞ்சிலே அடிமட்டத்தில் உண்டு. எனது கெட்டிக்காரத்தனத்தை நிரூபிக்கப்போய் ஆசிரியரின் கடுப்பை நேர் கொண்டவன். அவர்கூட ஒரு கிறிஸ்தவர்தான். யார் சொன்னது கிறிஸ்தவர்களிடம் சாதித் திமிர் இல்லையென்று? - குப்பென்று முகம் வியர்க்க என்னை ஒரு சத்துராதியை போலப் பார்த்து உரக்கக் கத்தினார் அவர். "ஏன்ரா எங்களின்ர உயிரை வாங்குறீங்க? போய்ச் சிரையுங்கோவன்ரா!"(30)

சமூகத்தின் இத்தகைய கேலிகளுக்கும் கிண்டல்களுக்கும் அவமானங்களுக்கும் நான் ஆளாவதிலிருந்து விடுபடவேண்டும் என்ற எண்ணம் என் அடிமனதில் துளிர் விடத் தொடங்கியது.

எனது குலத் தொழிலை செய்வதை விடுத்து நான் வேறொரு தொழிலைத் தேடிக் கொள்ள வேண்டும். அதற்கான கல்வியை நான் பெறவேண்டும் என்ற எண்ணம் என் மனதில் ஆழமாகப் பதியத் தொடங்கியது. எனது தாயாரிடம் என் எண்ணத்தைக் கூறியபோது அவரும் அதற்குத் துணை நின்றார். இத்தகைய ஒரு எண்ணம் தோன்றிய பின்னர் முதலில் எனது கொண்டையை நீக்கிவிடத் தீர்மானித்தேன். அதுபற்றி எனது தாயாரிடம் கூறியபோது, அதனை அவர் எனது தந்தைக்குத் தயக்கத்துடன் கூறினார்.

என்ன ஆச்சரியம்! ஐயா எவ்வித மறுப்பும் தெரிவிக்கவில்லை!

ஒருவேளை அவருக்குத் தனது தொழிலில் கிடைத்த அனுபவங்கள் இத்தகையதொரு மன மாற்றத்திற்கு அடிகோலியிருக்கலாம்.

நான் ஏழாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த வேளை தலையின் முன் பகுதியில் மழித்திருந்த தலை மயிரை வளர்த்தெடுத்தேன். கொண்டையை நாவிதனைக் கொண்டு களைந்துவிட்டேன். காதுகளில் இருந்த கடுக்கன்களையும் கழற்றிக் கொண்டேன்.

நான் ஒரு புது மனிதனானேன். அந்தக் கொண்டைக்குள் இவ்வளவு காலமும் எனது திறமை, ஆண்மை, வீரியம், துடிதுடிப்பு அத்தனையும் முடிந்து வைக்கப்பட்டிருப்பதை அப்போதுதான் உணரத் தலைப்பட்டேன். என்னிடம் இருந்த கூச்ச சுபாவம் எங்கோ ஓடி மறைந்துவிட்டதை அறிந்து கொண்டேன்.

அடுத்த வாரம் எங்களது கல்லூரி மாணவர் தேர்ச்சிச் சங்கத்தில் திருவள்ளுவர் விழா நடைபெறுவதற்கு ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. நானும் அதிலே கலந்துகொண்டு பேசப்போகிறேன் என நானாகவே முன்வந்து எனது பெயரைக் கொடுத்தேன். "வள்ளுவரும் வாழ்க்கையும்" என்ற தலைப்பில் நான்பேசிய எனது கன்னிப்பேச்சு மாணவர்களிடையே பெரும் பாராட்டைப் பெற்றது. மாணவர் தேர்ச்சிச் சங்கத்திற்குப் பொறுப்பாயிருந்த ஆசிரியர் சபாநாயகம் என்னைப் பெரிதும் பாராட்டினார்.

நான் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் கல்வி பயின்ற காலப் பகுதியில் முதலில் ஸ்ரீநிவாசன் என்பவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் எம். இளையதம்பியும் கடைசியாக கம்யூனிஸ்ட் வைத்திலிங்கமும் அதிபர்களாக இருந்தார்கள். இவர்கள் எல்லோரது கணிப்புக்குமுரிய மாணவனாக நான் குறுகிய காலத்தில் என்னை வளர்த்துக் கொண்டேன்.

கல்லூரியில் எந்த முக்கிய விழாக்களோ நிகழ்வுகளோ இடம்பெறும்போது நிச்சயம் அதிலே எனது பங்களிப்பும் இருக்கும். ஒவ்வொரு வகுப்பாக நான் ஏற்றம் பெற்ற போதும் எனது செயற்பாடுகளும் ஏற்றம் பெற்றுக் கொண்டே இருந்தன. பாடசாலையின் மாணவர் தேர்ச்சிச் சங்கம், ஆங்கில மன்றம், எச்.எஸ்.சி. யூனியன் ஆகியவற்றின் தலைமைப் பதவிகள் என்னைத் தேடிவந்தன. விவாத அரங்குகள், பேச்சுப்போட்டிகளில் எனக்குப் பல்வேறு பரிசுகள் கிடைத்தன. நான் 1958ல் கல்லூரியின் மாணவர் தலைவனானேன். 1960ல் பாடசாலையின் சகல துறைச் சிறப்பு மாணவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் கௌரவிக்கப்பட்டேன்.

நான் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் உயர்வகுப்பு மாணவனாக இருந்தவேளை கலாநிதி துரை.மனோகரன் கீழ்வகுப்பில் கல்வி பயின்று கொண்டிருந்தார். அவர் எனது கல்லூரி வாழ்க்கையை நேரில்கண்டவர். எனது 'புதிய சுவடுகள்' நாவலின் இரண்டாம் பதிப்புக்கு அவர் எழுதிய முன்னுரையில், எனது கல்லூரிச் செயற்பாடுகளில் சிலவற்றைச் சிலாகித்துக் குறிப்பிட்டிருக்கிறார். அதனை இத்தொடரின் முன் அத்தியாயம் ஒன்றிலே தந்திருக்கிறேன்.

எனது கல்லூரி வாழ்க்கையில் மறக்கமுடியாத ஆசிரியர்கள் சிலரை இங்கு குறிப்பிடவேண்டும். ஆசிரியர் சபாநாயகம் உயர்வகுப்பில் எனது ஆங்கில ஆசிரியராக விளங்கியவர். ஆங்கிலப்பாடத்தில் நான் சிறப்புத் தேர்ச்சி பெறுவதற்கு இவரே காரணராய் இருந்தவர். ஆங்கில நாவலாசிரியர்களை, அவர்களது படைப்புகளை அறிமுகம் செய்தவர். மாணவர் தேர்ச்சிச் சங்கத்தின் பொறுப் பாசிரியராக இருந்து எனது பேச்சுக் கலையை, விவாதத் திறனை வளர்த்தெடுக்க ஊக்கம் தந்தவர். தமிழாசிரியர் த.வடிவேலன். எனக்கு தமிழ் மொழியை சிறப்பாகக் கையாளும் கலையைக் கற்றுத்தந்தவர். ஆசிரியர் ஆறுமுகம் கல்லூரியன் 'டிஸிப்பிளின் மாஸ்ரர்'. உலக சரித்திரம் கற்பித்தவரும் அவரே. பிரான்சிய அரசியற் புரட்சி பற்றி சுவைபட அவர் கற்பித்த முறையை இன்றும் என்னால் மறக்கமுடியாது. ஆசிரியர்களான பொன்னம்பலம், ஞானசுந்தரம், வி.இளையதம்பி, தவமணி ரீச்சர், ஞானாம்பாள் ரீச்சர் இவர்கள் எல்லோரும் ஏதோவொரு வகையில் எனது ஆளுமையை வளர்த்தெடுப்பதில் அக்கறையுடன் செயற்பட்டவர்கள்.

அந்தக் காலத்தில் எங்கள் அதிபர் கம்யூனிஸ்ட் வைத்திலிங்கத்தை அறியாதார் யாரும் இருக்கமுடியாது. அவர் தனது உயர்கல்வியை இங்கிலாந்தில் பெற்றவர். அவ்வேளையில் அங்குள்ள இடதுசாரிகளின் தொடர்பால் ஐரோப்பாவிலேயே கம்யூனிஸ்ட் கட்சியில் தன்னைப் பிணைத்துக் கொண்டவர். அங்கு இந்திரா காந்தியுடன் அரசியல் உறவுகொண்டு இயங்கியவர். பெரும் சிந்தனையாளர்.

அவர் எனக்கு உயர்வகுப்பில் கணித ஆசிரியராக இருந்தார். வகுப்பிலே சில நாட்கள் கணிதம் படிப்பிப்பதை மறந்து, சோவியத் நாட்டைப் பற்றியும் அதன் செயற்பாடுகள் பற்றியும் எடுத்துக் கூறுவார். அமெரிக்காவும் சோவியத் யூனியனும் போட்டிபோட்டுக்கொண்டு விண்வெளி ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த காலம் அது. அவைபற்றி யெல்லாம் மாணவர்க்கு விளக்கம் தருவார். எவ்வாறு விண்வெளி 'றொக்கட்டு'கள் புவியீர்ப்பிலிருந்து விடுபட்டு அண்டவெளிக்குச் செல்கின்றன, விண்வெளிக் கோளங்கள் எவ்வாறு பூமியை வலம் வருகின்றன, இந்த ஆராய்ச்சிகளால் கிடைத்த உப பயன்கள் யாவை என்பவற்றிற்கான விளக்கங்களையெல்லாம் கரும்பலகையில் படங்கள் வரைந்து விளக்குவார். மிகச் சுவாரஸ்யமாக மாணவர்களாகிய நாங்கள் அவற்றைச் செவி மடுப்போம். அன்று அவர் விண்வெளி ஆராய்ச்சி பற்றி தந்த விளக்கங்கள்தான் இன்றுவரை பசுமரத்தாணியாக எனது விஞ்ஞான அறிவில் தொக்கி நிற்கின்றன. அவர் ஒரு தீவிர கம்யூனிஸ்ட்டாக இருந்தபோதும் என்றைக்குமே கம்யூனிஸ தத்துவத்தை தனது வகுப்பு மாணவருக்குத் திணிக்க முயன்றவரல்லர்.

அந்தக் கல்லூரிக் காலம் எனது வாழ்க்கை ஓட்டத்தை மாற்றுத் தண்டவாளத்தில் திருப்பிவிட்ட காலம். அது ஒரு பொற்காலம்!

இந்தக் காலகட்டத்தில் எங்களூர் சனசமுக நிலையத்தின் முன்னேற்றப் பணிகளிலும் என்னை இணைத்துக் கொண்டேன். இந்தச் சனசமூக நிலையத்தின் நிர்வாக உறுப்பினர், செயலாளர், நூலகர் ஆகிய பதவிகளில் வெவ்வேறு காலப்பகுதிகளில் நான் பணி புரிந்தேன்.

வாசிகசாலையுடன் எனக்கிருந்த உறவு ஆத்மார்த்தமானது. நான் எழுத்தாளனாக உருவாக அதனுடன் எனக்கிருந்த தொடர்பு மிக முக்கியமானது. நான் எழுதிய முதலாவது நாவல் புதிய சுவடுகளில் ஏழு அத்தியாயங்கள் வாசிகசாலையில் நடைபெறுவதாக எழுதியுள்ளேன். அந்த நாவலில் வரும் பின்வரும் பகுதி வாசிகசாலையின் ஒருகாலகட்ட நிலைமையை அச்சொட்டாக அப்படியே எடுத்துக் காட்டுகிறது.

*"வாசிகசாலையில் சீட்டாட்டம் உச்சக்கட்டத்தை அடைந்தது. அம்பலவாணரும் அவரது நண்பர்களும் தான் சீட்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள்.*

*எப்போதோ அருகே இருக்கும் பிள்ளையார்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கோவிலுக்கு நேர்த்தி வைத்து யாரோ புண்ணிய வானால் கட்டப்பட்டது அந்தத் தங்குமடம். சுற்றாடலில் இருக்கும் தோட்டங்களில் உழைத்துக் களைத்த கமக்காரர்களும், வழிப்போக்கர்களும் அந்த மடத்திலே வந்து களைப்பாறுவார்கள். வேலையற்றுத் திரிபவர்களும், வேலைசெய்து ஓய்வுபெற்ற சில பென்சனியர்களுங்கூடத் தமது பொழுதைக் கழிப்பதற்கு அங்கு வருவார்கள். மடத்தைச் சுற்றியுள்ள சூழலில் ஓங்கி வளர்ந்திருக்கும் பெருவிருட்சங்களைத் தழுவிவரும் இதமான காற்றின் சுகத்தையும் சிலகாலங்களில் அந்தக் காற்றில் கலந்துவரும் மகிழம்பூ வாசனையையும் சேர்த்து அனுபவிப்பதற்கென்றே அங்கு வருபவர்களும் உண்டு. துடிப்புள்ள இளைஞர்கள் சிலரால் இப்போது அந்த மடம் வாசிகசாலையாக மாற்றப்பட்டிருக்கிறது. இதனால் பத்திரிகை வாசிப்பதற்காகச் சிலரும் அங்கு வருவதுண்டு.*

*வாசிகசாலையை ஏற்படுத்திய இளைஞர்களால் அதற்குரிய கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்த முடியவில்லை. இதன் காரணமாக அந்தக் கட்டிடம் தங்கு மடமும் வாசிகசாலையும் சேர்ந்த ஒரு படிமுறை வளர்ச்சியை அடைந்திருந்தது.*

*'கம்மாரிசு' எனக் கூறியபடி கடைசிச் சீட்டை உற்சாகமாக அடித்தார் அம்பலவாணர்"*

இத்தகைய ஒரு நிலைமையிலிருந்த அந்த வாசிகசாலையை சீரமைக்கவேண்டிய ஒரு சவால் எங்கள் முன் இருந்தது. இங்கு 'பெருங்குடி'மக்கள் ஆட்சி செலுத்துவர். நாம் அவர்களிடம் தயவாகக் கூறினாலும் தமக்கேயுரித்தான பாஷையில் பதில் சொல்வர். சண்டித் தனத்தால் எம்மை அடக்கியாள்வர். வாசிகசாலையின் பெரு விழாக்களின்போது இவர்களின் தலையீட்டினை தவிர்த்துக்கொள்ள பெரும்பாடு படவேண்டியிருக்கும். கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன். இரசிகமணி கனக. செந்திநாதன். ஈழநாடு ஆசிரியர் கே. பி. ஹரன் ஆகியோர் எனது பதவிக்காலத்தில் எங்கள் வாசிக சாலையின் ஆண்டுவிழாக்களின்போது வந்து சிறப்புரை யாற்றியிருக்கிறார்கள். இந்தப் பெருங்குடிமக்களை பேச்சாளர்கள் அருகே நெருங்கவிடாமல் தவிர்ப்பதற்கு அவர்களை அந்நேரங்களில் 'தண்ணீர்ப் பந்தல்'களுக்கு அழைத்துச் சென்று 'தாகசாந்தி' செய்விக்க ஆட்களை நியமித்த நாட்களும் இருக்கின்றன. இந்த வாசிக சாலையின் பொறுப்பாளராக நான் இருந்த காலத்தில் எனது நண்பன் இராமசாமியுடன் இணைந்து நூல்நிலையத்தை விரிவாக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டேன். அதே வேளை நூல் நிலையத்திலிருந்த ஆயிரக்கணக்கான நூல்களையும் வாசித்து முடித்தேன்.

எனது செயற்திறனை வளர்த்தெடுத்ததிலும் எனது ஆளுமை வளர்ச்சியிலும் இந்த வாசிகசாலைக்கும் பெரும் பங்குண்டு.

நான் எழுதிய சிறுகதைகளான, 'கோணல்கள்', 'குமிழி', 'சங்கு சுட்டாலும்' ஆகியவற்றிலும் வாசிகசாலையும் அதன் சுற்றுப்புறச் சூழலும் இடம் பெற்றுள்ளன.

நான் உரும்பராய் இந்துக்கல்லூரியில் எச்.எஸ்.சி. வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோது எனக்கு தொழில் வாய்ப்புக்கான கடிதம் வந்தது.

"அப்போதிக்கரி" என அந்தக்காலத்தில் விளங்கிய உதவி மருத்துவருக்கான போட்டிப் பரீட்சையில் நான் சித்தி பெற்றிருந்தேன். பெருந்தோட்டப் பகுதிக்கான மருத்துவ ராக பயிற்சிபெறத் தெரிவாகி அதற்கான கல்வியை கொழும்பு மருத்துவக் கல்லூரியில் நான் பெற வேண்டியிருந்தது.

எனக்கு இது பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. உதவி மருத்துவராக சில வருடங்கள் பணிபுரிந்து அனுபவத்தைப் பெற்றுவிட்டால், அரசாங்கத்தில் பதிவுபெற்ற வைத்தியராகி, சட்டரீதியாக தனியார் வைத்திய நிலையம் ஒன்றை நடத்தும் தகுதி கிடைக்கும். பிற்காலத்தில் ஊரோடு வந்து எங்களது கிராம மக்களுக்குச் சேவை செய்யலாம் என எண்ணினேன்.

இந்தத் தருணத்தில் நான் மருத்துவர் பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட்டது ஊரிலே பெரிய சலசலப்பை ஏற்படுத்தத் தொடங்கியது. மருத்துவத் தொழில் பிராமணனுக்கு ஏற்றதல்ல. பிணத்தை வெட்டிப் பார்க்க வேண்டும், பிணத்தோடு புழங்கவேண்டும் எனவே இந்தத் தொழிலை பிராமணன் ஏற்கக்கூடாது எனச் சில சாதிமான்கள் எங்கள் வீட்டிற்கு வந்து கூறினர். எங்களது உறவினர்களிடம் கூறினர் பலர்.

ஐயாவும் அம்மாவும் என்ன கூறப்போகிறார்களோ என நான் சஞ்சலமடைந்தேன்.

ஐயாவுக்கு இதனை எடுத்துரைக்க அம்மாவுக்குத் துணிவிருக்காது. அம்மாவின் குலதெய்வம் யாழ்ப்பாணத்திலுள்ள வண்ணை வைத்தீஸ்வரர். இப்படியான சந்தர்ப்பங்களில் தனது குலதெய்வத்தை அம்மா நீள நினைந்துருகுவார். 'வைத்தியநாதா! என் பிள்ளை வைத்தியத் தொழிலுக்குப் போகலாமா என நீயே முடிவு செய்துகொள்' என வேண்டுதல் செய்திருப்பார்.

ஐயா மௌனம் காத்தார். அந்த மௌனமொழி எனக்குப் பலவற்றைக் கூறத் தொடங்கியது.

(இனி அடுத்த இதழில்)

***உசாத்துணை:***

(30) எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம் - டொமினிக் ஜீவா. மல்லிகைப்பந்தல் வெளியீடு- 1999.(பக். 02)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மை சுடும்!

**ஆனந்தி**

பயணப்பொதிகள் அடங்கிய வண்டியைத் தள்ளிக்கொண்டு, ஆதவன் வெளியேவரும் போது, வரவேற்பு மண்டபத்தில், அம்மா அமர்ந்திருப்பது, மங்கலான ஒரு நிழற்காட்சி போல், கண்களில் படர்ந்தது. இரவு முழுவதுமே தூங்காததால், பார்வை பிடிபடவில்லை, தூரத்து நிழல்கள் போல் எப்பவோ கை நழுவிப்போன வாழ்க்கை அனுபவங்கள் நடுவே, பத்து வருடங்களுக்கு முன் பார்த்த அம்மாவின் முகம் கூட, நீரில் எழுத்துப் போல், மங்கலான ஒரு காட்சிப் படலமாய் கண்களில் ஒட்ட மறுத்தது. இதைவிட முக்கியம், உயிரோட்டமான ஒரு சிரஞ்சீவி வாழ்க்கையின் நினைவுத்தடங்கள் என்று உணரும் போது, எங்கேயோ தான் தடம் புரண்டு கவிழ்ந்து போயிருப்பதாய், மனம் உளைச்சலுற்றது. இந்த உளைச்சலின் நடுவே, அம்மாவை, அவனது உறவுகளை நேருக்கு நேர் எதிர்கொள்வதில்,தனக்கு விபரீதமான சூழ்நிலையைத் தோற்றுவிக்கிற ஒரு பெரும் சவாலே காத்திருப்பதாய் அவன் கவலையோடு நினைவு கூர்ந்தான்.

அம்மா அவனை வேறுவிதமாக எதிர்பார்த்திருக்கலாம். உண்மையில் அவன் பழைய ஆதவன் இல்லை என்பதை, உணர்வுபூர்வமாய் அவள் அறிந்து கொள்ள எவ்வளவு நேரம் பிடிக்கும். இது ஒரு காலக்கணக்கில், பத்து வருடத்திற்கு மேலாக லண்டனில் வாழ நேர்ந்த ஒரு கலாச்சாரத்திரிபு நிலைக்குட்பட்டு மாறிப்போன, சுயம் விட்டுப் போன ஆளுமையில் தரம் குறைந்து நலிவுற்றிருக்கும் ஒரு தனிமனிதன் நானென்பதை அம்மா மனம் கோணாமல் ஏற்றுக் கொள்ளவேண்டுமே என்ற கவலை அவனுக்கு. அவள் அவனை எவ்வளவு தூரம் நம்பியிருக்கிறாள் புருஷன் துணையின்றிச் சிறுவயதிலிருந்தே அவனை மிகவும் கஷ்டப்பட்டு, வளர்த்து ஆளாக்கியவள் அவள். சிறுவயதிலிருந்தே, அவன் நல்ல படிப்பாளி பேராதனைப்பள்ளிக்கூடத்தில் கணிதத்துறையில், விரிவுரையாளனாகப் பணியாற்றியவன். மேலும் அதில் சித்திகள் பல பெற்றுப் பிரகாசிக்கவே அவன் லண்டன் சென்றான். ஆனால் அங்கே நடந்தது என்ன? அவன் அரும்பாடுபட்டுக் கட்டிக்காத்து வந்த ஒரு நெறியான பண்பட்ட வாழ்க்கை யோகமே, களங்கப்பட்டுத் துருப்பிடித்தாற் போல் இப்போது அவன் நிலையென்ன?

இதை எப்படி அம்மாவிடம் வாய்விட்டுக் கூறுவதென்று அவனுக்குப் புரியவில்லை. அவனைக் கண்டவுடன், அவள் முகத்தில் தான் என்னவொரு சந்தோஷக் களை, அவள் மட்டுந்தானா? கூட தம்பி ராசா வேறு நிற்கிறானே.. எப்படி அவர்களை எதிர் கொள்வது எந்த முகத்தோடு இவர்கள் முன் நான் போவேன் எனக்குள் அறியாத இன்னுமொரு முகம் இருக்கிறதே அந்த முகத்திற்குச் சொந்தக்காரன் நான் தானென்பதை அறிந்தால் அம்மாவின் நிலை என்னவாகும்? அவனுக்குப் புரியவில்லை.

எங்கெங்கோ, மனிதர்கள் சிதறிக் கிடக்கிறார்கள். நடுவே வாழ்க்கை என்ற வேள்வி அவரவர் நிலைக்கேற்ப, மாறியும், உயிர் சஞ்சாரமில்லாது தடம் புரண்டு போன நிலையிலும், தறிகெட்டு ஓடுகிறது. இதில் உயிர்ப்பிரக்ஞை இல்லா தொழிந்த, நானும் ஒரு துரும்பு மனிதன் போலவேயானேனென்பதை, அம்மா எவ்வாறு ஜீரணிப்பாள்? இது அவளுக்குப் பெரும் கவலையைத் தராதா? இனி நான் என்ன செய்வது.

அம்மா அவன் வருகிற நிழலையே பார்த்துக் கொண்டிருந்தாள். அது வெறும் நிழலாகத் தெரியவில்லை. அவள் கண்களுக்கு அவன் எப்பேர்ப்பட்ட பெரிய மனிதன். எங்கள் வாழ்க்கை முழுவதும் உச்சம் பெற அவன் கையே மலர் தூவிக் கொண்டிருப்பதாய், அவள் நினைப்பு, கண்முன்னால் தோன்றும் நிழல்களிடையே பிரமாண்டமானதொரு, விசுவரூபமாய், அவன் நிற்பது போல அவளுக்குப் பிரமை, வெறும் பிரமைதான்.

ஆகக்குறைந்தது இது ஒருவிஸ்பரூப பரிணாம வளர்ச்சியல்ல. நூறாண்டோ, அதற்கு முன்போ, சாவில் கரைந்து போகும் நிழல்கள் தானே எல்லோர் கதையும். இதில் நிஜத்தின் உருத் தோன்றலாய் அவனை மட்டும் எப்படி நம்பலாம்? அதிலும் நம்பகத்தன்மையற்ற பொய்மை வேறு. மறைந்து கிடக்கிறதே. இது ஒன்றும் அறியாமல் தான் அம்மாவின், மூக்கு முட்டிய புளுகம்.

ராசா வேறு மாலைபோடாத குறையாக ஓடிவந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேற்றபோது வேறு வழியின்றி அவனும் கை குலுக்கினான்.

'எப்படியிருக்கிறாய் ராசா?

'நல்லாய் இருக்கிறனண்ணை?

'வந்து கனநேரமே...?'

'இல்லையண்ணை வந்து அரை மணித்தியாலம்தானாகுது.

'நீ நல்லாய் படிக்கிறியே?'

அவன் பதில் சொல்வதற்குள் அம்மா சந்தோஷமாகக் குறுக்கிட்டுக் கூறினாள்.

'இவன் உன்னைவிடக் கெட்டிக்காரன். இப்பவே நல்லாய் படிக்கிறான்... நாசாவிலே வேலை பார்க்கிற பெரிய பெரிய கனவு களெல்லாம், இவணட்டை இருக்கு.

'கனவுகள் இருக்கட்டுமம்மா, வாழ்க்கை இருக்கல்லே' என்றான். ஆதவன் எதையோ மனதில் உள் வாங்கிக் கொண்டு வீடு வந்து சேரும்வரை, அவன் அவனாகவே இல்லை.

ஒரு விடுதியில் தங்கியிருந்துவிட்டு, அன்றே அவர்கள் யாழ்ப்பாணம் பயண மானார்கள். பலாலி வீதி தாண்டி அவனின் சொந்த ஊரான உரும்பிராய்க்குள் காலடி எடுத்து வைக்கும்போது அந்த ஊரின் களங்க மற்ற புனிதங்களுக்கே களை சேர்க்க வந்த, தனது உண்மை நிலை குறித்து, அதை நினைக்க அவனுக்கே பெரும் தலைகுனிவாக இருந்தது. இயல்பான பெறுமதி மிக்க தங்களினதும் தங்கள் இனத்தினதும் பங்க முற்றுப் போகாத சாசுவதப் பெருமைகளின் தீட்டுப் படிந்த ஒரு மறுதுருவமாய் வர நேர்ந்த தனதுநிலை குறித்து அவனுக்குப் பெரும் கவலையாக இருந்தது. அதிலிருந்து எளிதில் அவனால் விடுபடவும் முடியவில்லை.

தன்னைப் பற்றிய அந்தக் கசப்பான உண்மையை இதுவரை காலமும் அம்மா விடம் மனம் திறந்து சொல்லாமல் விட்ட தவறு, இப்போது அவனுக்கு நன்றாகவே உறைத்தது. அதை அவன் லண்டனில் இருக்கும் போதே சொல்லியிருக்கலாம். சொல்லியிருந்தால் அம்மாவைத் தான் அது பெரிதும் பாதித்திருக்கும். அவள் இதைக் கொஞ்சம் கூட எதிர்பார்த்திருக்கமாட்டாள். அவளின் தீவிர நம்பிக்கைக்குரிய அப்பழுக்கற்ற அவன் பற்றிய புனித நினைப்புகளே அவன் சொல்லப்போகும் கதையைக் கேட்டுக் காற்றில் பறந்திருக்கும். இதைக் கேட்டு அவள் உயிரைவிடவும் கூடும். ஏனென்றால் அவன் பற்றிய தற்போதைய உண்மைக்கதையின் குரூரம் அத்தகையது. அப்படிச் சந்தர்ப்ப சூழ்நிலைகளினால் ஏற்பட்ட அந்த மிகப்பெரிய தவறுக்குப் பாவம் அவன் தான் என் செய்வான். மகாவலிமை படைத்த புலன்களை அடக்கியாளத் தெரிந்த ஒரு தவமுனிவன்போல் இருந்தவனை வாழ்வின் போக்கு எப்படியெல்லாம் திசைமாற்றிவிட்டது.



பயணக் களைப்புத்தீரச் சாப்பிட்டுவிட்டுப் படுத்தவன்தான் நீண்ட நேரமாகத் தூங்கிவிட்டு எழுந்து பார்த்த போது பகல் ஒரு மணிக்கு மேலாகிவிட்டிருந்தது. குளிர் நாட்டில் இருந்து விட்டு வந்ததால், தகிக்கும் வெய்யிலை எதிர் கொள்ளமுடியாமல், காற்று வாங்குவதற்காக முற்றத்து வேப்பமர நிழலில் வந்து வெகுநேரமாய் நின்று கொண்டிருந்த போது அம்மா நிலை கொள்ளாத மகிழ்ச்சியுடன் அவனருகே வந்ததும், அவனது குரலில் சுருதியின்றிக் கேட்டான்.

'என்னம்மா?..."

'உனக்கு ஒரு பொம்பிளை பாத்தனாங்கள் நல்ல வடிவானபிள்ளை படம் பார்க்கிறியே? என்றவாறு ஒரு போட்டோவை அவனிடம் நீட்டினாள். அதை வாங்குவதற்கு முடியாமல் அவனுள் உள்ளீடான ஒரு தயக்கம் தெரிந்தது. அதை வாங்கினால் அவனின் குட்டு, நிலையழிந்த நிழற்கோலம் வெளிப்படும். ஆனால் என்ன செய்வது, அதை வாங்கி அம்மாவின் நம்பிக்கைக்குப் பால் வார்ப்பதைவிட என்னைப்பற்றிய உண்மைகளை அம்மா அறியப் பிரகடனப்படுத்திச் சொல்லிவிடுவதே, தனக்குண்டான தார்மீகக் கடமையென்று, அவன் மிகவும் பெருந்தன்மையோடு, நினைவுகூர்ந்தான். அதை மனம்விட்டுச் சொல்வதனால் தனக்கு ஏற்படப்போகிற அபகீர்த்தி குறித்து அவனுள் கவலை தோன்றினாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை மறந்து விட்டு அவன் சரளமாகக் குரலை உயர்த்திப்பேசத் தொடங்கிய போது அம்மா மௌனமாக அதைக் கிரகித்துக் கேட்டுக் கொண்டிருந்தாள். கணீரென்ற தொனியில் வெளிப்படையாக அவன் பேசுகின்ற போது வழக்கமாக அவன் குரல் காற்றை கிழித்துவரும் துல்லியமான ஒரு தேவ வாக்குப் போல கம்பீர சுருதியோடு லயம் பிசகாமல் ஒலிக்கும். அதற்கு மாறாக அப்போது இனிமை பிசகிய அவன் குரல் அபஸ்வரமாய் கனதியற்றுக் கேட்பது போல் உணர்வு தட்டிற்று.

அழுகை தழும்பி அவன் கலக்கத்துடன் பேசுவது போலையும் இருந்தது. அம்மாவின் முகத்தையே நேருக்கு நேர் எதிர்கொள்ளத் தயங்குகிறவனாய், எங்கோ வெறித்துப் பார்த்தபடியே அவன் பேசுகிற குரல் காற்றில் அலைபாய்ந்து கனதியற்றுக் கேட்டது.

"அம்மா நான் சொல்லுறதைக் கேட்டு நீங்கள் அதிர்ச்சி கொள்ளக்கூடாது. இந்தப் போட்டோவில் இருக்கிற பெண்ணின் முகத்தை ஏறிட்டுப் பார்க்கிற தகுதி கூட, எனக்கில்லை. நான் வெளிப்படையாக என்னைப் பற்றிய உண்மைகளை மனம் திறந்து பேசவேண்டிய ஒரு நல்ல தருணம் இது அம்மா, நான் ஒரு சராசரி மனிதன் தான். உணர்ச்சிகளைக் காப்பாற்றி நான் ஒரு நல்ல ஆளுமை குன்றாத உத்தம புருஷனாய் இருந்திருக்கலாம். நான் இப்படியேதான் இருப்பதாக. நீங்கள் கொண்டுள்ள நம்பிக்கைக்கு நான் கூறப்போகும் இந்த விபரீத செய்தி சாவுமணி யாகத்தான் இருக்க முடியுமென்பதை என்னால் உணர முடியுது. வேறு வழியில்லை இனியும் நான் மௌனம் சாதித்தால், உங்களை மட்டுமல்ல இது பாதிக்கும். பாவம் வீணாக இந்தப் பெண்ணும் ஏமாந்து போக நேரிடும். எனக்குத் தெரியாமல், ஏனம்மா இதைச் செய்யத் துணிந்தீர்கள் நான் இதற்கு அருகதை யுடையவன்தானா! சொல்லுங்கோவம்மா. எனக்கு அங்கேயே ஒரு வெள்ளைக்காரியோடு கல்யாணமாகி ஒரு பிள்ளையுமிருக்கு இது கடந்து ஒரு வருடமாச்சு இதை எப்படிச் சொல்லுறதென்ற மனக்கூச்சத்தினாலே தான் இது வரை காலமும் நான் மௌனமாக இருந்திட்டன் என்னை மன்னிச்சிடுங்கோ"

சலனமுற்று நலிந்து போய் ஒலிக்கும் அவன் குரலைத் துயரத்துடன் செவி மடுத்த வாறே, அம்மா வெகுநேரமாய் நிலையழிந்து போய் மௌனமாக நின்று கொண்டிருந்தாள். மேற்கொண்டு என்னபேசுவதென்று அவளுக்குப் புரியவில்லை.

இனிப்பேச என்ன இருக்கிறது. எல்லாம் முடிந்து போன மாதிரித்தான் நிறைகுடம் போலாகாத ஒரு பாதிமனிதன் தான் இப்போது அவனும். அவனைப்பற்றி அவள் எவ்வளவு நம்பிக்கையோடிருந்தாள். படிக்கிற காலத்தில் அவன் அப்பழுக்கற்ற தூய நடத்தைகளுடன் சலனப் பொறிகளுக்குள் சிக்காத வைராக்கிய புருஷனாகவல்லவா இருந்தான். இப்போது அவனுக்கு என்ன நேர்ந்து விட்டது? கேவலம் புழுபூச்சிக்குச் சமமான, பெண்ணின்பம் சார்பாக வருகின்ற மையலின் பொருட்டுத் தன்னை இழந்து விட்டல்லவா வந்திருக்கிறான். இவனை எப்படி மன்னிப்பேன்? எப்படி மனம் பொறுப்பேன்?

நல்லவேளை இவன் உண்மை கூறாவிட்டால் என்ன நடந்திருக்கும்? அநியாயமாக இந்தப் பெண்ணுமல்லவா அழிந்திருப்பாள். இவளுக்கு வாழ்வு கொடுத்த மாதிரித்தான், இப்போது இவன் நிலையும் இவனில்லாவிட்டாலென்ன நல்லபிள்ளையாக வேறு ஒருவன் வரக்கூடும். தலைக்கு வந்தது தலைப்பாவோடு போன மாதிரி வெறும் பெண்பார்க்கும் சடங்கோடு இவளுடைய நல்ல காலம். இவன் உண்மையை மறைக்காமல் மனம் திறந்து கூறிவிட்டதால், இந்தக் கல்யாணப் பேச்சு இத்தோடு முடிந்து போனது இப்படி எத்தனை பேரால் யோசிக்க முடியும்? அங்கேயே வெள்ளைக்காரியோடு ராச லீலை புரிந்து பிள்ளை பெற்றுக் குடித்தனம் நடத்திவிட்டு அதை மூடி மறைத்து மிகவும் யோக்கியனைப்போல் இங்கு வந்து ஒரு பெண்ணையும் அவள் குடும்பத்தாரையும் ஏமாற்றித் தாலி கட்டிவிட்டும் போகும் தரங்கெட்ட இளைஞர்களினிடையே தனக்குக் கெட்ட பெயர் வந்தாலும் பரவாயில்லை என்று மனம் திறந்து உண்மையைக் கூறிய இவன் ஏதோ ஒரு வகையில் சராசரி இளைஞர்களைவிடவும், களங்கமுறாத ஆன்மபலம் கூடியவன்தான், என்று உணர்கையில் அம்மாவுக்கு ஒரு கலாச்சார சீரழிவுக்குட்பட்டு நடத்தை தவறிய அவனது பலவீனம் கூட ஒரு பொருட்டாகப்படவில்லை. மாறாக உயிர்களை வருந்தி அழவைக்க விரும்பாத முழுமையான அன்று கொண்ட ஒரு நற்பிரஜையாய் நேரில் அவனை இனம் கண்ட போது அவன்மீது படிந்த கறையை அம்மா அடியோடு மறந்துதான் போனாள்.

அவனது அந்த அன்பு எழுச்சி கொண்ட பெருமைக்கு முன்னால் அவனது பலவீனத்தினால் நேர்ந்த அந்தத் கூறுகூட ஒரு பெருங்குற்றமாகப்படவில்லை. அவளுக்கு அதை மறந்து கவலைவிட்டுப்போய் அவள் மனம் குளிரச் சிரிப்பதை ஒரு வேடிக்கைபோல ஏறிட்டுப் பார்த்த வாறே ஆதவனும் நிலை அழியாமல் சனைமின்றி நின்று கொண்டிருந்தான்.□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவராத்திரி

ம.நிரேஸ்குமார்

விடிந்தால் பாறணை. பகல் முழுவதும் பச்சைத்தண்ணி கூடக் குடிக்காமல் பட்டினி கிடந்து இழந்து விட்ட சக்தி எல்லாவற்றையும் மீட்டெடுப்பதற்கான பல வகையான பழங்களையும்சாப்பிட்டு, வயிறு நிறையப் பாலையும் குடித்து ஏப்பம் விட்டுக் கொண்டிருந்த நேரம் முதல் ஷெல் விழுந்து வெடிக்க பக்கத்தில் யாரோ குழறும் சத்தம் கேட்டது.

"எடே தம்பி.. செல்லத்துரயண்ண வீட்டிலதான் குழறிக் கேக்குது. என்னெண்டு பாரடா"

"சத்தம் போடாதயண கொஞ்ச நேரத்தால என்னெண்டு தெரியும்தானே"

"அதுக்கில்லயடா அயலட்டேல சத்தம் கேட்டாப் பாக்கவெல்லே வேணும்"

"ஒரு ஷெல் வந்து வீந்தா, பிறகும் அந்த இடத்துக்கு ஷெல் அடிப்பாங்களணை இப்ப போக்குடாது"

"நல்லகாலம் கொக்காவும் கொப்பரும் திருக்கேதீசுவரம் போட்டினம்"

"ஐயோ... என்ர ராசா போட்டியோ"

செல்லத்துரையின் மனைவி குழறும் சத்தம் தெளிவாகக் கேட்டது.

"அம்மா ஒருக்கா என்னண்டு எட்டிப் பார்ப்பமே"

"வேண்டாமடா திரும்பவும் ஷெல் அடிப்பாங்களெண்டு..."

கனகம் சொல்லி முடிப்பதற்குள் அடுத்தடுத்து ஷெல்கள் விழுந்து வெடிக்கத் தொடங்கின.

"எடே ராசன். கண்டபடி ஷெல் விழுகுதடா நாங்கள் அம்மன் கோயிலடிக்குப் போப்போறம்"

பின்பக்க வேலிக்கு மேலால் கனக லிங்கம் மாமாவின் குரல் கேட்கிறது.

"ராசன்... உறுதியள், கூப்பன்மட்டயள் எல்லாம் வைக்கிற 'வாக்க' எடடா"

"எங்கயண கிடக்கு?"

"சாமி அறேக்க விறாக்கீல கொழுவிக் கிடக்கடா"

கனகம் நகைகளைப் போட்டுத் தைத்து வைத்திருந்த தலையணையைக் கையில் எடுத்துக் கொண்டு வர ராசன் அவசரமாய்க் கதவுகளைப் பூட்டினான்.

"எட.. பொறடா உள்பாவடய எடுக்க மறந்து போனன்"

"பாவாடதானே. கிடக்கட்டும் விடண பேந்து எடுக்கலாம்"

விசர்க்கத கதயாதயடா தாலிக்கொடி சங்கிலி எல்லாம் பாவாடைப் பொக்கற்றுக்க கிடக்கு"

"சத்தம் போடாமல் கெதியா எடுத்துக் கொண்டு வாண"

ராசனும் கனகமும் றோட்டுக்கு வந்த போதுதான் நிலைமையின் தீவிரம் புரிந்தது. கிட்டத்தட்ட சுழிபுரம் கிராமமே இடம்பெயர்ந்து சென்றுகொண்டிருந்தது.

மாதகல் கடலில் இருந்து கண்போட்டுகளின் தாக்குதல், பலாலியில் இருந்து ஷெல் வீச்சு என்று இருமுனைத் தாக்குதலுக்குள் அந்தக் கிராமம் அகப்பட்டிருந்தது. சில உயிர்கள் துடிதுடித்து விழ எஞ்சிய உயிர்களைக் காப்பாற்றுவதற்காக தம் உடல்களையும், உடைமைகளையும் சுமந்து மக்கள் ஓடிக்கொண்டிருந்தார்கள்.

சோழ மன்னர்கள் கடாரம் வரை வெற்றிகொண்டு ஆட்சி செய்த காலத்தில் "சோழியபுரம்" என்று அழைக்கப்பட்ட அந்தக் கிராமம் காலப் போக்கில் பெயர் மருவி "சுழிபுரம்" ஆக மாறிவிட்டது.

சத்தியக் காட்டுச் சந்தையைத் தாண்டிச் செல்லும் சுழிபுரம் பறாளாய் வீதியில், பறாளாய்க்கு அண்மையில். கருங்கல் வேலைப்பாடுகளினால் அமைக்கப்பட்டுள்ள அலங்கார வளைவு மட்டுமே தற்பொழுது "சோழிய புரத்திற்கான" ஒரேயொரு சாட்சி.

பறாளாய் முருகன் கோவில் தேர்முட்டியில் பொறிக்கப்பட்டிருந்த கல்வெட்டுக்கள் கூட திருப்பணிகளின் போது அவற்றின் பெறுமதி தெரியாமல் அழிக்கப்பட்டு விட்டது.

பறாளாய் முருகன் கோயிலுக்கு இன்னொரு சிறப்பும் உண்டு கோயிலின் தெற்கு வீதியில் மிகப்பெரிய ஆலயம் ஒன்று விநாயகருக்காக அமைக்கப்பட்டு தனியாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராமரிக்கப்பட்டு வருகிறது. ஒரு கோயிலின் வீதியை அண்மித்து இத்தனை பெரிய ஆலயம் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருவது மிகவும் அரிதான விடயமாகும்.

இங்குள்ள விநாயகர் "கண்ணைக் கொத்திக் காக்கைப் பிள்ளையார்" என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுவதற்கான காரணத் தைக் கண்டறிவதற்கு போர்த்துக் கேயர் ஆட்சிக் காலத்தைத் திரும்பிப் பார்த்தல் வேண்டும்.

போர்த்துக் கேயர் இலங்கையை ஆட்சி செய்த காலத்திலே இந்த விநாயகர் ஆலயத் தின் கருங்கற் சுவரை இடித்து, அக்கற்களைப் பயன்படுத்தி சங்கானையில் ஒரு பெரிய கோட்டையைக் கட்டுவதற்குத் திட்டமிட்டி ருந்தனர். அப்பிரதேசத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த போர்த்துக்கேயன் ஒருவன் இப்பணி யை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப் பட்டிருந்தான்.

இவ்வாலயத்திலிருந்து சங்கானை ஏறத்தாழ ஐந்து கிலோமீற்றர் தூரத்தில் இருக்கிறது. போர்த்துக்கேயரால் கைது செய்யப் பட்டு அடிமைகளாக நடத்தப்பட்டு வந்த அப் பிரதேச இளைஞர்களை சங்கிலிகளால் ஒருவரையொருவர் சேர்த்துப் பிணைத்து, மனிதச் சங்கிலியொன்றை உருவாக்கி பறாளாயிலிருந்து சங்கானை வரை நிறுத்தி யிருந்தனர். கோவிலிலே இடிக்கப்படும் கருங்கற்கள் கைத்தாங்கலாக ஒருவர் கைகளில் இருந்து மற்றவருக்கு மாற்றப்பட்டு சங்கானை வரை கொண்டு வரப்பட்டது.

வேலை செய்பவர்களை அடித்து மிரட்டி வேலை வாங்குவதற்காக போர்த்துக்கேய அதிகாரி தனது குதிரையில் அமர்ந்திருந்து அங்குமிங்கும் திரிந்து வேலைகளை மேற்பார்வை செய்தான். களைப்படைந்து சோர்வடைபவர்களை சவுக்கினால் அடித்து வேலை செய்வித்தான்.

விநாயகர் உடனே காகமாக வடிவம் எடுத்து வந்து அந்தப் போர்த்துக்கேயனின் கண்களைக் கொத்திக் குருடாக்கினார். அவன் தனது தவறை உணர்ந்து விநாயகரை வணங்கியதோடு அன்றுடன் அந்தக் கோட்டை கட்டும் வேலையையும் கைவிட்டுவிட்டான். இது புராணக்கதை இக்கதையை சைவசமயப் பாடப் புத்தகங்களிலும் காணலாம்.

கைவிடப்பட்ட அந்தக் கோட்டை இன்று கூடப் பாழடைந்த நிலையிலே சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்திற்கு முன்னால், வௌவால்களின் இருப்பிடமாகத் திகழ்கின்றது.

உண்மையில் சோழமன்னர்கள் சோழியபுரத்தை ஆட்சி செய்தார்களா? இல்லையா? என்பதை நிரூபிக்கக் கூடிய வரலாற்றுச் சான்றுகள் இல்லை. ஆனால் சோழ மன்னர்கள் இப்பிரதேசத்தை ஆட்சி செய்தது உண்மை யானால் சோழியபுரம் தான் அவர்களின் முக்கிய கிராமமாக அமைந்திருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

அந்த அளவிற்கு எல்லா விதமான வளங்களும் செறிந்துள்ள பொன் விளையும் பூமியது. வடக்கே மாதகல், மேற்கே திருவடிநிலை, என இரண்டு நெய்தல் நிலங்கள் அமைந்துள்ளதால் மீனுக்கும் பஞ்சமில்லை. தொழிலுக்கும் பஞ்சமில்லை. கடலை நம்பித் தொழில் செய்யும் மீனவர்களும், பனையை நம்பித் தொழில் செய்யும் நாடார்களும்தான் இங்கு அதிகம் வசதியானவர்கள்.

வானளாவி உயர்ந்து நிற்கும் பனந்தோப்புகள் ஒருபுறம், பச்சை நிற ஆடையணிந்து நாணி நிற்கும் மங்கையர் என வயல் வெளிகள் ஒருபுறம் என அழகுடன் மிளிரும் இக்கிராமத்தில் மக்கள் அனைவரும் அவரவருக்கு தெரிந்த வேலைகளைச் செய்து வாழ்க்கை நடத்தி ஒற்றுமையாக வாழ்ந்தார்கள்.

பிரிட்டிஷ்காரர் ஆட்சி செய்த காலத்தில் கட்டப்பட்ட விக்டோறியாக்கல்லூரி. தலைமகன் கந்தையாவினால் உருவாக்கப்பட்ட யாழ். பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம், இன ஐக்கியத்தை கட்டியெழுப்ப அமைக்கப்பட்ட ஐக்கியசங்கம் அமெரிக்கன் தமிழ்கலவன் பாடசாலை என ஏராளம் பள்ளிக் கூடங்கள் அறிவை அள்ளி அள்ளி வழங்குகின்றன.

ஏராளமான புலவர்கள், அறிஞர்கள், எழுத்தாளர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், வர்த்தகர்கள் தோன்றக் காரணமாயிருந்த இந்தச் சுழிபுரம், இங்குள்ள 'காட்டுப் புலம்' என்ற பகுதியில்தான் இலங்கையில் முதல் முதலாக தொழுநோய் இனம் காணப்பட்டதென்ற கசப்பான சம்பவத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

'திருவடிநிலை' என்ற கிராமத்தின் பெயருக்குக் கூட ஒரு வாய்வழித் தகவல் உள்ளது. இராமபிரான், இராவணனை அழிக்க இலங்கைக்குப் படையெடுத்தபோது, முதல் முதலில் இக் கடற்கரையில்தான் காலடி வைத்தார். அதனால்தான் இது 'திருவடிநிலை' எனப் பெயர் பெறவாயிற்று. திருவடிநிலைக் கடலினூடாக இந்தியா விற்கான தூரம் சில கிலோ மீற்றர்கள்தான்.

இடிந்து போன ஒரு பாலத்தின் எச்சங்களை இன்று கூட இக்கடலில் காணலாம். அதுதான் இராமர் பிரான் இலங்கைக்கு வருவதற்காகக் கட்டியபாலம் என்று தெரிவிப்பவர்களும் உண்டு. தமிழர் விடுதலைப் போராட்டங்களின் ஆரம்ப காலத்தில் இயக்கங்களின் வளர்ச்சிக்கு இந்தியா உதவி செய்தபோது இத்திருவடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைதான் இந்தியாவிற்கான பிரதான போக்குவரத்துப் பாதையாக இருந்தது.

யாழ்ப்பாணம் - கண்டி வீதி என அழைக்கப்படும் A9 வீதி உண்மையில் காரைநகரையே சென்றடைகின்றது. இந்த வீதி யாழ்ப்பாணத்திலிருந்து காரைநகருக்குச் செல்லும்போது, திருவடிநிலையை ஒரு வளையமாக சுழித்தோடி, பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய வாசலைக் கடக்கிறது. இப்பாதை தற்பொழுது பாவிக்கப் படுவதில்லை. யாழ் நகரிலிருந்து காரை நகருக்கான போக்குவரத்து சித்தங்கேணிச் சந்தியில் A9 வீதியை விட்டு விலகி சுழிபுரம், மூளாய், பொன்னாலை என்ற வழியி னூடாகவே தற்பொழுது நடைபெறுகிறது.

பொன்னாலை வரதராஜப் பெருமாளை யும் ஒக்டோபர் 19 ஐயும் தமிழர்களால் மறந்து விட முடியுமா என்ன?

இத்தனை சிறப்புக்களையும் கொண்ட இந்தச் சுழிபுரம் கிராமம், 1987 இல் இந்தியப் படைகளின் ஆக்கிரமிப்பின் போது பெருமளவு இழப்புக்களைச் சந்திக்க வேண்டி வந்தது.

1990ஆம்ஆண்டு வலிகாமம் வடக்குப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களில் பெருமளவானவர்களையும், தீவுப்பகுதி களிலிருந்து இடம் பெயர்ந்த மக்களையும் தன்னகத்தே உள்வாங்கி அவர்களுக்கு இடமளித்தது. அது மட்டுமில்லாமல் தற்பொழுது அவர்களில் பலர் காணி, பூமியென்று வாங்கி நிரந்தர வசிப்பிடமாக சுழிபுரத்தை மாற்றிக் கொண்டும் உள்ளனர்.

அதனைத் தொடர்ந்து வந்த காலப் பகுதிகளிலும் நாட்டுப் பிரச்சினையின் கோரப்பிடியில் இக்கிராமம் அகப்பட்டு அம்மக்கள் பெரும் இன்னல்களையும், இழப்புக்களையும் சந்தித்தனர்.

மாதகல் கடலிலிருந்து கண்போட்டு களும் பலாலி விமானத் தளத்திலிருந்து ஆட்லறி ஏவுகணைகளும் இக்கிராமத்தை குறிவைப்பதற்கு காரணம் இல்லாமலில்லை.

தீவகப் பரப்பையும், வலிகாமம் எனும் பெருநிலப்பரப்பையும் இணைக்கின்ற சிறிய கழுத்துப் போன்ற பகுதி தான் பொன்னாலை. அதனை அடுத்த மூளாய், சுழிபுரம், இந்தப் பகுதிகளைத் தாக்குதல் வீச்சுக்குள் வைத்திருந்தால், தீவகத்தையும், வலிகாமத் தையும் துண்டிக்கலாம் என்பதை ஆக்கிரமிப்பாளர்கள் அறிந்து வைத்திருந்தனர்.

வழமை போலவே இராணுவத்தினருக்கு எங்கோ ஏற்பட்ட இழப்பிற்கான பழிவாங்கலாக இம்மக்களின் மேல் இன்றும் ஷெல் மழை பொழியத் தொடங்கிவிட்டது.

அவர்கள் உடமைகளை விட்டு உயிர்களைச் சுமந்து ஓடத்தொடங்கி விட்டார்கள்.

“அம்மன் கோயிலுக்கு எல்லாரும் போறதும் ஆவத்துத்தான். வேணுமெண்டு ஷெல் அடிப்பாங்கள்”

“கோயிலுக்க ஒரு நாளும் ஷெல்லடிக்க மாட்டான்கள்”

“ஏன் நவாலிச் சேச்சில நடந்தத மறந்து போனியே?”

மீண்டும் ஒரு ஷெல் விழுந்து வெடித்தது.

“கோயிலுக்க ஓடுங்கோ அம்மாளாச்சி காப்பாத்துவா” இது ஒரு நடுத்தர வயது மனிதர் .

“அம்மாளாச்சி காப்பாத்தாட்டியும் கோயில் கட்டியிருக்கிற கருங்கல்லுச் சுவர் காப்பாத்தும்” இது ஒரு இளமாட்டப் பெடியன்.

வடக்கம்பரை அம்மன் கோயில் ஏற்கனவே சனத்தால் நிறைந்திருந்தது. இடம்பெயர்ந்து ஓடுவதென்பது கூட ஒருவித உளவியல் சிகிச்சைதான். ஏனெனில் இந்நேரம் திருவடிநிலை மக்கள் பொன்னாலைக்கும், பொன்னாலை மக்கள் பறாளாய்க்கும், பறாளாய் மக்கள் சுழிபுரத்திற்கும் இடம் பெயர்ந்திருப்பார்கள். தமது இருப்பிடத்தை விட்டு இன்னொரு இடத்திற்குச் சென்று கூட்டமாக இருக்கும்போது ஏதோ பாதுகாப்பு ஏற்பட்டுவிட்டது போல மனசு தன்னை ஆசுவாசப் படுத்திக் கொள்கிறது.



ஷெல் சத்தங்கள் கொஞ்சம் கொஞ்சமாக ஓய்ந்து பொழுது பொல பொலவென்று விடியத் தொடங்கியது.

அம்மன் கோயில் வாசலில் போடப்பட்டிருந்த மேடை, அலங்காரங்கள் கலைந்து போய்க்கிடந்தன. “சுரேஸ் சவுண்ஸ்” இற்குச் சொந்தமான ஒலிவாங்கிகளும் ஒலிபெருக்கிகளும் ஆங்காங்கே சிதறிக் கிடந்தன.

கோயில் வீதியைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்த கலர் ரியூப் பல்புகள் ஒளிராமல் அணைந்து கிடக்கின்றன. சிவராத்திரியைப் பக்தர்கள், பக்தியாகக் கழிப்பதற்காக செய்யப்பட்ட ஏற்பாடுகள் பயன்படுத்தப்படாமலே வீணாகி விட்டன.

ஆனால் மக்கள்...

வைரமுத்துவின் மயானகாண்டம் இல்லாமல்,
சின்னமணியின் வில்லுப் பாட்டு இல்லாமல்,
கவிதாலயாவின் கோஷ்டி இல்லாமல்,
குமரகுருபரரின் பிரசங்கம் இல்லாமல்,

சிவராத்திரிக்கு கண் முழித்திருந்தனர்.□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை

ந.சத்தியபாலன்

## அத்தியாயம் - 3

*காடெல்லாம் மழைபொழியும்*
*கடலுள்ளும் அது பெய்யும்*
*களணியிலே விளைகின்ற நெற்பயிரோ*
*நீரின்றிவாடும் நீள்பொழுதில் வான்பார்த்து*
*நெஞ்சுவிம்ம மூச்செறியும்*
*நினைவில் நெருப்பெரியும்....*

மூன்று வாரங்கள் வெறும் மூன்று நாட்கள் போல விரைந்தோடிவிட்டது போலிருந்தது.

அந்த வீட்டில் ஏகப்பட்ட மாறுதல்கள்.

வளர்ந்து பரந்திருந்த அந்த முற்றத்து வேம்பின் நிழல் படர்ந்த இடம்தவிர மீதி இடம் முழுதும் ஈரம் படர்ந்து குளிர்ந்து போய்க்கிடந்தது.

முளைவிட்ட சிறு செடிகள் செழிப்பாய்த் தெரிந்தன. பெரும்பாலான மாலை வேளைகளை சதானந்தன் அந்தப் பரந்த செம்மண் தரையிலேயே செலவிட்டான். விதம்விதமான சிறுசெடிகள் ஆர்வமுடன் அரும்பு தள்ளி ஒளி உலகுடன் நித்தியமாய்ச் சங்கமிக்க ஆவல் கொண்டனபோல் பச்சையாய் ஒளிர்ந்தன. தேடித்தேடி அவற்றை வாங்கிவந்து அங்கே நாட்டுகின்ற சதானந்தன் எல்லோருக்குமே ஒரு அதிசயமாயிருந்தான்.

செடிகளுக்கு மாத்திரமில்லாமல் குரோட்டன் வகைகளுக்குக் கூட விதவிதமான பெயர்களை அவன் சொன்ன போது எல்லோரும் வியந்து போனார்கள்.

"எட இப்பிடியெல்லாம் பேர்களோட குரோட்டன்கள் இருக்குதே... வீட்டையும் அவன்தம்பி ஒரு பூக்கண்டுப் பயித்தியம்... அவன் ஒருநாளும் உந்தப் பெயர்களைச் சொல்லயில்ல

உன்ர மனிசன் ஒரு புதினமான ஆள் தான் தமயந்தி... என்று அன்னம் மாமி சொன்னாள்.

"நீங்கள் அவரின்ர அம்மாவீட்டவந்து பாக்க வேணும்... ஒரே சோலை தான் மாமி. வெய்யிலே தெரியாது... முன்வளவு முழுக்க குளுகுளுவெண்டு 'ஏசி' பூட்டின இடம் மாதிரி இருக்கும்'

ராஜநாயகி வெளிப்படையாய் எதையும் திறந்து பேசும் இயல்பு இல்லாதவள். எல்லா வற்றையும் அவதானித்துக்கொண்டு மௌனமாகவே இருந்தாள் யாராவது ஏதும் கேட்டால் மாத்திரம் பதில் சொன்வாள்.

அந்த வீட்டின் உள்ளும் புறமும் ஏற்படுகின்ற மாறுதல்களை பராசக்தி வெகு உன்னிப்பாகக் கவனித்தாள்.

திறந்த மனசோடு எல்லாவற்றையும் பேசுகின்ற தமயந்தி, "உங்கட ரி.வியை ஏன் அக்கா ஒரு மூலைக்குள்ளவைச்சிருக்கிறியள்? கொஞ்சம் தள்ளி இந்த ஹோலுக்குள்ள வச்சால் பெரியம்மாவும் விருப்பமான நேரங்கள் பாக்கலா மெல்லே...

...ஏன் நீங்களும் நல்ல நிகழ்ச்சிகள் பாக்கலாம் அக்கா... ஏன் அதுகளப்பாக்க விருப்பமில்லையே...? என்று ஒருநாள் கேட்டாள்.

...என்ன நிகழ்ச்சிகள்.. எல்லாம் இந்தச் சினிமாப் படங்கள் தானே... சில நேரம் சில தொடர்களப் பாக்கலாமெண்டால் அதுவும் சினிமா மாதிரித் தானே கிடக்குது... என்றாள் அன்னம்மாமி

'அப்பிடியெண்டு இல்ல மாமி

இப்ப எத்தனையோ 'சனல்கள்' இருக்கு எங்களுக்கு வேணுமெண்டதப் பாக்கலாம்..' என்றாள் தமயந்தி.

அவள் அப்படிச் சொல்லி ஒரு வாரத்துக் குள்ளேயே,

'கேபிள் காரர்களுடன் தொடர்பு கொண்டு கேபிள் தொடர்புகளுக்கும் வகை செய்து விட்டான் சதானந்தன்.

சி.டியில் புதிது புதிதாகக் குடும்பப் படங்கள் கொண்டு வந்தான்.

ஆரம்பத்தில் பராசக்தியும்மகேசும் மாத்திரமே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர்ந்திருந்து அவற்றைப் பார்த்தார்கள்.

நாளடைவில் ராஜ நாயகியும் நேரத்துக்கே தன்காரியங்களை முடித்து எல்லோருடனும் ஒன்றாயிருந்து படம்பார்க்கத் தொடங்கினாள்.

வழக்கமாய் வீட்டின் வேலைகளை ஒரு இயந்திரம் போல செய்துவிட்டு அமைதி யாய் இருக்கிற ராஜ நாயகி சதானந்தன் தமயந்தி தம்பதியரின் வருகைக்குப் பிறகு ஏற்பட்ட மாற்றங்க ளோடு பெரிதும் இயல் பாக நடக்கத் தொடங்கி யிருந்ததை அவதா னித்த அன்னம்மாமி ஒரு நாள் பராசக்தி யுடன் அது பற்றி மனம் விட்டுப் பேசிக் கொண்டாள்.



"பாத்தியளே மச்சாள் எங்கட நாயகியில இப்ப வந்தி ருக்கிற மாற்றங்களை. இப்ப பிள்ளையப் பாக்க எவ்வளவு ஆறுதலாயிருக்குது."

''மெய் தான் அன்னம் நீயும் எல்லாத் தையும் கவனிச்சுத் தான் இருக்கிறாய்... இதுக்கெல்லாம் நான் உனக்குத்தான் கடமைப்பட்டிருக்கிறன் அந்த ரெண்டுசீவனும் செய்யிற நல்ல காரியங் களாலதான் இப்பிடி ஒரு மாறுதல் வந்தது. கடவுள் அதுகள நல்லா வைக்க வேணும்..."

அதெண்டால் மெய்தான் அந்தப் பெடிச்சியும் புரிசனும் உண்மையில புண்ணியப் பிறவியள்.

முன்னே பின்னே அறிமுகம் இல்லாதவை எண்டு பாராமல் தங்கட சொந்தக் காரியங்கள் மாதிரி இழுத்துப் போட்டுக் கொண்டு எவ்வளவு உரிமையோட செய்யுதுகள் எல்லாத்தையும்...

"நான் துவக்கத்தில் எங்கட நாயகி வழக்கம் போல வெடுசுடு எண்டு ஏதும் சொல்லி அதுகளப் புண் படுத்திப் போடுவாள் எண்டு பயந்தனான். ஆனால் அதுகள் நாயகிக்கும் பிடிச்சுப் போச்சுது... ஒருநாள் என்னட்டக் கேக்கிறாள் "இப்பிடியும் ஆக்கள் இருக்கினமே அம்மா..." எண்டு... எல்லாம் ஈசன் செயல். 'அன்னம்' என்று ஆறுதற் பெருமூச்செறிந்தாள் பராசக்தி.

***

தமயந்திக்கு சதானந்தனுக்கும் தனக்குமாகச் சமையல் செய்து கொள்வதும் உடுப்புக் கழுவுவதும் வீட்டை ஒழுங்கு படுத்துவதும் தவிர வேறெந்த வேலைகளுமிருப்பதில்லை. அவளது பொழுதில் பெரும் பாதி ராஜநாயகியோடோ மகேசுடனோ அவர்களது வேலையைப் பகிர்ந்து கொள்வதில் கழிந்து கொண்டிருந்தது.

அன்னம் மாமி வந்தால் அவளுடன் பேசிக்கொண்டிருப்பாள்.

அக்காவின்ர குடும்பம் நல்ல வசதியாய் பேர் போன குடும்பமாய் இருந்தும் ஏன் மாமி அவவுக்கு ஒரு நல்ல வாழ்க்கையத் தேடிக் குடுக்கேல்ல' என்று ஒருநாள் கேட்டாள்.

அன்னம் மாமியிட மிருந்து ஒரு நீண்ட பெருமூச்சு வெளிப் பட்டது.

கலங்கிப்போன தனது விழிகளைச் சேலைத் தலைப்பால் துடைத்துவிட்டபடி "அது பெரியகதையடி பிள்ள. என்ர அண்ணர் சண்முகம், அவர்தான் நாயகியின்ர தகப்பன் சின்னவயசில சரியாக்கஷ்டப் பட்டவர். எங்கட அய்யா கமம் செய்த காலத்தில பெரிய வசதி யொண்டும் இருக்கேல்ல. சரியாக கஷ்டப்பட்டுத்தான் நாலு குமர்ப்பெட்டையளக் கரை சேர்த்தவர் ஐயா வோட சேர்ந்து சண்முகம் அண்ணையும் பாடுபட்டவர்.

சலியாமல் பாடுபடு கிறதில அண்ணையோட ஆரும் நேர்நிற்கமாட்டினம்.

அப்பிடி ஒரு உழைப்பாளி. அவர் எங்கட புகையிலைத் தரையில அவர் சிந்தின வியர்வையும் புகையிலையைக் காசாக்க அவர் பட்டபாடும் தான் ஊரில புகையிலைச் சண்முகத்தார் எண்டு அவரை நாலுபேர் சொல்லுற அளவுக்கு உயர்த்தினது.

அண்ணையின்ர கடும் உழைப்பு அவர ஒரு பெரிய மனிசன் ஆக்கிச்சுது.

ஊருக்குள்ள காசுக்காறர் எண்டு பேரெடுத்த மணியத்தார் தன்ர ஒரேமகள எங்கட அண்ணருக்குச் செய்து குடுத்தார்.

அதோட அண்ணையின்ர செல்வாக்கு நல்லா உசந்திட்டுது. சும்மா சொல்லக் கூடாதடி பிள்ளை பராசக்தி மச்சாள் வந்தபிறகு வீடு முழுக்கத்திரவியம் தான். அண்ணை தொட்டதெல்லாம் துலங்கிச்சுது.

புகையில வியாபாரம் சரியத் தொடங்க அண்ணை தளபாட வியாபாரம், பெற்றோல் நிலைய மெண்டு பலவழியில காசு தேடினார். அவையளுக்குப் பிள்ளையளும் நாலாப்போச்சுது"

அன்னம்மாமி இதைக் கூறியதும் தமயந்தி ஆச்சரியப்பட்டாள். 'அக்காவுக்குச் சகோதரங்கள் இருக்குதேமாமி...? அப்ப அவையளெல்லாம் இப்ப எங்க? என்றாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெண்டு தமையன்மார். ஒரு தமக்கை. தமையன் மார் ரெண்டு பேரும் இப்ப வெளிநாட்டில. ஒருவன் ஜேர்மனியில மற்றவன் பிரான்சில அக்காக்காறி கலியாணம் கட்டி இந்தியாவில இருக்கிறாள்.

கடைசிப்பிள்ளையெண்டு ராசநாயகிக்குத் தேப்பன் நல்ல செல்லம். கெட்டிக் காறியாப் படிச்சுக் கொண்டிருந்த அவளை ஏ.ஏல்லுக்கு மேல படிக்க விடேல்ல.

தன்ர வியாபாரக்கணக்கு வரத்துப் போக்கு எல்லாத்தையும் ராசநாயகியைக் கொண்டு தான் அண்ணை சரிபாக்கிறவர். எல்லா விபரங்களும் அண்ணையவிட நாயகிக்குத்தான் வடிவாத்தெரியும் ஊருக்குள்ளயும் நல்ல செல்வாக்கு. டொக்ரர், என்ஜினியர், எக்கவுண்டன் என்டெல்லாம் பெரிய பெரிய இடங்களில இருந்து சம்பந்தம் பேசிவந்தது. மூத்த மகளுக்கு அமைஞ்சதவிடப் பெரிய இடம் வேணுமெண்டு, கேட்டுவந்த கன இடங்களை அண்ணர் கடத்தி விட்டிட்டார்.

ஒரு கட்டத்துக்கு மேல அண்ணர் எதிர்பார்த்த மாதிரி இடம் அமையமாட்டனெண்டிட்டுது. வெளியில இருக்கிற தமையன் மாரோட மாத்துச் சம்பந்தமாப் பேசிவந்தினம் சிலபேர். அண்ணரும் அதுக்கு ஓமெண்டு மூத்த மகன்ட்ட சம்மதம் கேட்டார்.

"இந்த மாத்துச் சம்பந்தமெல்லாம் பழையகதை இதெல்லாத்தையும் விட்டிட்டு வேற இடமாப் பாருங்கோ தங்கச்சிக்கு நானும் காசு அனுப்புறன்" எண்டு மூத்தவன் பிடிவாதமாச் சொல்லிப் போட்டான்.

அண்ணருக்கு அது பெரிய ஏமாற்றமாப் போச்சு.

பிரான்சில இருக்கிற இளைய மகனிட்டக் கேட்டார் அவன் "அப்பா என்னில கோவிக்க வேண்டாம் பிரான்சில நான் ஒரு பிள்ளைய விரும்பி யிருக்கிறன் உங்களின்ர சம்மதத்தோட அவளத்தான் கலியாணம் செய்யபோறன்" எண்டு அவனும் சொல்லிப்போட்டான். அதோட அண்ணர் உடைஞ்சு போனார். எனக்கு ஆம்பிளப்பிள்ளையளே இல்லை யெண்டு நினைச்சு கொள்ளிறன் எண்டு பிடிவாதமா முடிவெடுத்தார். ரெலிபோனில கூட மகன் மாரோட கதைக்கிறதை நிறுத்திப் போட்டார். அதோட அண்ணைக்கும் சலரோகம் பிறஷர் எண்டு வருத்தங் கள் தொட்டிட்டுது. பிறகும் ஊருக்குள்ள பிறத்தி இடங்களில இருந்து கூட சம்பந்தம் கேட்டது தான். சில இடங்கள் அண்ணர் விரும்பேல்ல அண்ணர் விரும்பிப்போன இடங்கள் எங்களிட்டச் செய்ய விரும்பேல்ல.

இப்பிடியே நாயகிக்கும் முப்பத்துநாலு வயசாச்சுது.

அண்ணருக்கும் மச்சாளுக்கும் பெரிய மனவேதனை.

கையில காசு சொத்து வசதிஇருந்தும் ஒரு நல்ல இடம் மகளுக்கு அமையுதில்லையே எண்டகவலை.

மச்சாளுக்கும் பிறஷர் கூடி ஒருநாள் கோயிலால வரக்குள்ள விழுந்தவதான் அப்பிடியே பாரிசவாதம் கண்டு படுக்கை யோடகிடக்க வேண்டியதாப்போச்சு. மச்சாள் படுக்கையில போய் ரெண்டு மாசத்துக்குள்ள அண்ணர் திடீரெண்டு ஹார்ட் அட்டாக்கில மோசம் போயிற்றார். அதோட எல்லாம் இருண்டு போச்சடி பிள்ளை. அதுக்குப் பிறகு ராசநாயகி பழையமாதிரி இல்லை. ஆரும் கதைக்க ஏலாது. ஒண்டும் சொல்ல ஏலாது. எதுக்கும் வள்ளெண்டு விழத் துவங்கீற்றாள்.

காசுத் தடிப்பில அப்பிடி நடக்கிறாள் எண்டு ராசநாயகியைக் குறை சொல்லத் துவங்கீற்றுது ஊர்.

"ஓம் நான் அப்பிடித்தான் இருப்பன் எனக்கு உவையள் ஒருத்தரும் தேவையில்ல"

ஒதுக்கிப்போட்டாள் அதோட இனசனமும் இவையளைத் தேடி வாறதை விட்டிட்டுது.

அண்ணையின்ர குடும்பமெண்டு நான் மட்டும் தான் வந்து போய்க் கொண்டு இருக்கிறன். பிறகு பிறகு பேசின கலியாணங்கள நாயகியே வேணா மெண்டிட்டாள். தனக்கு இனிக் கலியாணமே வேண்டாம் எண்டு இப்ப பிடிவாதமா இருக்கிறாள்" என்று சொல்லி முடித்தாள் அன்னம்மாமி.

நாயகியின் கதையைக் கேட்டுக்கனத்துப் போன மனசோடு எழுந்து கொண்டாள் தமயந்தி.

**(மழை தொடரும்.)**


ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி - 60/= ஆண்டுச்சந்தா - 1000/= வெளிநாடு - $ 35U.S

மணியோடரை அல்வாய் தபால் நிலையத்தில் மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும். அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி

**K .Bharaneetharan, Kalaiaham ,Alvai North west, Alvai.**

வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்

K.Bharaneetharan

COMMERCIAL - Nelliady Branch - A/CNo.8108021808

CCEYLKLY




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட கதிர்காமநாதன்

**ச.முருகானந்தன்**

1942ல் பிறந்து பள்ளிப்பருவத்திலேயே எதிர்காலத்தில் ஓர் இலக்கியவாதியாகப் பிரகாசிக்கப் போகிறார் என்று இனம் காணப்பட்டு பல்கலைக்கழக நாட்களில் பத்திரிகையில் களம் கண்டு, வெகு விரைவிலேயே ஒரு தலைசிறந்த சிறுகதை எழுத்தாளனாக தன்னை நிலைநிறுத்திக் கொண்ட செ.கதிர்காமநாதன் 1972ல் தனது முப்பதாவது வயதில் காலனடி சேர்ந்தமை ஈழத்து இலக்கிய உலகுக்குப் பேரிழப்பாகும். அவரை விட ஒரு தசாப்தத்தின் பின்னர் பிறந்த நான், எனது சிறுவயதிலிருந்தே அவரை மைத்துனர் என்ற ரீதியில் தெரிந்து வைத்திருந்தேன் எனினும் ஒரு இலக்கியவாதியின் ரசிகன், விமர்சகன் என்ற வகையில் அவரோடு பழகியதென்னவோ இறுதி இரண்டு மூன்று வருடங்கள் தான் எனலாம்.

ஈழத்தின் தலைசிறந்த சிறுகதை எழுத்தாளர்களில் ஒருவர். சிறந்த சிந்தனைச் சிற்பி, செயல்வீரர், நிர்வாக சேவை அதிகாரி எழுதுவது போலவே வாழ்ந்து காட்டிய உத்தமன் என்றெல்லாம் வெளியுலகுக்கு அறிமுகமாக முன்பே பாடசாலையில் எனது வழிகாட்டியாக இருந்த செ.க.உயர்வகுப்பில் படித்துக் கொண்டிருந்த அதே விக்கினேஸ்வராக் கல்லூரியில் கீழ்வகுப்பு மாணவர்களாக நானும், 'தாரகை' ஆசிரியர் கண.மகேஸ்வரனும் ஒன்றாகப் படித்துக் கொண்டிருந்த நாட்களிலேயே, உயர்வகுப்பு மாணவர்கள் வெளியிட்ட 'கலையொளி' சஞ்சிகையில் கதிர்காமநாதனின் கதையைச் சுவைத்துப் படித்தது இப்பொழுதும் பசுமையாக ஞாபகத்திலிருக்கிறது. அதே காலகட்டத்தில் எமது கிராம சனசமூக நிலைய வெளியீடான 'சந்திரோதயம்' கையெழுத்துப் பத்திரிகைக்கும் ஆசிரியராக செ.க.பணியாற்றினார். அவர் தந்த உற்சாகத்திலும், தூண்டுதலிலும் எனது பத்தாவது வயதிலேயே 'பேய்கள்' என்ற சிறகதையை எழுதினேன். பிற்காலத்தில் நானும் ஒரு எழுத்தாளன் ஆனதற்கு அன்று அவர் தந்த உற்சாகமும் ஒரு காரணம் எனலாம்.

உண்மையிலேயே கதிர்காமநாதனின் மறைவுக்குப் பின்னர் தான் அவரை முழுமையாக என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. இதற்கு எனது வயதும் ஒரு காரணம் எனலாம். சிறுபராயத்தில் வாசித்த அவரது கதைகளை மறுபடியும் வளர்ந்த பின் வாசித்தபோது தான் அவரை முழுமையாக இனம்காண முடிந்தது.

1959ல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளங்கதிர்' ஆசிரியராக இருந்த காலத்தில் தான் அவர் பத்திரிகை உலகிலும் அடி எடுத்து வைத்தார். அவரது முதற் படைப்பான 'எல்லாம் உனக்காக' என்ற சிறுகதை 'கலைச்செல்வி'யிலே வெளிவந்த போது ஈழத்துச் சோமு அவர்கள், 'விளையும் பயிரின் வீறு, மூளையில் தெரிகிறது. இன்னும் சிலகாலத்துள் இவர் ஒரு முன்னணி எழுத்தாளராகத் திகழப் போகிறார்'. என்று குறிப்பிட்டது போலவே அறுபதுகளில் அவர் தாரகையாகப் பிரகாசித்தார். அந்தத் தசாப்தத்தில் அவரது பலசிறுகதைகள் பல்வேறு பத்திரிகை சஞ்சிகைகளில் வெளியானது. அவரது அறிவு வீச்சு, வர்க்கப் பார்வை, மேதைத்துவம் அனைத்தும் ஈழத்துத் தமிழ்ச்சிறுகதை வரலாற்றில் ஏற்படுத்தி உள்ள தாக்கத்தை இன்று பலரும் ஒப்புக் கொள்ளுகின்றனர்.

செ.க.மக்களை குறிப்பாக பலதுறைகளிலும் ஒடுக்கப்பட்ட மக்களை வெகுவாக நேசித்தவர். மக்கள் வாழ்வின் பிரச்சினைகள் யாவும் தமது சிறுகதைகளில் எதிரொலிக்கவேண்டும் என்ற நோக்குடன் வறிய மக்களின் பக்கம் சார்ந்து நின்று எழுதியவர். மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியும், உண்மைச் சுதந்திரமும் மேலோங்கிட வேண்டும் என்று அதற்காகப் பாடுபட்ட முற்போக்கணியில் ஒருவனாகி பல போராட்டங்களிலும் பங்கு பற்றியமை மூன்று சகோதரிகளுடன் பிறந்தும் கூட ஒரு சதமேனும் சீதனம் வாங்காமல் கலப்புத் திருமணம் செய்து கொண்டமை இவரது இலக்கிய நேர்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைப்பட்டதாரியான செ.கதிர்காமநாதன் சிலகாலம் வேலையின்றித் தவித்தார். அக்கால கட்டத்தில் தனியார் கல்வி நிலையங்களில் படிப்பித்துக் கொண்டிருந்த போது வீரகேசரி உதவியாசிரியர் பதவி கிட்டியது. இந்தக் காலகட்டம் அவரது எழுத்துலக வாழ்க்கையில் மிகவும் முக்கியமானது. இக்கால கட்டத்தில் தனக்கென ஒரு திட்டமான குறிக்கோளை வகுத்துக் கொண்டு எழுதினார். சமூகத்தில் புரையோடிக்கிடந்த மூடப்பழக்க வழக்கங்களை, சமூக பொருளாதார, வர்க்க பேத ஊழல்களைப் புட்டுக்காட்டி எழுதினார். இக்காலகட்டத்தில் அவர் எழுதிய சிறுகதைகளும் 'கோடை நதி' என்ற தொடர் நாவலும் அவருக்குப் புகழ்சேர்த்தன. கதிர்காமநாதனின் மூன்று புத்தகங்களில் முதல் வெளியீடான 'கொட்டும் பனி' சிறுகதைத் தொகுதி, இவரது இருபத்தி யேழாவது வயதிலேயே இவருக்குச் சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றுக் கொடுத்தது. அடுத்த வெளியீடு செ.யோகநாதன், நீர்வை பொன்னையன் ஆகியோரோடு இணைந்து வெளியிட்ட 'மூவர் கதைகள்' பொருளாதார ரீதியில் கையைக் கடித்தாலும், புகழ்தேடித்தந்த பிரசுரம் இது. இறுதியாக வந்தது 'நான் சாகமாட்டேன்' என்ற மொழிபெயர்ப்பு நவீனம் வெளிவர ஒரு மாதம் முன்னரே இவர் மரணித்து விட்டார்! இந்த உலகின் மிகக் கொடுமையான நிகழ்வு ஒரு கலைஞன் அற்ப ஆயுளில் காலனடி சேர்தல் தான்!

பிறமொழிக் கதைகளைத் தமிழில் பெயர்த்தெழுதுவதில் வல்லவரான செ.க. மதிப்புரை கள், கட்டுரைகள் எழுதுவதிலும் சமர்த்தர். காலத்தால் அழியாத இவரது படைப்பான 'ஒரு கிராமத்துப் பையன் பள்ளிக்கூடம் போகிறான்' என்ற சிறுகதை உலக நாட்டுச் சிறுகதைகள் வரிசையில் யுனெஸ்கோ வெளியிட்ட தொகுப்பில் இடம்பெற்றதோடு ருஷ்ய மொழி உட்பட ஆறு மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. இவரது கடைசிச் சிறுகதையான வியட்னாம் உனது தேவதைகளின் தேவவாக்கு' சிறுகதை சர்வதேச பிரச்சினையை அணுகிய முதற் தமிழ் சிறுகதை என்று போற்றப்படுகிறது. அறுபது களில் ஈழத்தின் வடபிரதேசத்தில் நிலப்பிரபுத்து வத்தின் சாபக்கேடான சாதி அமைப்புக்கெதிரான போராட்ட இயக்கம் கலை இலக்கிய சிருஷ்டிகளில் பெரும்பாதிப்பை ஏற்படுத்திய காலகட்டத்தில் இவரது ஒரே குடிசையைச் சேர்ந்தவர்கள்', 'அதனாலென்ன', 'பெருமூச்சுத்தானே!' போன்ற சிறுகதைகள் பெரும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தின. அவசியமான நேரத்தில் அதீத கற்பனையின்றி இவர் எழுதிய கதைகள் இன்றும் அவரை மக்கள் மனதில் வாழவைத்துக் கொண்டிருக்கிறது. இவரது 'தாய் மொழி மூலம்' சிறுகதை ஆங்கில மோகம் கொண்டவர்களுக்குச் சாட்டை அடி! 'வெறும் சோற்றுக்கே வந்தது' மலையக மக்களின் துயரக் கதை! இப்படி இவரது ஒவ்வொரு கதைகளும் முத்தானவை!

இவரது கதைகளின் சிறப்புப் பண்பு, தனிமனிதனை அடிப்படையாகக் கொண்ட சமுதாயப் பண்பாகும். இவரது பாத்திரங்களான ஏழை விவசாயி, பஞ்சப்பட்ட வேலைக்காரச் சிறுமி, வறிய மாணவன், தமிழ் வாத்தியார், திலகம் ஆச்சி எல்லோரும் எம்மிடையே நடமாடும் பாத்திரங்கள், மத மயக்கமூட்டும் கற்பனைப் பாத்திரங்கள் அல்ல. தன்னோடு வாழ்ந்த மக்களையும், காலத்தையும், தனது சுற்றாடலையும் அவரது கதைகள் தாங்கி நிற்கின்றன. பேச்சு மொழியில் எழுதி மக்கள் மனதில் பட்டென்று பதிய வைத்தமை இன்னொரு சிறப்பம்சம். இவரது கதைகள் அந்தக்காலகட்டத்தில் ஜனரஞ்சகம் இல்லாமல் போனதற்கும், பண்டிதர்களினதும் மேல் வர்க்க முதலைகளின் கண்டனங்களுக்கு உள்ளானதற்கும் இவையே காரணமாகும். கதையை ஆரம்பிக்கும் போதே இவரது வசன அமைப்பு எம்மை ஒன்ற வைத்து விடுகிறது. "இதயத்தில் எழுந்த அவசரத்திலும் படபடப்பிலும் தன்னையிழந்த, ஆடைகள் வியர்த்து ஒழுகி நனையத் தட்டுத்தடுமாறி, வயல் வரப்புகளூடாக விரைந்து கொண்டிருந்த சின்னையா இன்னும் பாதி வழியைத் தாண்டியிருக்கமாட்டான். அதற்கிடையில் கல்லூரி மணி கம்பீர ஓசையுடன் காற்றிற் கலப்பது அவன் காதில் மோதுகிறது" என்று ஆரம்பிக்கிறது ஒரு சிறுகதை நாமும் ஒன்றி விடுகிறோம்.

ஈழத்துச் சிறுகதைத்துறை வளர்ச்சியை ஆராயப் புறப்படும் பல்கலைக்கழக உயர் வகுப்பு மாணவர்கள், அறுபதுகளின் மாற்றத்தை அலசுகின்ற போது செ.கதிர்காமநாதனின் பங்களிப்பை ஒதுக்கி விட முடியாது. அந்தக்காலகட்ட எழுத்தாளர்கள் அமைத்துத் தந்த சரியான பாதையில் நின்று தான் இன்றைய எழுத்தாளர்களான நாமும் கதை படைக்கிறோம். எமது ஈழத்து இளைய தலை முறையினர் இவர்களது பாதையில் சென்றால் சிறுகதை இலக்கியம் இன்னமும் சிறப்புறும் என்பதில் இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது.□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணிலாக் குணமுடையோர் - 12

## யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

"என்ன பதுங்கிறனோ? புலி பதுங்கிறது பாய்ச்சலுக்கடையாளமெண்டு சொல்லுறவை. தெரியாதே.

பாரடா இப்ப எறியிற எறியிலை அந்த நாய்ப்பிள்ளையற்றை கால் எப்பிடிப் போகுதெண்டு.

பாத்தியா காலாலை இரத்தஞ்சொட்டச் சொட்ட ஊளையிட்டுக்கொண்டு ஓடுறதை. எறிஞ்சனெண்டால் என்ரை எறி எறிதான்.

பாவமோ? அதென்னடா பாவமெண்டால்...? நான் அடி வாங்கேக்கை நீர் பாவம் பாப்பீரோ?

அங்கை பார் குமணன் வாறான் என்னைக் கண்டாலே ஆள் தலைதெறிக்க ஓடுவன். நான் மறைவாய் நிற்கிறன். நீ பேசாமல் நில்.

வேறாய், குமணன், எங்கையடா போறாய்? இங்கை வா வாவெண்டால் உடனை வரவேணும். என்ன பதுங்கிறீர்? வாடா இங்கையெண்டால்... அ...அ... அப்பிடி வாடா. உன்ரை புத்தக பாக்கிக்கை என்ன இருக்கெண்டு பார்ப்பம் அட நல்ல படம்போட்ட கொப்பியளாய்க் கிடக்கு அம்மா வாங்கித் தந்ததோ?

இல்லையோ? என்ன தலையைத் தலையை ஆட்டுறாய், உனக்கெங்கையடா அம்மா. நீதானே அம்மாவைச் சாகக்கொண்டனியாம். என்னடா தறத்தறவெண்டு முழுசிக்கொண்டு தலையை ஆட்டுறாய், வாய் பேசாதே? நீ ஊமையே?நீ பிறக்க அம்மா செத்திட்டாவெல்லே? அப்ப நீதானே அவவைச் சாகக்கொண்டனி. டேய் தாயைத் தின்னி. தாயைத் தின்னி சொல்லடா. நான் ஒரு தாயைத்தின்னி, பத்துத்தரம் சொல்லடா.

டேய் சொல்லாட்டா என்ன நடக்குமெண்டு தெரியுமெல்லே? கெதியாய்ச் சொல்லு. என்ன முணுமுணுக்கிறாய்? ஒண்டும் கேட்கேல்லை. பலத்துச் சொல்லு இப்பவும் எனக்குக் கேட்கேல்லை. அ... இப்ப தான் நீ சொல்லுறது எனக்குக் கேட்குது. இப்பிடிப் பத்துத்தரம் சொல்லு.

இதென்ன தொண்ணூற்றெட்டு மாக்ஸ் வாங்கியிருக்கிறாய்? நூறு வாங்கேலாதே? பிறகேனடா உனக்கு வடிவான கொப்பி, கிழிச்செறிஞ்சு போட்டடன். டேய் ஏனடா கிழிச்ச கொப்பியை எடுக்கப் போறாய்? அதைத் தொடாதை. போய் அப்பாவிட்டைச் சொல்லிப் புதுக்கொப்பி வாங்கு என்ன?

இஞ்சை கிட்ட வாடா, கிட்டவாடா ஏனடா பயப்பிடுகிறாய்? வாடா கிட்ட, சொன்னால் வா, அ... அப்பிடிவா. நான் சொன்னனானெல்லே வெள்ளை சேட் போடக்கூடாதெண்டு அண்டைக்கு மண்டி ஒயில் தெளிச்சுவிட்டனானெல்லே. அப்பிடியே போடவேணு மெண்டெல்லே சொன்னனான். பொறு உன்ரை சேட்டுக்குச் செய்யிறன் வேலை.

குமணனின் சட்டை முழுவதும் சேற்றுநீரை அள்ளித்தெளிக்கிறான் இராகவன்.

அழுதுகொண்டு போகும் குமணனை இரசிப்பவன் போலப் பார்த்துக்கொண்டு நிற்கிறான் அவன்.

நெடிய உருவம். கருமை நிறமென்றாலும் அழகான முக அமைப்பு. ஆனாலும் எங்கோ எதிலோ ஒரு விகாரம். முகம் முழுவதுமா? இல்லை. அந்தக் கண்களிலேதான் ஒரு வக்கிரம். அதில்லாமல் அந்தக்கண்களிலே அன்பு ததும்பியிருக்குமானால் அந்த முக அழகே அலாதியாக இருந்திருக்கும். முன்னே அலட்சியமாக விழுந்துகிடந்த தலைமுடியும் ஒரு காவாலித்தனத்தைக் காட்டியது. அதை அடிக்கடி புறங்கையால் ஒதுக்குவது தனது தனித்துவ அடையாளம் என்பது போல் அவனுக்கு ஓர் எண்ணம், கைகால்கள் தசைப்பிடிப்பற்ற எலும்பு களாகத் தோற்றமளித்தன. கறுப்பு நூலில் ஒரு தாயத்தைக் கோர்த்துக் கழுத்திலே கட்டியிருந்தான்.

"டோய், ரவி வாறான்டா" இராகவன் போருக்குத் தயாரானவன் போல் நிற்க, அவனை ஏறஇறங்கப் பார்த்த ரவி,

"என்னோடை தனுகுவீரோ? வாரும் பார்ப்பம். இன்டைக்கு உம்முடைய கால் முறிச்சுத் தான் அனுப்புறது" என உறுமினான்

"என்னா காலை முறிக்கப் போறீரோ? வாரும் பார்ப்பம் ஏலுமெண்டால் வாரும் பார்ப்பம், எப்படி என்ரை கராட்டி அடி?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டுக்கொண்டே இராகவன் அடித்த அடி பட்டதும் சிலிர்த்துக் கொண்டு பாய்ந்தான் ரவி.

"டேய் விடடா. தலைமயிரை விடடா விடாட்டி நடக்கிறது வேறை"

"என்னடா செய்வாய்?"

"உன்ரை கால் முறிப்பன். டேய் விடடா காலை. ஐயோ விடடா"

"சொறிநாய்க் குட்டி மாதிரிக் கத்துறார். வாயொண்டு தானிருக்கு. எல்லாம் வாய் வீரந்தான். ரவியிட்டை உது பலிக்காதடா."

"டேய் எந்தக் கொம்பனுக்கும் நான் மசிய மாட்டனடா நான் இப்ப போறது உனக்குப் பயந் தெண்டு நினைக்காதையடா. ஒரு நாளைக்கு உம்மை ஒருகை பார்ப்பன். சொல்லிப் போட்டன். ஓ..."

"சொல்லுறதை இங்கை நிண்டு சொல்ல வேணும். ஓடிப்போறார். ஓடியோடி அவற்றை கதையைப்பார்."

"எமகிங்கரன் மாதிரிக் காலை நெரிச்சு விட்டிட்டான். இனி வீட்டை போனால் பெரியம்மா "படி படி எண்டு சொல்லுவ எனக்குப் படிப்பெண்டால் சென்மத்துப் பகை, ஆனால் அவ மட்டுந்தான் படிக்கச் சொல்லுறது. வீட்டிலை மற்றவையெல்லாம் வேலை தான் சொல்லிச் செய்விப்பினம். அப்பா அம்மா இல்லாத அநாதைதானே என்னவுஞ் செய்யலா மெண்ட யோசனை, என்னத்தைச் செய்தாலும் எவ்வளவைச் செய்தாலும் பிழை பிடிப்பினம் குட்டுவினம். அடிப்பினம், எனக்குக் கோவந்தான் வரும்.

இவைக்கு நல்ல வேலை காட்டவேணு மெண்டு யோசிக்கிறனான். இருந்து பாருங்கோ இவையளுக்கெல்லாம் நல்லாய்ப் படிப்பிக்கப்போறன். நெடுக நான் சின்னப்பிள்ளையே? சொல்லுங்கோ பார்ப்பம்.□□□

---

**கவிதை அல்ல**

# சிறகு

## மனிதர்கள் போல்வர்

*புத்தியை
முதன்மையாகக் கொண்ட
பார்வை
விஞ்ஞானமாகிறது.
யதார்த்தமாகிறது.*

*பேர் உண்மையை
உன்னதத்தை
தர்மத்தை
இலட்சியமாக்குவது
ஆத்மீகம்.*

*நம்பிக்கையைத்
தொடக்கமாகக் கொண்டு
பேரனுபவத்தில்
முழுமை பெறுவது.*

*புத்தியும்
ஆத்மீகமும்
கலவாத மனிதன்
மிருகமாகவே இருப்பான்.*



*புராண அசுரர்கள்
கற்பனை.
நவீன அசுரர்கள்
நிஜம்.*

*உன்னத
இலட்சிய
உடை அணிந்து
உயிர் உறுஞ்சும்
இரட்சகர்கள்.*

*யமனைப்
பச்சடி போட்டு
மாயத் தோற்றங்களை
எடுக்க
வல்லவர்கள்.*

*இன்றைய
காவியக்
கதாநாயகர்கள்.*

**இ.ஜீவகாருண்யன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசியுங்கள் வாசிக்கச்செய்யும்

யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

புலோலியூர் ஆ.இரத்தினவேலோன், இலக்கியத்தில் அவருக்குள்ள பன்முக ஆற்றல் காரணமாக இலக்கிய ஆர்வலர்களுக்கு நன்கு அறிமுக மானவர். அண்மைக் காலத்தில் வெளிவந்த நூல்களை ஆய்வு செய்து, அவர் தினக்குரலில் எழுதிவரும் 'அண்மைக்கால அறுவடைகள்' பகுதி நாமனைவரும் இரசித்துவரும் ஒன்று.

'ஈழத்துச் சிறுகதை இலக்கியத்தின் செல்நெறியினைப் புலப்படுத்த அல்லது புதிய நெறிகளுக்கு வித்திடும் நோக்கில் தொண்ணூறுகளின் பிற்கூற்றில் என்னால் மேற்கொள்ளப்பட்ட திறனாய்வு சார்ந்த பத்தி எழுத்துக்கள்" என இரத்தின வேலோன் அவர்களே தன் எழுத்துக்கான மூலகாரணத்தைத் தெரிவித்துள்ளார்.

அவர் எழுதிய பத்தி எழுத்துக்கள் 'புதிய சுகத்திரப் புலர்வின் முன் ஈழச்சிறுகதைகள்', 'அண்மைக்கால அறுவடைகள்' என்னும் இரு தொகுதிகளாக ஏற்கனவே வெளிவந்துள்ளன. 2006முதல் 2009வரை தினக்குரலில் வெளிவந்த இருபது பத்தி எழுத்துகளைத் தொகுத்துத் தற்போது 'அண்மைக்கால அறுவடைகள் தொகுதி - 2' எனும் நூலாக எமது கைகளிலே தந்துள்ளார் திரு.இரத்தினவேலோன்.

இதில் தெணியான், தாட்சாயணி, ஆனந்த மயில், ஏ.எஸ்.உபைதுல்லா, நெலோமி, கமலினி சிவநாதன், சிவனுமனோகரன், தமிழ்ப்பிரியா, வதிரி இ.இராஜேஸ் கண்ணன், யோகேஸ்வரி சிவப்பிரகாசம், திக்குவலை ஸப்வான், பவானிசிவகுமாரன், புலோலியூர், க.குகநாயகி, ஆனந்தி, பிரமிளா செல்வராஜா, த.கலாமணி ஆகிய எழுத்தாளர்களின் அண்மைக்கால வெளியீடுகளான சிறுகதைத் தொகுதிகளையும் பல எழுத்தாளர்களின் கதை களை ஒருங்கே தொகுத்த, 'பூபாள ராகங்கள்' சிறுகதைத் தொகுதி 2007, 'கருமுகில் தாண்டும் நிலவு', 'பசியடங்கா இருளிலிருந்து ஒன்பது கதைகள்', 'கனகசெந்தி கதாவிருது பெற்ற சிறுகதைகள்' ஆகிய நூல்களையும் இவர் ஆய்வு செய்துள்ளார்.

நூலை ஆய்வு செய்ய முற்படுவோர் பொதுவாக அதன் உள்ளடக்கத்தை ஆய்வு செய்வதே வழமை. ஆனால் இரத்தினவேலோன் அவர்கள் நூலுடனோ ஆசிரியருடனோ தொடர்புபட்ட வேறு விடயங்கள் குறித்தும், சிறுகதை இலக்கியம் பற்றியும் என பல்வேறு இலக்கியச் சங்கதிகளையும் தான் எழுத எடுத்துக் கொண்ட விடயத்துடன் தொடர்புபடுத்திக் கூறுவதால் வாசகனின் தேடலுக்கு நல்லதொரு விருந்தாக அவரது எழுத்து அமைந்து விடுகிறது. அவரது நோக்கத்தை ஈடேற்றவும் அது பயன்படுகிறது.

ஒவ்வொரு கட்டுரையிலும் வெவ்வேறு விடயங் களைத் தொட்டுச் செல்கிறார். தெணியானின் 'இன்னொரு புதிய கோணம்' பற்றி எழுதுகையில் ஈழத்துச் சிறுகதை களின் ஆரம்ப காலத்தைப் பற்றிச் சில விடயங்களை எழுதியவர், தாட்சாயணியின் 'இளவேனில் மீண்டும் வரும்' பற்றி எழுதும் போது ஈழத்துச் சிறுகதைத்துறையின் ஏழாந்தலைமுறை யின் வருகை பற்றிக் கூறுகின்றார்.

வேறு சில கட்டுரைகளில் சிறுகதைகளின் அமைப்பு, சிறந்த சிறுகதைக்கான அம்சங்கள் பற்றி அளவோடு அலசுகிறார். 'பசியடங்கா இருளிலிருந்து ஒன்பது கதைகள்' பற்றி ஆய்வு செய்யுமுன், பல்கலைக் கழகங் களில் ஒளிரவாரம்பித்த எழுத்தாளர்கள், பல்கலைக்கழக மாணவர்களால் எழுதப்பட்ட சிறுகதைகளைத் தொகுத்து வெளி வந்த 'கதைப் பூங்கா' 'மண்ணின் மலர்கள்' ஆகிய நூல்கள் பற்றிக் குறிப்பிட்டுவிட்டு பல்கலைக்கழக மாணவர் களால் எழுதப்பட்ட அந்தச் சிறுகதைத் தொகுப்பைப் பற்றி எழுதுகிறார். நான் அறிந்தவரை 'யுகம்' என்றொரு தொகுப்பும் இவ்வாறு வெளிவந்ததாகும்.

இவ்வாறே நூலாசியரின் வேறு நூல்கள், வேறு குறிப்பிடத்தக்க ஆக்கங்கள், நூலாசிரியருடன் சமகாலத்தில் எழுதியோர், அவரது ஊரின் இலக்கியப்பாரம்பரியம் எனப் பலவிடயங்களைச் சுவைபடத்தந்திருக்கின்றார்.

நூலை ஆய்வு செய்யும் போது மனதிற்கு வந்த வற்றைக் கூறியுள்ளதுடன் மனதிற்கு வந்தவற்றையும் மறையாது எழுதியிருக்கிறார்.

மனம் சிலாகித்த சிறுகதைகளை வாசகர்கள் சுவைப்பதற்காக இடையிடையே சேர்த்து விட்டிருக்கிறார். இவ்வாறு அவர் எடுத்தெழுதியவற்றையும் கதையின் உச்சங்களை அவர் சுட்டிச் செல்வதையும் வாசிப்போர் அக்கதை இடம் பிடித்துள்ள நூலைத் தேடித்தேடி வாசிக்கத் தூண்டிவிடப்படுகிறார்கள். எடுத்துக் கொண்ட நூலை முழுமையாக பல்வேறு கோணங்களில் ஆய்வு செய்திருக்கிறார். அவரது கட்டுரை மதிப்புரையாகவும் மதியுரையாகவும் அமைந்துவிடுவதைக் காண்கிறோம். சிறப்பைக் கூறுவது சுலபம். அதை அனைவரும் மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளவர் ஆய்வென்று வந்து விட்டால் அல்லதையும் கூறத்தானே வேண்டும்.

கூறவேண்டிய குறையைக் குறையின்றிக் கூறும் திறனும் அவருக்குக் கைவரப் பெற்றுள்ளது. அவரது எழுத்தினை அப்படியே தருகிறேன். பாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மேற்படி சிறுகதையானது பெண்கோபத்தின் வெளிப்பாடாகத் திகழ்ந்து இன்னொரு பவானி ஆழ்வாப்பிள்ளையை எமக்கு இனங்காட்டப் போகின்றது என்ற எதிர்பார்ப்பு முடிவில் ஏமாற்றமாக அமைந்துவிடுகிறது.'

'என்ற இருவரிகள் இக்கதையின் இறுதியில் தவிர்க்கப்பட்டிருந்தால் இத்தொகுதியில் பேசப்படும் கதைகளுள் ஒன்றாக இதுவும் பட்டியலிடப் பட்டிருக்கும்.'

இப்படிப்பல இடங்களில் எழுதியிருக்கின்றார். பேசப்படும் கதைகளின் உன்னதங்களைச் சுட்டிய பின் அவ்வாறு பட்டியலிடமுடியாது போன கதைகள் சோடை போனதற்கான காரணங்களைக் கண்டறிந்து, அவற்றைக் கூறக் கையாளும் உத்தியே இது. இதன் மூலம் வாசகருக்கும் நூலாசிரியருக்கும் பல விடயங்களை நாசூக்காகக் கூறிவிடுகிறார்.

மொத்தத்தில் அவர் கொண்ட நோக்கத்தில் வெற்றி பெற்றிருக்கிறார் என்பதை நூலினை வாசித்து முடிந்ததும் மனம் உறுதி செய்கிறது.

'அண்மைக்கால அறுவடைகள் தொகுதி - 2' ஐ அவசியம் வாசியுங்கள். அதில் ஆய்வு செய்யப்பட்ட நூல்களை வாசிப்பதற்காக.□□□

---

# கலை இலக்கிய நிகழ்வுகள்

1) **அவை (Forum)** கலை இலக்கிய வட்டத்தின் 27ஆவது ஒன்றுகூடல் அதன் அமைப்பாளர் கலாநிதி. த.கலாமணியின் இல்லமான கலை அகத்தில் 2010.06.06 அன்று நடைபெற்றது. இந்நிகழ்விற்கு நாடறிந்த எழுத்தாளர் தெணியான் தலைமை வகித்தார். இந்நிகழ்வில் கலாநிதி தி.வேல்நம்பி (வர்த்தகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம், விரிவுரையாளர்) அவர்கள் 'திருக்குறளில் நிர்வாக நடைமுறைகள்' என்னும் தலைப்பில் உரையாற்றினார். கலந்துரையாடலின் போது சி.வன்னியகுலம், பொன் ஸ்ரீபவன் ஆகியோர் கருத்துரைகளை தெரிவித்தனர். நிகழ்வின் இரண்டாவது அம்சமாக, **'நதியில் விளையாடி...' (ஜீவநதியில் வெளியான 60 கவிஞர்களின் கவிதைத் தொகுப்பு) நூல் வெளியீட்டு விழா** நடைபெற்றது. இந்நிகழ்வில் வெளியீட்டுரையையும் கருத்துரையையும், இ.இராஜேஷ்கண்ணன் (விரிவுரையாளர், சமூகவியற்துறை யாழ். பல்கலைக்கழகம்) அவர்கள் நிகழ்த்தினார். ஏற்புரையை ஜீவநதி ஆசிரியரும், நூலின் தொகுப்பாசிரியரும் ஆன க.பரணீதரன் நிகழ்த்தினார்.

2) **வெ.துஷ்யந்தனின் 'வெறிச்சோடும் மனங்கள்...' (கவிதைத்தொகுதி) வெளியீட்டு விழா** 2010.06.25 அன்று யா/தேவரையாளி இந்துக்கல்லூரி மண்டபத்தில் நாடறிந்த எழுத்தாளர் தெணியான் தலைமையில் நடைபெற்றது. வரவேற்புரையை ஆசிரியர் சி.பத்மராஜன் நிகழ்த்தினார். வெளியீட்டுரையை கலாநிதி த.கலாமணி (விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்) அவர்களும், நூல்பற்றிய மதிப்பீட்டுரையை இ.இராஜேஷ்கண்ணன் (விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்) அவர்களும், ஆசிரியர் க.தர்த்தேவன் அவர்களும் நிகழ்த்தினார்கள். ஏற்புரையை நூலாசிரியர் வெ.துஷ்யந்தன் வழங்கினார். இந்நூல் ஜீவநதி வெளியீடு செய்யும் 4ஆவது நூல் என்பது குறிப்பிடத்தக்கது.

3) **மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் 'போலி முகங்கள்' நூல் வெளியீட்டு விழா** கடந்த 12.06.2010 சனிக்கிழமை அன்று மன்னாரைச் சேர்ந்த திரு. வி. எஸ். சிவகரனின் 'போலி முகங்கள்' என்ற நூல் வெளியீட்டு விழா மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது. மன்னார் தமிழ்ச்சங்கத் தலைவர் அருட்திரு தமிழ் நேசன் அடிகளார் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவின் முதன்மை விருந்தினராக மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை கலந்துகொண்டார். திருக்கேதீஸ்வரம் சிவன் அருள் இல்லப் பணிப்பாளர் திரு. வே. பொ. மாணிக்கவாசகர் அவர்கள் அனைவரையும் வரவேற்று தொடக்கவுரை நிகழ்த்தினார். மடு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுகந்தி செபஸ்டியன் அவர்கள் அறிமுகவுரை நிகழ்த்தினார். மன்/ கள்ளயடி அ. த. க. பாடசாலை அதிபர் திரு ஆ. மா. பஞ்சலிங்கம் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். நூல் மதிப்பீட்டுரையை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூத்த ஊடகவியலாளரும் இராதையன் என்று அறியப்படுபவருமாகிய திரு. ச. யோகரத்தினம் அவர்கள் வழங்கினார். நூலின் முதற்பிரதியை சேவா லங்கா நிறுவனத்தின் வடமாகாணப் பணிப்பாளர் திரு. தமிழமுகன் பெற்றுக்கொண்டார். மன்னார் கலாப்பனா நாட்டியக் கல்லூரி மாணவர்களினால் நடன நிகழ்வு இடம்பெற்றது. நூலாசிரியர் ஏற்புரை நிகழ்த்தினார். மன்னார் தமிழ்ச் சங்கத்தின் உபதலைவர் ஜனாப் மக்கள் காதர் அவர்கள் நன்றியுரை நிகழ்த்தினார். மன்னார் தமிழ்ச் சங்கத்தின் பொதுச் செயலாளரும் சமூக ஆர்வலரும் நல்ல பேச்சாளருமாகிய திரு. வி. எஸ். சிவகரனின் 'போலி முகங்கள்' என்ற இந்த நூல் ஒரு சமூக விமர்சன நூலாக எழுதப்பட்டுள்ளது. இந்நூலின் விற்பனைப் பணம் யுத்தத்தின் கோரத்தால் உறவுகளை இழந்து ஆதரவற்றுத் தவிக்கும் மாணவர்களுக்கு வழங்கப்படும் எனக் கூறப்பட்டது. மன்னார் தமிழ்ச் சங்கம் ஏற்படுத்தப்பட்டு எட்டு மாதங்களே ஆகிய நிலையில் இதுவரை மூன்று நூல் வெளியீட்டு விழாக்களையும் ஒரு கலை இலக்கிய விழாவையும் இச்சங்கம் நடாத்தியுள்ளது என மன்னார் தமிழ்ச் சங்கத் தலைவர் தமிழ் நேசன் அடிகளார் குறிப்பிட்டார். மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் பெரிய அளவிலான ஒரு முத்தமிழ் விழாவை நடாத்த இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இச் சஞ்சிகை கலையகம் வெளியீட்டு உரிமையாளர் [illegible] சதாபொன்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org